

படைப்பு

ஊற்று-3 | நதி-12 | ஏப்ரல்-2021 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

## "என்னை வாழவைப்பதே தமிழ்ச் சிறுகதைகள்தாம்.."

- எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுடனான நேர்காணல்



- நூறாண்டு கண்ட செப்பறை நாயகர்

- தங்கத்துரையரசி



- பசி நடனம்

- ரோஷான் ஏ.ஜிப்ரி



- அரசியல் அறிவோம்

- கா. இரெத்தினபிரகா

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-3 | நதி-12 | ஏப்ரல் 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **“என்னை வாழவைப்பதே தமிழ்ச் சிறுகதைகள்தாம்..”**
  - எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுடனான நேர்காணல் -பக். 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 13
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..**
  - கவிஞர் விக்ரமாதித்யன் -பக். 18
- **காமம் செப்பிய தலைவிகள்**
  - சேலம் ராஜா -பக். 21
- **நூறாண்டு கண்ட செப்பறை நாயகர்**
  - தங்கத்துரையரசி -பக். 28
- **தி டேனிஷ் கேர்ள்**
  - கவிஜி -பக். 32
- **மீந்த நதியின் மையத்தைக் கீறும் சில சொற்கள்**
  - ஸ்ரீகா -பக். 35
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 40
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 43
- **மனநிலைக் குறிப்புகள் 09**
  - ஆதிரன் -பக். 48
- **அரசியல் அறிவோம்**
  - கா.இரெத்தினபிரகா -பக். 54

## சிறுகதைகள்


- **நகரும் நினைவில் கானல் வீடு**
  - உஷாகனகு -பக். 25
- **மரங்கொத்திக்குக் கிடைத்த பரிசு**
  - யாழினி ஸ்ரீ -பக். 37
- **தடை**
  - உமா மோகன் -பக். 60


## கவிதைகள்


- **மதுரா** -பக். 23
- **தங்கேஸ்** -பக். 23
- **சாய்வைஷ்ணவி** -பக். 24
- **கே.பாலன்** -பக். 24
- **கிறிஸ்டினா அருள்மொழி** -பக். 24
- **ரோஷான் ஏ.ஜிப்ரி** -பக். 34
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 8**
  - ஜின்னா அஸ்மி -பக். 39
- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 58




படைப்பு

எழுத்தின் இணைப்பு

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' முப்பத்தாறாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

சிறார்களின் வாழ்க்கையைத் தமிழில் நிறைய கதைகள் பேசிவிட்டன. அந்த அறியாமை துடுக்குத்தனம் விளையாட்டுகள் ஆர்வங்கள் கொண்டாட்டங்கள் ரசிக்கவைக்கும் வருத்தங்கள் என மென்மையான குழந்தைப் பருவச் சித்தரிப்புகள் அழகாகவே பதியப்பட்டுள்ளன. ஆனால் வலி நிரம்பிய சிறார் உலகம் ஒன்று கண்ணெதிரே துடித்துக்கொண்டிருப்பதைக் காணாமல் செல்லும் வெகுஜன மனநிலைக்கு எதிராக அந்த வலிகளை அப்படியே பதிவு செய்திருப்பவர் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன்.

குடும்பச் சூழலால் பறிபோன சிறார்ப் பருவக் கொண்டாட்டங்களை எல்லாம் எண்ணிப் பார்க்கக்கூட வாய்ப்பில்லாத சிறுவர்களின் உணர்வோட்டங்கள் கச்சிதமாக அவர் கதைகளில் பதிவாகியுள்ளன. மிகச் சிறு வயதில் உடல் சார்ந்த வன்முறைக்கு உள்ளாக்கப்படும் சிறுவர்களின் சித்திரம் அதிர்ச்சி தரும் உக்கிரம். ஹோட்டல் வேலையில் தான் படும் அவஸ்தையில் இருந்து விலகுகிறான் காளியப்பன். விற்பனைப் பணியில் வாய்ப்பில்லாத சூழலில் வீட்டுப் பணிக்குச் செல்கிறான். எங்கும் சக பணியாளர்களால் தன் உடல் குறிவைக்கப்படுவதை உணர்ந்து ஓடிச்செல்ல முயலும் காளியப்பன் (பின்னணி இசை இன்றி) இறுதியில் எல்லையின்றித் தொடரும் தன் துன்பங்களுடனேயே பயணிக்க நேரும் நிர்பந்தத்தில் நின்றுவிடுகிறான். அவனது ஏக்கங்கள் நம்மை எப்போதும் பின்தொடரும் வண்ணம் அந்தக் கதையாக்கம் நிகழ்ந்துள்ளது.

போரால் தன் தந்தையை இழந்து அவ்இழப்பால் தன் தாயையும் இழந்து வாடும் ஒரு சிறுவன் இராணுவ முகாமில் நேர்கொள்ளும் அவஸ்தை 'லங்கர் பாய்' என்று கதையாகியுள்ளது. அந்தச் சிறுவனின் உடல் மீதான அதிர்ச்சி, அவனது வன்மையான உலகம் என்று பணி செய்யும் சிறாரின் அவலம் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அவன் நினைவிலிருந்து மீள முடியாத சாமிநாதனைப் பின்தொடர்ந்து வாசிப்பாளர்கள் யாரையும் மீள வைக்க முடியாத கதை அது.

தீப்பெட்டி அலுவலகப் பணிக்குச் செல்லும் வாழ்க்கையை நேரடியாகவோ மறைமுகமாகவோ கதைக்குள் கொண்டுவந்தவர் ச.தமிழ்ச்செல்வன். நேரடியாக விபத்தைப் பார்த்த சிறுவனின் மனச்சிதைவு 'குரல்கள்' சிறுகதையில் நுணுக்கமாய்ப் புனையப்பட்டிருக்கும். ஊர் எல்லையைத் தாண்டாத அந்தக் குரல்களை உரக்கப் பதிவு செய்திருப்பார்.

வெளிவராத குரல்களின் குரல்களாக ச.தமிழ்ச்செல்வனின் படைப்புகள் இருக்கின்றன. அவரது கட்டுரைகளும் விழிப்புணர்வு ஊட்டல்களாகத்தான் இருக்கின்றன. சமையல் குறித்த அவரது கருத்துக்கள் பால் சமத்துவத்திற்கான திறவுகோல்கள். களத்தில் முழுமையான செயல்பாட்டில் இருக்கும் படைப்பாளர் அவர். இந்த இதழில் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனின் நேர்காணல் வெளியாகியுள்ளது.

மேலும் கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– ஆசிரியர் ■

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்



# “என்னை வாழவைப்பதே தமிழ்ச் சிறுகதைகள்தாம்..”

**– எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுடனான நேர்காணல்**

எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் தனது கதைகளின் ஊடாக கரிசல் மண்ணையும் வறுமைகளோடு வாழும் விதவிதமான ஆண் பெண்களையும் சின்னஞ்சிறுவர்களின் ஆசைகளையும் காதல்வயப்பட்ட உள்ளங்களின் தகிப்பையும் தவிப்பையும் உறவின் விரிசல்களையும் கலாபூர்வமாகச் சித்தரித்தவர். பாசாங்கற்ற இயல்பான மொழிநடையில் வாசகனை நோக்கி மழைபோல நேரடியாகப் பொழியும் ஆற்றல் உடையவர்.

ஒரு வளமான இலக்கியப் பின்னணியுள்ள குடும்பத்திலிருந்து வந்தவர். இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதையும் எழுத்தாளர்களைச் சந்திப்பதையுமே வாடிக்கையான செயல்பாடுகளாகக் கொண்டவர். இளம் எழுத்தாளர்களைத் தனது விமர்சனம் மூலம் உருவாக்குபவர்.

கிராமத்தை முன்னிறுத்தி நாம் மறந்த, தொலைத்த கிராம வாழ்வின் நினைவுகளை மீட்டெடுக்கச் செய்யும் எழுத்துக்குச் சொந்தக்காரர். தமுஎச கௌரவத் தலைவராக வீற்றிருக்கும் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுடனான ஒரு நேர்காணல்..

**உங்களுக்கு வாசிப்புப் பழக்கம் ஏற்படக் காரணமாக இருந்தது எது? எந்த வயதிலிருந்து புத்தகம் வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டது? முதன்முதலில் நீங்கள் வாசித்த புத்தகம் நினைவில் உள்ளதா?**

என்னுடைய 11ஆவது வயதிலிருந்து - 1965லிருந்து - அதாவது ஐந்தாம் வகுப்பு படிக்கும்போதிருந்து புத்தகம் வாசிக்கத்துவங்கினேன். அதற்கு முக்கியமான காரணம் தமிழ்நாடு அரசு கிராமப்புறங்களில் கிளை நூலகங்களைத் திறந்ததுதான். எங்கள் ஆரம்பப்பள்ளிக்கு நேர் எதிரில் கிளை நூலகம் திறந்தார்கள். நூலகராக வந்த பொன்னுத்தாய் டீச்சர் வாசிப்பை ஊக்கப்படுத்துவார். நான் முதன்முதலில் முழுசாக வாசித்து முடித்த புத்தகம் "டப்பாச்சி" என்கிற நாவல். இரண்டாவதாக வாசித்த நாவல் "சோனகிரி". எழுதியவர்கள் பெயர் ஞாபகமில்லை. குழந்தைகளுக்கான நாவல்கள்தாம் அவை.

**உங்கள் குடும்பம் இலக்கியக் குடும்பம். உங்கள் சகோதரர்களுக்கு இடையில் இலக்கியம் அல்லது படைப்பு சம்பந்தமாக உரையாடல் இருக்குமா?**

நான், கோணங்கி, முருக பூபதி மூவரும் சந்திப்பதே எப்போதாவதுதான். சந்திக்கும்போது குடும்ப உரையாடல்கள் மட்டும் இருக்காது. கலை இலக்கியம், சமீபத்திய படைப்புகள் பற்றியும் பேசுவோம்.

எங்கள் அப்பா மே.சு.சண்முகம் இரண்டு நாவல்கள், ஒரு சிறுகதைத் தொகுப்பு, இரண்டு கவிதைத் தொகுப்புகள், இரு நினைவுக் குறிப்புகள் என வெளியிட்டிருக்கிறார். தம்பி மகன் ப்ரேம் ஆனந்த் ஆங்கிலத்தில் ஒரு நாவலும் ஒரு சிறுகதைத் தொகுப்பும் வெளியிட்டிருக்கிறார். தம்பி மகள் யுகமதியின் கணவர் கவிஞர் சபரிநாதனும் எங்கள் குடும்பத்தோடு இப்போது இணைந்திருக்கிறார். எல்லோரும் பேசுவோம் இலக்கியம் எப்போதேனும்.

**இராணுவப் பணியில் பணியாற்றியபோது இருந்த மனநிலையையும், திரும்பி வந்து பல்வேறு நெருக்கடிகளை மக்கள் சந்தித்தபோது பார்த்த மனநிலையையும் ஒரு எழுத்தாளனாக எப்படி கடந்தீர்கள்?**

அறியாப் பருவத்தில், அதாவது என்னுடைய 20 வயதில் இந்திய ராணுவத்தில் சேர்ந்தேன். ஒரு தேசபக்தி உணர்வுடன்தான் சேர்ந்தேன். தேசம்-தேசியம் பற்றி ஆழமான புரிதலெல்லாம் அப்போது கிடையாது. கல்லூரி முடித்த நாளில் நா.பார்த்தசாரதி நாவல்களின் தூண்டுதலில் ஒருவித ரொமாண்டிக் மனநிலையில் போய்ச் சேர்ந்தேன். இடைவிடாத என் வாசிப்பும் வாழ்வை உற்றுப்பார்க்க இலக்கியம் கொடுத்த கல்வியும்தான் 'நாட்டுக்காக, மக்களுக்காகச் சேவை செய்ய ராணுவத்தில்தான் சேர வேண்டும் என்பதில்லை. மக்கள் மத்தியில் போய் வேலை செய்வதும் போராட்டங்களில் பங்கேற்பதும் தேச சேவைதான்' என்கிற புரிதலைத் தந்தது. ஆகவே திரும்பி வர முடிவெடுத்தேன். அப்போதே சில அக்சல்பாரித் தோழர்களோடும் 'விடியல்' பத்திரிக்கையோடும் உறவு ஏற்பட்டிருந்ததும் திரும்பி வர ஒரு காரணம்.

**அறிவொளி இயக்கத்தின் மூலம் தமிழக பண்பாட்டில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டதா? அதில் மறக்க முடியாத நிகழ்வுகள்?**

எத்தனை ஏழையாக வாழ நேர்ந்தாலும் பிள்ளைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்கிற உணர்வைத் தமிழகம் முழுக்கப் பரவலாக்கியதில் அறிவொளி இயக்கத்துக்குப் பெரிய பங்கு உண்டு. லட்சக்கணக்கான பெண்கள் ஒரே நேரத்தில் பங்கேற்ற இவ்வளவு பெரிய கலாச்சார இயக்கம் இந்தியக் கலாச்சார வரலாற்றில் இதற்கு முன் நடந்ததில்லை. பெண்கள் என்கிற உயிரிகள் இந்தப் பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்திய இயக்கம் அறிவொளி இயக்கம். மறக்க முடியாத நினைவுகள் ஏராளம் உண்டு. 160 பக்கத்தில் 'இருளும் ஒளியும்' என்கிற நூலில் அவற்றைப் பதிவு செய்துள்ளேன். பாரதி புத்தகாலயத்தில்



கிடைக்கும். ஓராண்டு கால அறிவொளி வகுப்புகளில் படித்த பிறகு எண்ணற்ற கிராமப்புறப் பெண்கள், பிறர் உதவியின்றி, இந்த பஸ் எந்த ஊருக்குப் போகுது என்று யாரையும் கேட்காமல் தாமே பெயர்ப்பலகை வாசித்து பஸ் ஏறி தூரத்து ஊர்களுக்குப் போய்த் திரும்பி வந்த முதல் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்ட நாட்கள் மறக்க முடியாதவை. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான அறிவொளிப் பெண்கள் ஒரே நேரத்தில் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டது தமிழக வரலாற்றில் நீங்கா இடம்பெற்ற நிகழ்வு. அறிவொளியின் தொடர்ச்சியாக நாங்கள் முன்னெடுத்த மக்கள் வாசிப்பு இயக்கத்தில் ஆண்டன் செகாவ், மாப்பஸான், இப்சன், புதுமைப்பித்தன், கி.ராஜநாராயணன், பாமா போன்ற எண்ணற்ற படைப்பாளிகளின் கதைகளை ஒரு ரூபா புத்தகமாக அச்சிட்டு லட்சக்கணக்கான பிரதிகள் மக்களிடம் விற்பனை செய்து வாசிக்க வைத்தது எந்நாளும் மறக்க முடியாத ஒன்று. இன்னும் எவ்வளவோ இருக்கு சொல்ல.

**அற்புதமான மண்மணக்கும் சிறுகதை மூலமாகத் தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகமான நீங்கள் முப்பது வருடங்களாகச் சிறுகதை எழுதாமல் போனதற்குக் காரணம் என்ன? எது உங்களைத் தடுத்தது?**

கதை எழுதுவதைவிட வேறு பல வேலைகள் முக்கியம் என நான் நினைத்ததால் எழுத முடியாது போனது. வீதி நாடகக்குழு நடத்துவது, வீதிகளில் மக்களுக்குத் திரைப்படங்களைக் காட்டுவது, தொழிற்சங்கம் கட்டுவது எனப் பல காரியங்கள் முக்கியம் என முப்பது வருடங்களாக இயங்கிவிட்டேன். கதை முக்கியம் என்று உணரத் துவங்கியிருக்கிறேன். மீண்டும் எழுதத் துவங்கியிருக்கிறேன். பார்வை மாறியிருக்கிறது. கதை என்றால் என்ன என்பது பற்றிய கண்ணோட்டமும் மாறிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்ப கதைகள் இனி வரும்.

**தற்போது முப்பது வருடங்களுக்குப் பின், தாங்கள் எழுதத் துவங்கியபோது எந்த மாதிரியான மனநிலை இருந்தது..**

முதல் கதைகளை எழுதிய காலத்து மனநிலைதான் இப்போது மீண்டும் எழுதத் துவங்கும்போதும் இருக்கிறது - பயமும் தயக்கமும் எல்லாமும்.

**தமிழ்ச் சிறுகதை வரலாறு நூறு ஆண்டுகள் தாண்டிவிட்டது. நூறு ஆண்டுகள் கடந்தும் தமிழ்ச் சமூகம் எழுதிக்கொண்டே இருக்கிறது. உலகச் சிறுகதைகளுடன் ஒப்பிடுகையில் நமது சிறுகதைகள் எந்த இடத்தில் இருப்பதாக நினைக்கிறீர்கள்?**

உலகின் எந்த மொழியிலும் இவ்வளவு அற்புதமான சிறுகதைகள் வந்திருக்கின்றனவா என்று எனக்குத் தெரியாது. என் வாசிப்பு குறைவுதான். ஆனால் வியக்க வைக்கும் சாதனைகளைத் தமிழ்ச் சிறுகதையாளர்கள் ஆற்றிவிட்டார்கள். உலகத்தரம் என்று ஆள் ஆளுக்கு ஒரு கருத்தை வைத்திருக்கிறோம். எந்தத் தராசை எடுத்தாலும் அதில் நம் கதைகள் கண்டிப்பாக இடம் பெறும்.

**தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களின் வரலாற்றைத் தொகுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். நூற்றாண்டைக் கடந்த தமிழ்ச் சிறுகதைகள் பொதுவாக என்ன தத்துவத்தை வலியுறுத்துகின்றன?**

'தமிழ்ச் சிறுகதையின் அரசியல்' என்று தொடரை ஆரம்பித்திருக்கிறேன். ஒவ்வொரு முன்னோடியான சிறுகதைப் படைப்பாளியின் எல்லாக் கதைகளையும் வாசித்துவிட்டு அக்கதைகள் பேசும் அரசியல் என்ன என்று எனக்குப் பட்டதைத் தொகுக்கிறேன். இது பார்வைக் குறைபாடு உள்ளவர் யானை பார்த்த கதைதான். எனினும் இந்தக் கோணத்திலும் ஒரு புத்தகம் வந்ததாக இருக்கட்டுமே என்று ஆசைப்பட்டு இதை எழுதிக்கொண்டிருக்கிறேன். ஒரு சோற்றுப்பதமாக ஒரு நூறு சிறுகதையாளர்களின் கதைகளைப் பற்றி எழுதத் திட்டம். கதை எழுதறத விட்டுட்டு இப்படி வெட்டி வேலையாப் பார்த்துக்கொண்டு திரிகிறாய் என்கிற உட்குரலைக் கேட்டபடியேதான் இந்த வேலை.

**துவக்க காலத்தில் தமிழ்ச் சிறுகதைகளை ஒரு குறிப்பிட்ட சமூகம் மட்டுமே எழுதிவந்திருக்கிறது. தற்போது அந்தச் சூழல் மாறி, எல்லாச் சமூக மக்களும் சிறுகதைகள் எழுதிவருகிறார்கள். அது குறித்த உங்கள் பார்வை என்ன?**

வ.வே.சு.அய்யர், பாரதி, அ.மாதவய்யா என்கிற முதல் கதையாளர்கள் மட்டுமின்றிப் பின்னரும் கு.ப.ராஜகோபாலன், மௌனி, ந.பிச்சமூர்த்தி, ந.சிதம்பரசுப்பிரமணியன், கல்கி, ராஜாஜி, அசோகமித்திரன், தி.ஜானகிராமன், தி.ஜ.ரங்கநாதன், சி.சு. செல்லப்பா, பி.எஸ்.ராமையா, எஸ். வி.வி., வை.மு.கோதைநாயகி அம்மாள், அநுத்தமா, கிருஷ்ணன்நம்பி, ஜி.நாகராஜன், சுந்தரராமசாமி, சுஜாதா எனத் தமிழ்ச்சிறுகதை உலகில் பார்ப்பன சமூகத்தில் பிறந்தவர்களே நீண்டகாலம் எழுதிக்கொண்டிருந்தார்கள்.

வாசிப்புத்திறனும் வாசிக்க ஒய்வான நேரமும் அச்சமூகத்துக்குத்தான் அன்று இருந்தது. கல்விப்பரவலாக்கம் வேகப்பட வேகப்பட காட்சிகள் மாறத்துவங்கின.




அறுபதுகளுக்குப் பிறகு எல்லாச் சமூகங்களிலிருந்தும் எழுத்தாளர்கள் வரத்துவங்கினார்கள். எல்லாச் சமூகத்தினரின் வாழ்வும் இலக்கியத்தில் பேசப்படலாச்சு.

இது ஜனநாயகத்தின் பிரச்னை. சாதிப்பிரச்னை அல்ல. ஆரம்பத்தில் பார்ப்பனர்களே கோலோச்சினாலும் அவர்கள் பார்ப்பன சமூகத்தின் ஆதிக்கத்துக்கு எதிராகவும் கூர்மையாக எழுதினார்கள் என்பது முக்கியம். கலைஞன் அப்படித்தான் இருக்க முடியும். சாதியின் நிழல் படியாமல் யாரும் எழுத முடியாது என்பது பார்ப்பன சமூகத்தில் பிறந்தவர்களுக்கு மட்டுமல்ல (நான் உட்பட) எல்லோருக்கும் பொருந்தும் என்கிற பார்வை இப்போது எனக்கு வந்துள்ளது. அதை துடைத்தழிக்க வேண்டும் என்பதல்ல பிரச்சனை. சாதி அபிமானமோ சாதித் துவேஷமோ இல்லாமல் இருக்கிறோமா என்பதுதான் முக்கியம். ஒடுக்கப்பட்ட சாதிகளின் விடுதலையின் பக்கம் நிற்கிறோமா என்பதுதான் முக்கியம்.

**தமிழில் உங்களால் மறக்க முடியாத சிறுகதைகள், பிடித்த சிறுகதைகள் அல்லது பாதித்த சிறுகதைகள் பற்றிக் கூறுங்கள்.**

யப்பா... எத்தனையைச் சொல்வது? பாரதியின் ஆறடி நிலம், அ.மாதவய்யாவின் சாஸ்தா ப்ரீதி, புதுமைப்பித்தனின் செல்லம்மாள், துன்பக்கேணி, மகாமசானம், காலனும் கிழவியும், கு.ப.ரா.வின் ஆற்றாமை, சிறிது வெளிச்சம், பண்ணைச் செங்கான், கு.அழகிரிசாமியின் திரிபுரம், வெறும் நாய், அழகம்மாள், ராஜா வந்திருக்கிறார், அன்பளிப்பு, ந.பிச்சமூர்த்தியின் வானம்பாடி, பதினெட்டாம் பெருக்கு, மௌனியின் பிரபஞ்ச கானம், அசோகமித்திரனின் புலிக்கலைஞன், பி.எஸ்.ராமையாவின் கார்னிவல், ரகுநாதனின் ஆனைத்தீ, வென்றிலன் என்றபோதும், அண்ணாவின் கருப்பண்ணசாமி யோசிக்கிறார், செவ்வாழை, சி.சு.செல்லப்பாவின் சரசாவின் பொம்மை, தி.ஜ.ரங்கநாதனின் கன்னிகையின் பிரார்த்தனை, கிருஷ்ணன் நம்பியின் மருமகள் வாக்கு, சுதந்திரதினம், லா.ச.ரா.வின் தரிசனம், விந்தனின் ஒரே உரிமை, ஜி.நாகராஜனின்




ஆண்மை, குறத்தி முடுக்கு, கமலா விருத்தாசலத்தின் திறந்த ஜன்னல், கு.ப.சேது அம்மாளின் புயல் ஓய்ந்தது, ஆ.மாதவனின் எட்டாவது நாள், ஜெயகாந்தனின் அக்கினிப்பிரவேசம், தாம்பத்தியம், தி.ஜானகிராமனின் கோபுரவிளக்கு, பாஷாங்க ராகம், சுந்தரராமசாமியின் ரத்னாபாயின் ஆங்கிலம், நாடார் சார், ஆ.மாதவனின் பாச்சி, வண்ணநிலவனின் மயான காண்டம், எஸ்தர், மிருகம், வண்ணதாசனின் மிச்சம், பெயர் தெரியாமல் ஒரு பறவை, எது தெரிகிறதோ அது, மிதிபட, பூமணியின் ரீதி, பகை, கரு, பா.செயப்பிரகாசத்தின் ஒரு ஜெருசலேம், சரஸ்வதி மரணம், தாலியில் பூச்சூடிக்கொண்டவர்கள், இன்குலாப்பின் உம்மாவோட முகம், பிரபஞ்சனின் வர்க்கம், வியாபாரம், கமலா டீச்சர், மரி என்னும் ஆட்டுக்குட்டி, நாஞ்சில் நாடனின் யாம் உண்பேம், சா.கந்தசாமியின் உயிர்கள், மு.சுயம்புலிங்கத்தின் தூரம், ஆர். சூடாமணியின் அன்பு உள்ளம், நான்காம் ஆசிரமம், அம்பையின் வெளிப்பாடு, காட்டில் ஒரு மான், கைலாசம், தஞ்சை ப்ரகாஷின் பற்றி எரிந்த தென்னை மரம் என்று எனக்குப் பிடித்த கதைகளின் பட்டியல் மிக நீண்டது.. கொஞ்சம் சொல்லியிருக்கிறேன்.

இளவயதில் என்னை ஆட்டிப்படைத்த கதைகள் என்று கு.அழகிரிசாமியின் திரிபுரம், அன்பளிப்பு ஆகிய இரு கதைகளையும் சொல்வேன்.




**தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் பொறுப்பாளராக உள்ளீர்கள். தமிழ்ச் சிறுகதையில் முற்போக்குக் கருத்தியல் போதிய அளவு இருப்பதாக நினைக்கிறீர்களா? நிறைவைத் தருகிறதா?**

மிகுந்த நிறைவளிக்கும் விதமாக தமிழ்ச் சிறுகதையின் வரலாறு இருக்கிறது. தலித் வாழ்வையும் சிறுபான்மை மக்களின் வாழ்வையும் தமிழ்ச் சிறுகதை இன்னும் அழுத்தமாகப் பேசியிருக்க வேண்டும்.

**தற்போது எழுதிக்கொண்டிருக்கும் சிறுகதை எழுத்தாளர்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?**

இப்போது தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன், ஆதவன் தீட்சண்யா, கீரனூர் ஜாகிர் ராஜா, பெருமாள் முருகன், இமையம், எஸ்.செந்தில்குமார், நரன், அ.வெண்ணிலா, சந்திரா, கவின் மலர், அ.கரீம், சம்சுதீன் ஹீரா, ச.சுப்பாராவ், ம.காமுத்துரை, தமிழ்நாட்டுக்கு வெளியிலிருந்து கறுப்பி சுமதி, தக்ஷிலா ஸ்வர்ணமாலி எனப் பலரைக் குறிப்பிட வேண்டும். ஒரு நேர்காணலில் எல்லாவற்றையும் சொல்லிவிட முடியாது. தனியாக எழுதுகிறேன். தொடர்ந்து நம்பிக்கையளிக்கும் சிறுகதைகள் வந்துகொண்டே இருக்கின்றன. நான் வாசித்துக்கொண்டே இருக்கிறேன். தமிழ் வாழ்வின் பல்வேறு பக்கங்களும் பரிமாணங்களும் எழுதப்பட்டு வருகின்றன. விமர்சனங்கள் ஒரு பக்கம் இருக்க வாழ்வின் இண்டு இடுக்குகளுக்கெல்லாம் தமிழ்ச் சிறுகதைகள் நம்மை அழைத்துச் செல்கின்றன என்பது முக்கியம்.

**சிறுகதை ஒரு வாசகனை என்ன செய்யும்?**

என்னை வாழ வைப்பதே தமிழ்ச் சிறுகதைகள்தாம். என்னை இடது பக்கம் திருப்பியதும் தமிழ்ச் சிறுகதைகள்தாம். மற்றமையைப் புரிந்துகொள்ள என் கண் திறந்து வைத்ததும் தமிழ்ச் சிறுகதைகள்தாம். மொழிபெயர்ப்புக் கதைகளையும் சேர்த்துத்தான் தமிழ்க் கதைகள் என்று சொல்கிறேன்.

**சமகாலப் பிரச்சினைகளைச் சிறுகதையாக எழுதலாமா?**

ஆதவன் தீட்சண்யாவும், இமையமும் ரொம்ப அற்புதமாக அந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எல்லோருமே சமகாலத்தைத்தான் எழுதுகிறார்கள். சமகால அரசியலை இந்த இருவரும் சிறப்பாக எழுதுகிறார்கள். அ.கரீம் தொகுத்து எதிர் வெளியீடாக வந்திருக்கும் இருண்டகாலக்கதைகள் நம்பிக்கை தரும் தொகுப்பு.

**சமகாலப் பிரச்சினைகள் சிறுகதையாக மாற்றப்படும்போது சிறுகதைக்குண்டான அழகியல் வடிவம் சிதைந்துபோவதாக ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. அந்த வாதம் சரியானதா?**

அது ஒரு பக்கம் இருக்கட்டும். அப்படிச் சொல்பவர்கள் நாலு பேர் இல்லாவிட்டால் ஒரேயடியாக பிரச்சாரமாக எழுதிக்கொண்டு போய்விடும் அபாயம் இருப்பது உண்மைதான். இன்னொரு பக்கம் அழகியல் என்றால் என்ன என்பது குறித்த கண்ணோட்டம் நபருக்கு நபர் மாறுபடத்தான் செய்யும் - அவரவர் வர்க்க, சாதி தாக்கங்களுக்கு உட்பட்டு.

**"அரசியல் எனக்குப் பிடிக்கும்" என்ற நூல் தொடர்ந்து வாசிக்கப்படுவதற்குக் காரணம்?**

அப்படியான எளிய புத்தகங்களின் தேவை எப்போதும் இருக்கிறது. நாம்தான் அக்கறையுடன் அதைக் கவனிப்பதில்லை. இன்னும் எளிமையான வடிவில் அதே புத்தகத்தை எழுத்துக்கூட்டி வாசிக்கும் அரைகுறைப் படிப்பாளிகளான உழைக்கும் மக்களுக்காக எழுத வேண்டும் என்று நினைத்திருக்கிறேன்.


**பெண்கள்தான் சமைக்க வேண்டும் என்ற மனநிலை இந்தியச் சமூகத்தில் உள்ளது. இதற்கிடையில் ஆண்களுக்கான சமையல் குறிப்பு என்ற ஒரு புத்தகம் எழுதியுள்ளீர்கள். ஆண்கள் ஏன் சமைக்க வேண்டும்?**

ஆண்கள் சாப்பிடுகிறோமல்லவா.. அதனால் சமைக்கத்தானே வேண்டும். இயற்கையின் படைப்புகளில் தனக்கான உணவைத் தானே தயாரிக்காத ஒரே பிறவி ஆண்கள் மட்டும்தான். இந்தக் கேவலத்தை நாம் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்குத் தொடரப்போகிறோம்?

ஆண் சமைக்க வேண்டும் என்பது வேலைப் பிரிவினைக்காக மட்டுமல்ல. அது நம் மனங்களிலிருந்து ஆதிக்க மனோபாவத்தை மட்டுப்படுத்தும். திமிரைக் குறைக்கும். ஆண்களிலும் நல்லவர்களை உருவாக்கும்.

**நீங்கள் மிகச் சிறப்பாக சமைக்கக்கூடிய உணவு எது?**

நான் சிறந்த சமையல்காரன் அல்ல. ஆனால் சமைப்பது என்னுடைய வேலை என்பதை உணர்ந்துகொண்ட, நூற்றாண்டு கால ஆணினத்தின் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் தேடும் மனநிலையுடன் சமைக்க அடுப்படிக்குப் போனவன். தினசரி சமைப்பேன் என்பதுதான் முக்கியம். சில அயிட்டங்களை மட்டும் சிறப்பாகச் சமைப்பேன் என்பது ஆண்களின் ஏமாத்து வேலை. தினசரி சட்டி பானை கழுவி முழுதாகச் சமையலை ஆண்



பார்க்க வேண்டும். தோழர் லெனின் சொன்னதுபோல "நச்சரிக்கும் வீட்டு வேலைகளிலிருந்து பெண்களுக்கு விடுதலை வேண்டும்." நாம் உள்ளே போகாமல் அவர்கள் எப்படிப் பொது வாழ்வுக்கு வருவார்கள். மசாலாப்பொடி பயன்படுத்தாமல் நான் அரைத்து வைக்கும் சாம்பார் என் இணையருக்கும் மகனுக்கும் பிடிக்கும்.

**முழுக்க முழுக்க பெண் வாழ்வை மையப்படுத்தி "எசப்பாட்டு" எனும் புத்தகம் எழுதக் காரணம் என்ன?**

ஆண்களை உரையாடலுக்கு அழைக்கும் நூலே "எசப்பாட்டு". பெண் விடுதலை பற்றிப் பெண்களிடமே பேசி என்ன பயன்? தலித் விடுதலை பற்றி தலித்துகள் அல்லாதவரிடம்தானே அதிகம் பேச வேண்டும்? பெண்கள் வாழத் தகுதியற்ற நாடாக இந்தியாவை நாம் ஆக்கி வைத்திருக்கிறோம். அதைப் பற்றி மனம் திறந்து பேச வேண்டாமா? அதற்கான உந்துதலைத் தூண்டும் நோக்கமே எசப்பாட்டு எழுதக் காரணம்.




**எசப்பாட்டு புத்தகத்தில் உங்களை மிகவும் பாதித்த பகுதி எது?**

விஞ்ஞானிகள் உலகத்திலும் ஆணாதிக்கம் நிலவுவதைப் பற்றி எழுதிய நாலு கட்டுரைகளுக்காகப் பலவற்றையும் தேடிப் படித்தபோது மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானேன். சர்.சி.வி.ராமன் முதல் இன்றைய நோபல் விருதுபெற்ற சில விஞ்ஞானிகள் வரை ஆணாதிக்க மனோபாவத்துடன் இருந்துள்ளனர் என்பது உண்மையிலேயே அதிர்ச்சிதான்.

**எசப்பாட்டு புத்தகம் வாசித்து, அதன் எழுத்து பற்றி உங்களிடம் வாசகர்கள் பகிர்ந்துகொண்டார்களா? அதில் உங்களிடம் தனது கருத்தைப் பகிர்ந்த மறக்கமுடியாத வாசகர் பற்றிக் கூறுங்கள்?**

திருப்பூரிலிருந்து ஒரு வாசகர் ஆண்களுக்காக வக்காலத்து வாங்கி வாராவாரம் என் கட்டுரைகளுக்குக் கடுமையான எதிர்வினை ஆற்றிக்கொண்டிருந்தார். அவருக்குள் ஆழமாக வேரோடிப்போயிருந்த பெண் வெறுப்பு என்னை நடுங்கச்செய்தது. அய்யோ நாம் இன்னும் எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது என்கிற மலைப்பை உருவாக்கியது. தமுஎகசவின் அறம் கிளைத்தோழர்கள் ஒரு முந்நூறு பேர் எசப்பாட்டு நூலை வாங்கி வாசித்து ஒவ்வொருவரும் அவரவர் கோணத்தில் கட்டுரை எழுதி அதைத் தொகுத்து எனக்கே கொடுத்தார்கள். மறக்க முடியாத அனுபவம் அது.


**சமகால எழுத்தாளர்களில் நம்பிக்கை தரக்கூடிய எழுத்தாளர்கள்...**

எல்லோருமே நம்பிக்கை தருகிறார்கள். விமர்சிக்க வேண்டியவற்றை அவர்களுக்குப் புரிகிற பக்குவமான மொழியில் யாரேனும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். அதை அவர்கள் திறந்த மனதுடன் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**தற்போது எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளர்களுக்குத் தாங்கள் சொல்ல விரும்பும் கருத்து?**

அயிரைக்கு எதுக்கு விலாங்குச் சேட்டை? ■

● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

இலக்கியப் பெருவெளியில் என்றென்றும் பேசப்படும் ஆளுமைகளாக சிலரின் பெயர்கள்தான் காலந்தோறும் உச்சரிக்கப்படுவதுண்டு. இலக்கியக் குழுக்கள், அரசியல் சார்புகள், தனிநபர் மதிப்பீடுகள் சார்ந்து இந்தப் பட்டியலில் இடம்பெறும் பெயர்களும் மாறுவதுண்டு. ஆனால், எல்லாக் குழுக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட படைப்பாளுமைகளாக மிகச் சிலரே பொதுத்தளத்தில் பேசப்படுவதுண்டு. அப்படியான ஆளுமைகளுள் ஒருவர் எழுத்தாளர், கவிஞர் கந்தர்வன்.

கவிதை பற்றிப் பேசினாலும் சரி; சிறுகதை பற்றிப் பேசினாலும் சரி, கந்தர்வனின் கவிதைகளும் சிறுகதைகளும் அதில் பேசுபொருளாக இடம்பெறுவதைத் தவிர்க்கவே முடியாது. ஒரு தொழிற்சங்கவாதியாக, இடதுசாரி அரசியல் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்ட கந்தர்வனை, முற்போக்கு இலக்கிய அமைப்புகள் முன்னோடியெனக் கொண்டாடுகின்றன; நவீன படைப்பிலக்கியக் குழுவைச் சார்ந்தவர்களாலும் கந்தர்வனின் எழுத்துக்கள் மிகுந்த பாராட்டைப் பெற்றிருக்கின்றன.

வாழும் காலத்திலேயே சில படைப்பாளிகள் எழுத்தின்வழி நம் மனசுக்கு நெருக்கமாக வந்துவிடுவதைப் போல், நாம் வசிக்கும் ஊரிலேயே, நமக்குப் பக்கத்திலேயே நமக்குப் பிடித்த படைப்பாளியின் வீடும் அமைந்துபோவது பலருக்கும் வாய்க்காத வரம். கவிஞர் கந்தர்வன் விஷயத்தில் எனக்கு அது இயல்பாக வாய்த்த ஒன்று.

எட்டாண்டுக்காலம் எனது வீட்டிலிருந்து சரியாய் 500 மீட்டர் தொலைவிலுள்ள ஆலங்குளம் வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் வசித்த கந்தர்வன், எனது வீட்டிலிருந்து 200 மீட்டர் தொலைவிலுள்ள பிரகதாம்பாள் நகரில் புதுவீடு கட்டி, குடி புகுந்தார். என் வீட்டிற்கு அருகாமையில் பிடித்த எழுத்தாளரின் வீடு இருந்தாலும், எனது அறிவொளி இயக்கப் பணி என்னை வீட்டிற்கே வர விடாமல் விரட்டிக்கொண்டிருந்த காலமது. இது பற்றி, எங்களது மணவிழா நாளின் முதல் நாள் மாலையில் வெளியிட்ட வெண்ணிலாவும் நானும் எழுதிய கவிதைகளின் தொகுப்பு நூலான 'என் மனசை உன் தூரிகைத் தொட்டு...' முன்னுரையில் கவிஞர் கந்தர்வன் இவ்வாறு பதிவு செய்திருப்பார்.

‘அடுத்த தெருவிலிருக்கிறது முருகேஷின் வீடு. தீப்பெட்டி வாங்க வேண்டுமென்றாலும் அவர் வீட்டைத் தாண்டித்தான் போக வேண்டும். ஒரு நாளில் சராசரியாக எட்டுத் தடவைக்கு மேல் அவர் வீட்டைக் கடக்க வேண்டும். எப்போதாவதுதான் தென்படுவார் வீட்டில். அப்போதும் யாராவது சிநேகிதர்களோடு நின்று பேசிக்கொண்டிருப்பார். மற்ற நேரங்களில் ஊர்சுற்றி.’

உண்மைதான்; வீட்டில் இருப்பு குறைவென்றாலும், வீட்டில் இருக்கையில் எப்படியும் ஒரு நாளைக்கு இரு தடவையாவது கவிஞர் கந்தர்வனின் முகம் பார்த்துவிடுவேன். அவர் எனக்கு மட்டுமல்ல, என் அப்பா, அம்மா, அண்ணன் என எல்லோருக்குமே நெருக்கமான நண்பர்; பிடித்தமான தோழர்.

வானம் பார்த்த பூமியான இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிக்கல் எனும் கிராமத்தில் 03.02.1944ஆம் ஆண்டு கணேசன் - கனகம்மாளின் மகனாகப் பிறந்த கந்தர்வனின் இயற்பெயர் நாகலிங்கம். இராமநாதபுரம் அரசர் பள்ளியில் இறுதி வகுப்பு வரை படித்தவர், பால்பண்ணை ஒன்றில் வேலை பார்த்துக்கொண்டே, தமிழ்நாடு தேர்வாணையத் தேர்வினை எழுதினார். குரூப்-4 தேர்வில் வெற்றி பெற்றவர், 1965இல் சென்னையில் பணியில் சேர்ந்தார்.

1968இல் கவிஞர் நச்சினார்க்கினியன், பத்திரிகையாளர் கார்க்கி, இராம.கண்ணப்பன் ஆகியோருடன் நட்பு உண்டாகிறது. ‘கண்ணதாசன்’ இதழ் அலுவலகத்திற்குச் சென்று, இதழ்ப் பணிகளைப் பார்ப்பதோடு, நூல் விமர்சனங்களும் எழுதினார். 1969ஆம் ஆண்டு மே மாதத்தில், தமிழ் எழுத்தாளர் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் நிகழ்வுகளை விமர்சித்து எழுதிய கட்டுரை ‘கண்ணதாசன்’ இதழில் வெளியாகி, பரவலான தாக்கத்தை உண்டாக்கியது. அரசு ஊழியரான நாகலிங்கம், அப்போது வைத்துக்கொண்ட புனைபெயரே கந்தர்வன்.

வாசகர் வட்டம் நடத்திய சிறுகதை கூட்டமொன்றில், கந்தர்வனைச் சிறுகதை வாசிக்குமாறு மூத்த எழுத்தாளர் தி.க.சிவசங்கரன் தூண்டவே, கந்தர்வனுக்குள் இருந்த சிறுகதையாளன் விழித்துக்கொண்டான். தொடர்ந்து சிறுகதை, கவிதை என இரு தளங்களிலும் எழுதத் தொடங்கினார். கந்தர்வனின் கவிதைகள் தெறிப்பானவை. கேட்பவர் மனதை உடனடியாகச் சென்றடைந்து, வினை புரியும் ஆற்றல் படைத்தவை.

**‘விதவிதமாய் மீசை வைத்தோம்;**

**வீரத்தை எங்கேயோ தொலைத்துவிட்டோம்..’**

– என்று கவிதைகளால் வாசிப்பவரைப் புரட்டிப் போட்டார்.

**‘நாளும் பொழுதும் நலிந்தோர்க்கில்லை;**

**ஞாயிற்றுக்கிழமையும் பெண்களுக்கில்லை..’**

- என விடுமுறை நாளிலும் கூடுதலான பணிச்சுமைக்கு ஆளாகும் பெண்ணின் குரலை எதிரொலித்தார்.

வீடுகளுக்குள்ளேயே சுழலும் பெண்களைப் பற்றி கந்தர்வன் எழுதிய ‘கயிறு’ எனும் கவிதை குறிப்பிடத்தக்கது. ஆழமான பொருள் பொதிந்த அந்தக் கவிதை இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டு, ஞானபீடம் தொகுத்த ‘இந்தியக் கவிதைகள்’ எனும் நூலில் இடம்பெற்றது.

**‘பொது கிளாசில்**

**டீ கேட்க,**

**தனி கிளாசில்**

**டீ கொடுக்க,**

**ஒரு டீயின் விலை**

**ஒன்பது உயிர்கள் என்று**

**விலைவாசி**

**உயர்ந்து கிடக்கிறது’**


அன்றைய நாளில், டீக்கடையொன்றில் பொது கிளாசில் டீ கேட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தோழர்களைக் கொன்ற கொடூர நிகழ்வை, ஒரு கவிதையின் வழியே

நம் கண்முன் காட்டினார் கந்தர்வன்.

அன்னம் வெளியீடாக 1984இல் ‘கிழிசல்கள்’ எனும் அவரது முதல் கவிதை நூல் வெளியானது. அடுத்த ஆண்டே ‘பூவுக்குக் கீழே’ எனும் அவரது சிறுகதை நூலும் வெளியாகி, கவிதைத் தளத்திலும், சிறுகதைத் தளத்திலும் ஒருசேர கவனிப்பைப் பெற்றார்.

மூன்று கவிதை நூல்களையும், நான்கு சிறுகதை நூல்களையும் படைத்த கந்தர்வன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மேடைகளில் வாசித்த கவிதைகள் தனித்துவமானவை. தனது கம்பீரமான குரலில், கணீரென ஒருமுறையே கவிதை வரிகளை வாசித்தாலும், கேட்பவரைக் குலுங்க வைக்கும்; நெஞ்சு பதற வைக்கும் தன்மையுடையவை.

இதழ்களில் வெளிவரும் கவிதைகளுக்கும், மேடைகளில் வாசிக்கும் கவிதைக்குமான இடைவெளியை மிகச் சரியாகப் புரிந்துகொண்டவர் கந்தர்வன்.




மக்கள் கூடியிருக்கும் கலை இரவு போன்ற விழாக்களில் வாசிக்கும் கவிதைகள் ‘நிகழ்த்து கலை’ (Performing Art) வகையைச் சார்ந்தவை என்கிற புரிதல் கந்தர்வனிடம் இருந்தது. கவிதை வரிகளை அவர் படிக்கப் படிக்க, மொத்த கூட்டமும் ஆர்ப்பரித்து கரவொலி எழுப்புவதைப் பல கூட்டங்களில் நேரடியாகவே கண்டிருக்கின்றேன்.

**‘மண் பொய் சொல்வதில்லை**

**மிதிக்கிறோம்.**

**மரம் பொய் சொல்வதில்லை**

**வெட்டுகிறோம்.**

**மந்திரி பொய் சொல்கிறார்**

**மாலை போடுகிறோம்’**

- என்று சொல்லி, கூட்டத்தை அதிர வைப்பார்.

**‘ஆரியப்பட்டா**

**வானத்தைக் கிழித்தது.**

**அணுகுண்டு சோதனை**

**பூமியைக் கிழித்தது.**

**அரைக்கை சட்டைகள்**

**கிழிந்தது மட்டுமே**


**மனதில் நிற்கிறது.’**

தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்ற சம்பவமொன்றின் அடிப்படையில் எழுதிய இந்தக் கவிதை இன்றளவும் நம் மனதில் நிற்கிறது.

கந்தர்வனின் சிறுகதைகள் மிக நுட்பமான தளத்தில் இயங்குபவை. கவிதைகளில் வெளிப்படும் அதிர்ந்த குரல், அவரது கதைகளில் வெளிப்படாது. அதே நேரம் கதையை வாசித்து முடித்ததும் நம் மனசில் தங்கிப்போகும் குணமுடையவை கந்தர்வனின் கதைகள். ‘பூவுக்குக் கீழே’ என்கிற அந்த ஒரு கதை போதுமே!

சீவன், மங்கல நாதர், அடுத்தது, தனித்தனியாய் தாகம், துண்டு என கந்தர்வன் எழுதிய ஆகச் சிறந்த தமிழ்ச் சிறுகதைகளின்

பட்டியலை நீட்டித்துக்கொண்டே போகலாம். ஒவ்வொரு கதையும் நம் முன்னே உயிரோவியமாய் வந்துபோகும் வல்லமைக்குரியவை. கந்தர்வன் எழுதிய 'சாசனம்' எனும் சிறுகதையை தேசிய திரைப்படக் கழகத்திற்காக இயக்குநர் மகேந்திரன் படமாக எடுத்தார். 'மைதானத்து மரங்கள்' எனும் சிறுகதை 12ஆம் வகுப்பு தமிழ் துணைப்பாட நூலில் இடம்பெற்றது.



இப்படியாக, கவிதைகளாலும் கதைகளாலும் பேசப்படும் கந்தர்வன் எழுதிய கவிதையொன்று, அவரது கதைகளுக்கு நிகரான ஒன்றாக என் மனதில் பதிந்துபோயுள்ளது. அவர் கதையாக எழுத நினைத்தது கவிதையாகத் தன்னை வெளிப்படுத்திக்கொண்டது என்றே இப்போதும் நினைக்கத் தோன்றுகிறது. கால்நூற்றாண்டினைக் கடந்துவிட்ட போதிலும், இன்னமும் இந்தக் கவிதையைக் கேட்ட திருப்பரங்குன்றம் தமுஎகச மாநில மாநாட்டு (1995) நினைவுகளே என் மனக்கண்ணில் நிற்கின்றன. அந்தக் கலை இரவு மேடையில் கவிஞர் கந்தர்வன் வாசித்த கவிதை, கூடியிருந்த பல்லாயிரக்கணக்கானவர்களின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது. எந்தப் பொழிப்புரையும் தேவையில்லாமல் எளிய மொழியில் எழுதப்பட்ட அந்தக் கவிதை, கந்தர்வன் எழுதிய ஆகச் சிறந்த கவிதையாகவும், கதையாகவும் இருக்கிறது.

வாசிக்கிற எவரின் கண்களையும் ஈரமாக்கிப் போகும் அந்தக் கவிதை;

**நான் நல்லாய்த்தான் இருக்கிறேன்...**


அன்புள்ள ஐயாவுக்கு,
ஆறு மாசத்தில் நான்
டேபிள் கிளினிங்கில்
நன்றாகத் தேறிவிட்டேன்.
வாழை மட்டைக்குப் பதிலாய்
முதலாளி எனக்கு
கலர் கலராய்
ஸ்பாஞ்ச் கொடுத்திருக்கிறார்.
தண்ணி வைக்கும்
வளந்த பயல் சுந்தரம்
ஓயாமல் என்னைப்
பிடரியில் அடிக்கிறான்.
எச்சி இலையும்
பிளேட்டுமுள்ள
வாளியில் வீச்சம் ஜாஸ்தி
கொசுக்கடி அதிகம்
கனக்கிறதென்று கீழே வைத்தால்
மேனேஜர் வந்தென்னை
முதுகில் அடிக்கிறார்.
நீ போடும் கார்டை முதலாளி
மூணு நாள் கழித்துத்தான் தருகிறார்.
காயிதம் வந்து கல்லாவுக்குள் கிடப்பதை
முதலாளி மூஞ்சி பார்த்துத் தெரிகிறதெனக்கு.
நீ அடுத்த மாதம் முதலாளியிடம்
சம்பளம் வாங்க வரும்போது
என் கையைப் பிடித்துத் தெருவில்
ரெண்டடியாவது நடக்க வேண்டும்.
இந்த டவுனில் என் வயசுப் பயல்கள்
டை கட்டி, யூனிபார்ம் போட்டு,
புத்தகப் பை சுமந்து
அவனவன் அப்பா கைபிடித்து
அழகழகாய் நடக்கிறார்கள்.
எதிர் கடையில்
அக்கா கைக்கு வளையல்
பார்த்து வைத்திருக்கிறேன்.
நீ வரும்போது
வாங்கிப்போக வேண்டும்.

முந்தா நாள்
பேண்ட் போட்ட ஒருவர் மீது
டேபிள் துடைக்கையில்
ரெண்டு சொட்டுப் பட்டதென்று
கன்னத்தில் அடித்துவிட்டார்.
அதைப் பார்த்த முதலாளி,
கல்லாவிலிருந்து ஓடிவந்து
உச்சந்தலையில் என்னை
ஓங்கிக் குட்டிவிட்டுப் போனார்.
நானூறு ஐநூறு பேர்
நாள்தோறும் வந்தாலும்
ஒரு ஆளோடும்
வாய் திறந்து பேச எனக்கு
வாய்க்கவில்லை ஐயா.
ஆளாளுக்கு என்னைத்
திட்டும்போது,
நம் ஆத்தாவைச் சேர்த்து
ரெண்டு மூணு
கெட்ட வார்த்தை
சொல்கிறார்கள்.
ரொம்ப நாளைக்கப்புறம்
நேத்து ராத்திரி ஆத்தா
சொப்பனத்தில் வந்தது.
நீ என்னை ஊரிலிருந்து
கூட்டி வந்தபோது
கட்டியிருந்த அதே
பச்சைப் புடவையில்
ஆத்தா மெலிஞ்சு போய் வந்தது.
என் சம்பளத்தில் ஐயா நீ
ஆத்தா இருமலுக்கு
மருந்து வாங்கித் தர வேண்டும்.
எம்புட்டுப் பசிச்சாலும்
கூட்டமெல்லாம் போன பின்தான்
சாப்பாடு கிடைக்கிறது.
ஆனால்
சாம்பார் சோறும், இட்டிலியும்
சாப்பிடும் நேரமெல்லாம்
நீங்கள் வீட்டில்
வெங்காயம் கடிச்சு
வரகுக் கஞ்சி குடிப்பதை
நினைத்து
குமட்டி வருகிறது.
நான் வரும்போது
மாடாக் குழியில்
நாலு கோலிக்குண்டும்
எரவானத்தில் கிட்டிப்பிள்ளையும்
வைத்துவிட்டு வந்தேன்.
இனிமேல் அதெல்லாம்
எனக்கெதற்கு ஐயா,
சித்தப்பா மகன்
முனியசாமிக்கு
நான் கொடுத்ததாய்ச்
சொல்லிக் கொடுத்து விடு.
ராத்திரியில் பெரிய பயல்கள்
என்னைத் தூங்க விடாமல்
தொந்தரவு செய்கிறார்கள்.
மற்றபடி நான்
நல்லாய்த் தானிருக்கிறேன்.
ஆத்தா என்னை நினைத்து
அழ வேண்டாமென்று சொல்.
நானும் அழுவதை நிறுத்தி
மாசம் ஒண்ணாகிறது.

*இப்படிக்கு,*
*அல்லிமுத்து.*




- இன்னும் சொல்வேன்...



# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

**கடிதம் - 15**

***எழுதியவர் : பிரம்மராஜன்***

Bramharajan Burn View

Coonoor Road, Ooty 643001.

24/9/88

அன்புள்ள விக்ரமாதித்யன்,

நேற்றைக்கு உங்கள் கடிதமும், இன்றைய தபாலில் 'ஊருங்காலம்' பிரதியும் கிடைத்தது. நன்றி. உங்கள் கோபம் நியாயமானது. ஆனால் உங்கள் கடிதம் என்னைப் பாதிக்கவில்லை.

மேலும் ஒரு *Review*வில் என்னால் எழுத முடிந்த ஒரு *Theme*ஐ மட்டும்தான் "உள் வாங்கும் உலகம்" மதிப்புரையில் கூறியிருக்கிறேன். எனக்குச் சொல்வதற்கு நிறைய இருந்தாலும் காலம், இடம் போதாது. கண்டிப்பாக நான் என் *Review*வை என் முழு ஸ்வாதீனத்தில்தான் எழுதியிருக்கிறேன். அதை வரிக்கு வரி என்னால் எல்லாருக்கும் புரிய வைக்க முடியும். மேலும் *academic* ஆக நான் அதை எழுதவில்லை. அப்படி நான் எழுதியிருப்பேனானால் என் *Review* உங்களுக்குச் சுத்தமாய்ப் பிடிக்காமல் போயிருக்கும். மேலும் நான் சொல்லியா உங்கள் கவிதை வாழப்போகிறது?

ஆனால் சிறிது காலம் பொறுத்து நிதானமாக உங்களுடைய மூன்று தொகுதிகளையும் வைத்து உங்கள் கவிதைகளை 'விமர்சிக்கிறேன்'.

கவிதைப் பட்டறைக்கான அழைப்பிதழ் இந்நேரம் உங்களுக்கு வந்திருக்கும் என்று நம்புகிறேன்.

மிக்க அன்புடன்

பிரம்மராஜன்.

• • •

**கடிதம் - 16**

***எழுதியவர் : கவிஞர் ரமேஷ் பிரேதன்***

*17.05.2001*

புதுவை.

என் அன்பிற்கினிய கவி விக்ரமாதித்யனுக்கு,

ரமேஷ்...

உங்கள் புதிய கவிதைத் தொகுப்பு வெளிவருவதில் மகிழ்ச்சியடைகிறேன். 'கவிமூலம்' நூலுக்கு விளம்பரம் கதைசொல்லியில் வரப்பெற்றோம் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது என நினைத்திருந்தேன். வரும் இதழில் வெளிவரும். 'காலச்சுவடு' கண்ணனுக்கு 'சுந்தரசுகனில்' நீங்கள் எழுதிய பதில் சரியானதாக இருந்தது. அதே போல் 'புதுமைப்பித்தன்

பதிப்பகம்' தொடர்பான பிரச்சனைகளை முன்வைத்து வெளியிடப்பட்டுள்ள சிறு பிரசுரத்திலுள்ள உங்களுடைய விமர்சனமும் மிக முக்கியமானது. அதேசமயம் அந்த வெளியீட்டிலுள்ள பா.செயப்பிரகாசத்தின் விமர்சனத்தில் எனக்குப் பிரச்சனை உள்ளது. காலச்சுவட்டின் பாசிச வெறிக்கு மறுமுனையில் பா.செ.வின் பாசிசச் சாடல். மேலும், புதுமைப்பித்தனை ஒரு எழுத்தாளனாகவே ஏற்காத அ.மார்க்ஸ் போன்றவர்கள் இந்த விஷயத்தில் காலச்சுவடுக்கு எதிராகத் தலையிடுவது – நம்முடைய பிரச்சனையைத் திசைத்திருப்புவதாகவும் இருக்கும். புதுவையில் "புதுமைப்பித்தன் இலக்கியப் பேரவை" என்ற அமைப்பைக் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாகப் பிரபஞ்சன் நடத்திவருகிறார். சென்ற ஆண்டு அந்த அமைப்பின் சார்பாக ரூ.5000 விருதை நாங்கள் பெற்றோம். இது ஒரு தகவலுக்கு. புதுமைப்பித்தன் என்ற பெயர்; பு.பி.யின் குடும்பத்தினருக்கோ காலச்சுவடு நிறுவனத்திற்கோ சொந்தமானது அல்ல.

உங்களுடைய மூன்று கவிதைகளும் வரவிருக்கின்ற கதைசொல்லியில் வரும். எழுத்தாளர் எம்.ஜி.சுரேஷ் மூலம் புதுப்புனல் வெளியீடாக 'பன்முகம்' என்ற காலாண்டிதழ் வெளிவரவிருக்கிறது. அதற்கு உடனே அவசியமாக உங்கள் படைப்புகளை அனுப்பி உதவவும்.

முகவரி

புதுப்புனல்

32/2, ராஜி தெரு, முதல்தளம்

அயனாவரம், சென்னை 600023.

அன்புடன்

ரமேஷ் பிரேதன்

• • •

**கடிதம் - 17**

**எழுதியவர் : எழுத்தாளர் கோ.ராஜாராம்**

அன்புள்ள விக்கிரமாதித்யன்,

உடன் 100 டாலருக்கான காசோலை. உங்கள் நாவல் முயற்சி வெற்றி பெறட்டும்.

இனி உங்கள் படைப்புகளை நேரடியாகக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி உதவவும். இங்குதான் திண்ணை பக்கங்கள் உருவாகின்றன. எனக்கு ஏற்கெனவே அனுப்பித் தந்தவற்றையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப முடியுமானால் நல்லது.

செக்ஸ் எழுதுகிறார் என்ற மற்றவர்கள் விமர்சனத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். இந்த விமர்சகர்கள்தான் கட்டுப் பெட்டிகளே தவிர தமிழ் மக்களும் படிப்பவர்களும் கட்டுப் பெட்டிகள் அல்ல. செக்ஸ் பற்றிப் பேசக் கூடாது என்றோ, படிக்கக்கூடாது என்றோ கட்டுப்பாடெல்லாம் உடைந்து போய் ரொம்ப நாளாகிறது.

தி ஜானகிராமன், கு ப ரா, எம் வி வி தவிர மற்ற எழுத்தாளர்கள் எல்லோருமே உடம்பே இல்லாத பாத்திரங்களைத்தான் படைத்து உலவவிடுகிறார்கள். கி ராஜநாராயணன் நாட்டுப்புறவியலின் ஓர் அங்கமாய்த்தான் இப்படிப்பட்ட கதைகளை வைத்திருக்கிறாரே தவிர மைய அலையில் ஒரு பகுதியாய் அதை மாற்றுவதில்லை. நீங்களாவது இந்தக் கட்டுப்பாட்டை உதறிவிடுங்கள்.

முகவரி :

கோ.சாந்தாராம்

சி 6 அயோத்யா அபார்ட்மெண்ட்

30-31 நாயக்கமார் தெரு

மேற்கு மாம்பலம்

சென்னை 600033

நன்றி.

நண்பர்களுக்கு என் அன்பைத் தெரிவிக்கவும்.


மற்ற நண்பர்களின் படைப்புகளையும் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பச் சொல்லலாம். குறிப்பாக அப்பாஸ், சமயவேல், கலாப்ரியா, வண்ணதாசன், வண்ணநிலவன், வேறு உங்கள் நண்பர்களும் கூட.


அன்புடன்

கோ.ராஜாராம்

அக் 21, 2001.

• • •





## கடிதம் - 18

**எழுதியவர் : 'லெமன்' 'மஞ்சரி' பொறுப்பாசிரியர் (ஓய்வு)**

*லெமன்*

*அபிராமபுரம்*

*6/4/2008*

*அன்பார்ந்த நண்பருக்கு,*

*நலம்; நலம் அறிய அவா..*

*நான் மஞ்சரியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு கவிஞர்களையோ எழுத்தாளர்களையோ (அதிகம்) சந்திப்பதில்லை. அவரவர் படைப்புகளைப் பத்திரிகைகளில் சந்திப்பதோடு சரி... மார்ச் 26 – 2008 விகடனில் தங்கள் அருவி ஓர் அதிசயம், தொடரும் அதிசயமாய்த் தங்களோடு என்னைத் தொடர்பு கொள்ள வைத்தது.*

*தங்களுடைய கவிதைத் தொகுப்புகள் கணிசமான எண்ணிக்கையை எட்டியிருக்கும். அவை எல்லாவற்றிலிருந்தும் தனித்து மிளிரும் கவிதைகளைத் தேர்ந்து தனித் தொகுப்பாக வெளியிடலாம்.*

*யாரும் நேற்று எழுதின மாதிரி இன்று எழுதுவதில்லை; இன்று எழுதுவது மாதிரி நாளை எழுதப் போவதில்லை.*

*எல்லார் எழுத்தும் பரிணமித்தவாறே தொடரும், படரும். தங்களைப் போன்றோரின் படைப்புகள் அந்தப் பரிணாமத்துக்குப் பக்கத் துணையாகும்...*

*வாழ்க வளமுடன்.*

*அன்புடன் S லக்ஷ்மணன்*

*3 அபிராமி அபார்ட்மெண்ட்*

*18 முதல் தெரு, அபிராமபுரம்*

*சென்னை – 600018.*

• • •

## கடிதம் - 19

**எழுதியவர் : கவிஞர் சமயவேல்**

*அன்பிற்கினிய நம்பிக்கு,*

*உங்கள் கடிதம் கிடைத்தது. தீபாவளி மலர் வேலைகள் முடிந்ததும் ஊருக்கு வரப்போகிறீர்கள் போல. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் தேதிகளில் ஊரில்தான் இருப்பேன்.*

*எல்லாம் சமநிலையில் இருக்கின்றன. எல்லோருக்கும் என் அன்பு வணக்கங்கள்.*

*அன்புடன்*

*சமயவேல்.*

*பி.கு. :-*

*கௌரிஷ் விளாத்திகுளம் தாலுகா ஆபீசில் வேலை பார்க்கிறார். அவருக்கான அஸ்வினி பணம் etc க்களை விளாத்திகுளம் முகவரிக்கே அனுப்பவும்.*

• • •

## கடிதம் - 20

**எழுதியவர் : கவிஞர் சத்யன்**

*சத்யன்*

*8 NGGO காலனி*

*குடியாத்தம்.*

*அன்புள்ள நம்பிராஜன் அவர்களே!*

*'கிரகயுத்தம்' பிரதியை பதிவுத்தபாலில் மிக்க நன்றியுடன் பெற்றுக்கொண்டேன். நண்பர்களுக்கு சமர்ப்பணம் செய்த கவிதைகள் அதிகமுள்ள தொகுதி இதுதான் என நினைக்கிறேன். உங்கள் எண்ணங்களெல்லாம் கவிதையாக மாறியதால் கவிதையே தங்கள் சர்வகால நினைப்பு எனத் தோன்றுகிறது. (108ம்பக்கம்) சிவன் பற்றிய விசாரம் அதிகமாகத் தென்படுகிறது. அருவி (88) மிகவும் பிடித்திருக்கிறது.*

*குற்றாலத்தில் அக்டோபர் 1 2 3 ல் தங்களைச் சந்திக்க ஆவலாக இருக்கிறேன்.*

*இப்படிக்கு*

*தங்கள் சகஇலக்கியவாதி*

*சத்யன்.*

* *

**பின்குறிப்பு :**

*கவிஞர் சத்யன், கவிஞர் பிரம்மராஜன் நடத்திவந்த மீட்சி சிற்றிதழ் மூலம் கவனம் பெற்றவர். ஒரு கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது.*

- தொடரும் ■

● சேலம் ராஜா



# காமம் செப்பிய தலைவிகள்

உலகில் தினமும் பெண்களுக்கான அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றன. அதற்கு எதிராக அவர்களும் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் எதுவும் மாறியதாக இல்லை. அப்படி அவர்களுக்குக் கிடைக்காத முக்கியமான இன்னொன்றும் இருக்கிறது, அதுதான் காமம். என்ன இது இதையெல்லாமா கிடைக்கவில்லை என்று பெண்கள் கேட்பார்கள் என்று இதை வாசிப்பவர்கள் கூட கேட்கலாம். அப்படி கேட்காத, கிடைக்காத, பேசப்படாத காமத்தை மட்டுமே பேசுபவை இந்திர நீலம் கதைகள்.

உணர்வுகள் பொங்கிப் பெருகி நாளடைவில் மன ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு வழி வகுப்பதற்கு இந்தக் கிடைக்கப்பெறாத காமமும் முக்கிய காரணம். அப்படி சங்க காலத்தில் தொடங்கி நிகழ்காலத்தில் தினந்தோறும் அலுவலகம் சென்று வரும் ஒரு சராசரி பெண் வரையிலான கதைமாந்தர்களைக் கொண்டு மொத்தம் எட்டு கதைகளை உள்ளடக்கிய சிறுகதைத் தொகுப்பாக வந்திருக்கிறது இந்நூல்.

முதல் கதை இந்திர நீலம்.

பேரிளம்பருவத்திலிருக்கும் ஒரு பெண். சிறுவயது முதலே தன்னுடலை முழுவதுமாகக் கூட பார்க்க வாய்க்காத ஒரு குடும்பச் சூழலில் வளர்கிறாள். உறவின் முறை காதல் கணவனோடு தினசரி அலுவல் சென்று வரும் நகர வாழ்க்கை அமைகிறது. குழந்தைகள் பள்ளிப் பருவம் எட்டிவிட்டாலும் தன்னை அழகாக்கி அலங்கரித்துக்கொண்டு தன்னழகைத் தானே ரசிக்கும் ஒரு சூழ்நிலை அமையாத வாழ்க்கை. போதாமைக்கு மோனோபாஸ் பருவம். தன்னுடைய உடம்பு தன்னிடம் என்னதான் கேட்கிறது என்பதையே அவளால் அறிய முடியவில்லை. மருத்துவரிடம் சென்று தன் கணவனிடம் காட்டவேண்டிய உடலைத் திறந்து காட்ட கூச்சம்.

முதலில் தினமும் பலமுறை இருந்த தாம்பத்ய உறவு நாளாக நாளாக இரண்டொரு நாட்களுக்கு ஒரு தடவையென மாறி முதல் குழந்தை பிறந்தவுடன் ஈர்ப்பு குறைந்து பிறகு பத்து நாளைக்கு ஒரு முறையோ அல்லது மாதமொருமுறையோ எனத் தேங்கிப்போனதே இதற்குக் காரணம் என ஒரு கட்டத்தில் கண்டுபிடித்துவிடுகிறாள். பிறகொருநாள் வழக்கம் போல நேரமே வீட்டிற்கு வருபவள் தானே தன்னை அலங்கரித்துக்கொண்டு நேர்த்தியாக உடையணிந்துகொண்டு கணவனுக்காகக் காத்திருக்கிறாள். அன்றும் இவளுடைய உடலுக்கு உணர்வுகளைத் தூண்டியதும் ஒதுங்கிக்கொள்ளும் விதமாகவே அமைகிறது.

தனது சிறுவயது முதல் தற்போது வரை தன்னுடைய கணவனால் எப்படியெல்லாம் அவளுடைய காமம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, கொஞ்சம் வயது முதிர்ந்த பிறகு அதே காமம் எப்படியெல்லாம் கிடைக்கவில்லை என்பதை அவளின் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீடு வரை அலசி ஆராயும் ஒரு மிகச்சிறந்த கதையாக அமைந்திருக்கிறது.

உடல் தேவையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட கதை எனினும் உளவியல் ரீதியாகவும் மனரீதியாகவும் ஒரு பெண்ணை, அவளுடைய பிரச்சனையை முழுமையாகப் புரிந்து கொள்ளலாம் வாசிப்பவர்கள்.

இரண்டாவது கதை, தர்மத்தின் ஆகுதி.

தனது தாயின் சிறு தவறினால் ஐந்து பேருக்கும் மனைவியான திரௌபதி கதை. நேர்மை, ஒழுக்கம், பத்தினி, பத்தினி அல்லாதவளென வரலாறு பல்வேறு முடிச்சுகளை அவள் மீது பதிய வைத்திருக்கிறது. ஆனால் விரும்பியவனோடு வாழாமலும், விருப்பப்பட்டு அழைக்கிறவனோடு செல்ல முடியாமலும் திரௌபதி எப்படி தவித்திருப்பாள் என்பதை யாருமே பேசியதில்லை. எப்படி உருகி உருகி காதலித்தாலும் அது நிறைவு பெறுவது என்னவோ காமம் எனும் முற்றுப்புள்ளியில்தானே? அப்படி அவளுடைய தவிப்பையும் உணர்வையும் புனைந்து தத்தளிக்கும் கதை ஒரு கட்டத்தில் இதுதான் உண்மையோ எனக் கூட நம்ப முடியுமளவிற்கு இருக்கிறது.

அடுத்த கதை, சிலம்பின் ரகசியம்.

காதல் கணவன் கோவலன் பிரிந்து சென்ற பிறகு கண்ணகியின் பரிதவிப்பும் தீண்ட ஆளில்லாத தன்னழகையும் நினைத்து எப்படி மருகியிருப்பாள் என்பதாகவும் நகர்கிறது இந்தக் கதை. அவனோடு சென்ற வழித்தடங்களையும் இயற்கையையும் விவரிக்கும் விதம் குறித்தும் ஆசிரியரின் மொழி நடை சிலாகிக்க செய்கிறது.

அதற்கு பிறகு, கண்ணனிடமிருந்து வெளியேறாத கோபியர்கள். தங்களுக்கென கணவன்மார்கள் இருந்தாலும் மாயக்கண்ணனின் புல்லாங்குழல் இசைக்கு மயங்கித் தவிக்கும் கோபியர்கள். அவனே ஆயுள் முழுவதும் நம்மை ஆள மாட்டானா, பித்துப்பிடிக்கவும் வைத்துவிட்டுத் தொட்டுப்பார்க்காமல் கூட சென்று விடுகிறானே, இத்தனை பேரின் தவிப்பை அறியவே மாட்டானா என்ற ஏக்கத்துடன் நிறைவுபெறுகிறது.

அட்சயப்பாத்திரத்தின் பசி. இந்தக் கதை சற்றே வித்தியாசம் நிறைந்தது. கோவலன் சென்ற பிறகு கண்ணகியின் பரிதவிப்பை ஏற்கனவே எழுதியவர், கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையை மையப்படுத்தி எழுதியிருக்கிறார். கோவலனின் மறைவுக்குப் பின் மாதவி தனது மகளைப் புத்த துறவியாக வளர்க்க நினைக்கிறாள். ஆனால் மணிமேகலையோ உதயகுமரன் மீது காதல் மயக்கத்தில் இருக்கிறாள். அவனை மணந்துகொண்டு அரண்மனையில் மகாராணியாக வாழ்வதா அல்லது அம்மாவின் சொல்படி மணிபல்லவ தீவிற்குச் சென்று காலந்தோறும் புத்த துறவியாக வாழ்வதா என்று குழம்பி நிற்கிறாள். முடிவில் துறவியாக மாறிவிட்டாலும் அந்தக் காதலை, அவளுக்குக் கிடைக்கவே படாத இல்லற சுகத்தை, திரிசங்கு நிலைக்குத் தள்ளப்பட்ட பெண் மனதை ஒரு கண்ணாடி போலவே வாசகனுக்குக் கடத்தியிருக்கிறார் ஆசிரியர்.

என்புதோல் உயிர்.

சைவ சமய நாயன்மார்களில் வணிக குலத்தைச் சேர்ந்த மூன்று நாயன்மார்களில் ஒருவரான புனிதவதி (அ) காரைக்கால் அம்மையாரை எல்லோருக்கும் தெரியும். பரமதத்தன் கொடுத்த மாங்கனியால் ஏற்பட்ட பிரச்சனை, அதன் பிறகு துறவு வாழ்க்கை மேற்கொண்ட கதை வரலாற்றை இன்று வரை தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் ஒருவனுக்கு மனைவியான பிறகு கணவனால் கைவிடப்பட்ட ஒருத்திக்கு எவ்வளவு இன்னல்கள் வரும், இனிமேல் வாழ்க்கையில் தனது கணவனின் அருகாமையே கிடையாது, இல்லறச்சுகமும் இல்லையென்பதை எந்த வரலாறு பேசியிருக்கிறது? அதைப் பேசுகிறது இந்த என்புதோல் உயிர்.

நித்திய சுமங்கலி.

பெருமாளுக்கு சேவகம் செய்ய பொட்டு கட்டி விடப்பட்ட நக்கனின் கண்டுகொள்ளவே படாமல் வீணாகும் இளமையைப் பேசுகிறது இது. கடவுளின் மனைவி எனும் அடையாளம் உள்ளதால் வேறு ஆண் தவறாகப் பார்க்க முடியாது. இளமை ததும்பி நிற்கும்போது கல்லாலான கடவுளிடமும் எதையும் சொல்ல முடியாது. ஒருபுறம் தவிப்பையும், மறுபுறம் பெருமாளின் மீதான காதலையும் அடக்கி வைத்தபடி தன்னுடைய இளமையைக் கொல்லும் பெண்ணின் அகத்தைப் பேசுவதாக அமைந்துள்ளது.

விலக்கப்பட்ட கனி.

சிலுவையில் அறைந்த மூன்றாம் நாள் இயேசு கண்விழித்தபோது பாவங்கள் செய்ததாகக் குற்றஞ்சாட்டி கொல்லப்பட்ட ஒரு தாசி இயேசுவிடம் முறையிடுவதாக அமைந்த புனைவு.

எல்லாக் கதைகளும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சூழலில் நடந்தாலும் அனைத்துக் கதைத் தலைவிகளும் தன்னுடைய கைவிடப்பட்ட அல்லது கண்டுகொள்ளப்படாத உடலுணர்வு சார்ந்து மட்டுமே பேசுகின்றனர்.

அந்தக் காலத்திற்கான மொழியிலேயே சொல்வதால் சுவாரசியமாக வாசகரைக் கதைக்குள் இழுத்துச் சென்றுவிடுகிறார். நிறைய பழங்காலப் பொருட்களின் பெயர்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. நிலத்தை, பூக்களின் பெயர்களையும் தெரிந்துகொள்ள முடிகிறது. நிறைய தரவுகளைத் திரட்டித் தந்திருப்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக தலைப்பு கதை தவிர மற்ற அனைத்தும் வரலாற்றுக் காலத்தில் நிகழ்பவை. அதைக் கொஞ்சமும் பிசகாமல் தற்காலத்திற்கு நிகழ்வைக் கடத்தித் தந்ததைப் படிக்கும்போது காமம் செப்பிய தலைவிகளின் சொற்கள் கண்முன் விரிகின்றன.

இன்றைய இலக்கிய வெளியில் பெண்கள் நிறைய எழுத வந்திருக்கிறார்கள். ஆனாலும் யாருக்கோ எதற்காகவோ நினைத்ததை எழுதாமல் தயங்கி தொக்கி நின்றுவிடுவார்கள். அதிலும் காமத்தை இவ்வளவு நுணுக்கமான பார்வையில் அணுகி ஒரு பெண் எழுதியதை எனக்குள்ள சிறிய அனுபவத்தில் நான் இதுவரை படித்ததில்லை.

'காமம் செப்பல்' என்று தன்னுரை தந்து மற்றவர்கள் பேசாததைப் பேசியதற்கு அவருக்கு ஒரு ராயல் சல்யூட்.

**நூல் : இந்திர நீலம்**

**ஆசிரியர் : அ. வெண்ணிலா**

**வெளியீடு : அகநி**

**விலை :150**

ஓவியங்கள் : அன்பழகன்



ஆண்டாண்டு காலமாய்
அமிழ்த்தி வைக்கப்பட்ட
அகச்சுடரொன்றின்
சுவாலைகள்
ஆதவன் முன்
அவதானிக்கப்படுவதில்லை.
காற்றாய் மழையாய்க்
கலைத்துப் போடவும்
காணாமலாக்கவும்
ஆயிரம் காரணிகள்.
புறத்தே அணைந்தாலும்
பொலியும்
அகக்கங்குகள்.
அடுத்தடுத்துக் கடத்தி
ஆரவாரமாய்
ஒளிரும் அகண்ட சோதி.
ஆதியும் அந்தமுமாய்
அனைத்தும் அவளேயாகி
ஆசுவாசிக்கிறாள்
அவள்..

- மதுரா

## முள் மீது பூத்திருக்கும் காலம்

அதிகாலை
கோலமாவிற்குள்
மடிந்து கிடக்கும் சொற்கூட்டங்களை
எறும்புகள் கவ்விச் சென்றுகொண்டிருக்கின்றன

சிறகுகள் முளைத்த சருகுகள்
காற்றில் கண நேரம் பயணிக்க
வாழ்தல் என்னும் சிறகடிப்போ
ஆயுள் பரியந்தம்

வார்த்தை என்னும் சீட்டுக்கட்டிற்குள்
நுழைந்துவரும் மூச்சுக்காற்று
அதைக் கலைத்துப் போடுவதற்கும் முன்பு

உருட்டிவிட்ட சோழி
கடைசி தலைச்சுற்றலை
நிறுத்திவிடுவதற்கும் முன்பு

பிரியமானதொரு முகத்தில்
படர்ந்திருக்கும் வேதனை
உன்னை ஊழிக்காலத்திற்கு
அழைத்துச் செல்கிறது

சிட்டுக்குருவியின் கீச்சுக்குரல் போல
தொடர்ந்து உன்னோடு
உரையாடிக்கொண்டிருந்த இதயம்.
சட்டென்று கனத்த மௌனத்தில்
மோனச்சமாதி கொள்கிறது

பதிலுக்கு நீ ஒரு
துர்அதிர்ஷ்ட புன்னகை பூக்கிறாய்
உடைந்த அப்பளம் போல நொறுங்கிவிடுகிறது
மனது
முள் மீது பூத்திருக்கும் காலம்
நமக்கு சொந்தமாகிறது

- தங்கேஸ்

ஓவியங்கள் : அன்பழகன்

என்றோ கண்ணாமூச்சி
விளையாடும்போது
பின்புற ஆடையில்
ரத்தக்கறை இருப்பதாகச் சொல்லி
கோவிந்த் சிரித்தான்
அதை அம்மாவிடம்
காட்டிய பிறகு
கண்ணாமூச்சி ஆட்டத்தை
அம்மா தொடரவிடவில்லை..
அதன்படி வந்த
ஒவ்வொரு மாதத்திலும்
ஆடையின் பின்புறத்தில்
ரத்தக்கறை சிரிக்கும்
கண்ணாமூச்சி
ஒளிந்துகொள்ளும்
கோவிந்தும் வசந்தும்
ஆட்டத்தைத் தொடர்வார்கள்
அம்மா கறைகளை
கழுவிக்கொண்டிருப்பாள்
பின்புற ஆடையில்
ரத்தக்கறை கண்ணாமூச்சி
ஆடிக்கொண்டிருக்கும்போது
கோவிந்தும் வசந்தும் மகன்களுடன்
கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்
அம்மா புகைப்படத்தில்
சிரித்துக்கொண்டிருக்கிறாள்
நான் மகளின் ஆடையில் பட்ட
ரத்தக் கறைகளை
கழுவிக்கொண்டிருக்கிறேன்!

– சாய்வைஷ்ணவி

போதையில் ஓட்டிய வாகனம்
காயம்பட்டு நிற்கிறது
சாலையோர மரம்

– கே.பாலன்,
வடக்கத்தியான் பட்டி-மதுரை

## நிறைவின் நிம்மதி...

கிடைத்துவிட்டது இந்த வாழ்வின் உச்ச நொடிகள்...
ஒரு யுகத் தேடலின் நிறைவு...
முடிவற்ற முகூர்த்தம்...
தெய்வ சங்கல்பம், தேவ தருணம்...
விவரிப்பற்ற விருப்பம், என் விழுது...
இல்லை இனி அடுத்த பிறவி...

ஆத்ம அமைதிக்குப்பின் எதற்கு மூச்சு...
என்னைத் தெரிய வேண்டாம் உனக்கு...
உயிர் கேட்டா உதவுகிறது காற்று...

இந்த ஜோதி சுடர் காதல்தான் எனில்...
யாராவது மூடிவிடுங்கள் இமைகளை...
எனக்குப் போதும் எல்லாம்...!!!

– கிறிஸ்டினா அருள்மொழி



சிறுகதை

- உஷாகனகு
- ஓவியம் - அழ.ரஜினிகாந்தன்



# நகரும் நினைவில் கானல் வீடு

முன்பனிக்காலச் சூரியன் இரவினைச் செரித்துமுடிக்க, மிச்ச இரவின் துளிகள் அங்கங்கே கரைந்துகொண்டிருந்தன. சூரியனின் வெப்பக் கைகள் தன் விரல்களை வானில் பரப்பியபடி வலம் வரத்தொடங்கியது.

அஃறிணைகளுக்கு இரையைத் தேடும் வழக்கமான நாளாகவும் இந்த மனிதர்களுக்கு மட்டும் மகிழ்ச்சி கவலை பரிதவிப்பு என விதவிதமாகவும் படைக்க விடிந்தது. மக்களுக்கு வீடு என்பது வீடு மட்டுமல்ல உணர்வுகளின் உறைவிடம். அப்படியானதொரு வீட்டில் விடிய விடிய விழிகள் விழித்திருந்து சமைந்திருந்தாள் பஞ்சவர்ணம்.

பக்கத்து வீட்டு முத்தக்கா பஞ்சவர்ணத்தின் தோளைக் குலுக்கி, 'இந்தாம்மா இந்தா காப்பி தண்ணீ.. குடி. நேற்றிலிருந்து எதுவும் சாப்பிடல. பச்சப்புள்ள காரி வேற' என்று கரிசனம் காட்ட, பெற்ற பிள்ளைகளுக்கு ஒன்றும் கொடுக்க வழியில்லை, எனக்கு எதுக்கு என்ற அவளின் பார்வையை உணர்ந்து 'பிள்ளைகளுக்காவது ஆத்திக் கொடு' எனப் பக்கத்தில் வைத்துவிட்டு விடுவிடுவென நகர்ந்துவிட்டாள் முத்தக்கா. காபியை இரண்டு டம்ளரில் மாறிமாறி ஆற்றினாள். அப்போது அவள் மனதில் இது மாதிரிதானே பொம்பள பொழப்பு புருஷன் வீட்டுக்கும் ஆத்தா வீட்டுக்கும் என மனம் ஆற்றாமையால் குமுறியது. காப்பியைக் குழந்தைகளுக்குக் கொடுத்தாள்.

மகளை இடுப்பில் இடுக்கியபடி மகனுக்கு முகம் கை கால் கழுவி அப்படியே தெருவில் இறங்கி நடந்தாள். நேற்றைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக அலைகளாக மனதின் கரையைத் தொட்டுத் திரும்பியது. கால்கள் செவ்வனே எட்டுகளைத் தொடர்ந்தது. கண்கள் கண்ணீரைச் சிந்தவில்லை. கண்ணீர் சுரப்பிகள் அதிகமாய்ச் சுரந்து இப்போது வற்றிப்போய்க் காய்ந்துகிடந்தது.

அளவுகடந்த கஷ்டங்களை அனுபவித்ததால் முகம் இறுகிப்போய்க் கிடந்தது. குழந்தையானது நூல் கொண்டு தனது பொம்மையைக் கட்டிவிட்டுத் தரையில் தரதரவென இழுத்துச் செல்லும். அதுபோல் மகனைக் கைபிடித்து இழுத்துச்

சென்றாள். சந்திரனோ தனது அம்மாவின் கையை இறுகப் பற்றியபடி அம்மாவின் நடைக்கு ஈடு கொடுத்து நடக்க முடியாமல் ஓட்டமும் நடையுமாய் ஒரு கண் தெருவிலும் ஒரு கண் பையிலும் நடந்தான். நம்முடைய கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளலாம். ஆனால் மற்றவர்கள் பார்க்கும் பார்வையில் ஒவ்வொரு நிமிடமும் ஓராயிரம் முறை இறந்து பிறந்துவிடலாம். இனி ஆக வேண்டியதைப் பார்ப்போம் என்று ஒரு ஏக்க பெருமூச்சை இழுத்துவிட்டாள்.

அவள் சென்ற தெருவில் பஞ்சவர்ணத்தின் கால்கள் தொட்டு நின்றது பள்ளிக்கூடத்தை. தலைமை ஆசிரியர் சந்திரனையும், அவனின் அம்மாவையும் மாறி மாறிப் பார்த்தார்.

பஞ்சவர்ணம் பூகம்பத்திற்குப் பின்னான அமைதியைத் தத்தெடுத்து இருந்திருந்தாள். ஆசிரியர் ஒரு மாணவனை அழைத்து ‘சந்திரனுக்கு ஒரு யூனிஃபார்ம் எடுத்துக்கொடு. அப்புறமாய் ஆயாகிட்ட ரெண்டு இட்லி வாங்கச் சொல்லி அதை அவன்கிட்ட கொடுத்துச் சாப்பிடச் சொல்லு’ எனச் சொன்னார். அந்த மாணவனும் சந்திரனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான். ‘இப்போ சொல்லுமா’ எனப் பஞ்சவர்ணத்தைப் பார்த்தார் ஆசிரியர்.



‘திரும்பவும் என்னோட புருஷன் பிரச்சினை பண்றாங்க சார். எங்க ஆத்தாவும் என் அக்கா மாப்பிள்ளையும் பஞ்சாயத்து பேச வராங்க சார். இன்னைக்கு முழுசும் தம்பி பள்ளிக்கூடத்துல இருக்கட்டும். நான் வந்தா மட்டும் என்கூட அனுப்புங்க. அவுங்க அப்பா வந்தா கூட அனுப்பி விடாதீங்க சார்’ எனக் கைகளைப் பிசைந்தபடி மன்றாடினாள். ‘சரிமா நான் பார்த்துகிறேன் நீ போமா’ என்று பஞ்சவர்ணத்தை அனுப்பி வைத்தார்.

திரும்பி நடக்கும்பொழுது அவள் நினைவிலும் நேற்றைய பொழுதுகள். அதில் நெருப்பு கனன்று கொண்டிருந்தது. பின்பகுதியில்ஆஸ்பெட்டாஸ் முன் பகுதியில் கூரை வேய்ந்த குடிசை வீடு என இரண்டும் கலந்து இருந்தது பஞ்சவர்ணத்தின் வீடு. அதில் மாயாண்டி பஞ்சவர்ணம் இருவரின் உழைப்பும் இருந்தது. வீட்டின் வேட்கையை விட வெட்கம் அதிகம் கொண்ட வீடு.

அவளின் அழகும் அவனின் அன்பும் பத்துக்குப் பத்து அறை முழுதும் நிரம்பி வழியும். வேலைக்குச் சென்று வந்த பின் அவன் கை வளைவில் கன்ன கதுப்புகள் செம்மை சிந்தும் வண்ணம்பூசும்.

வாழ்க்கையை இன்பம் மட்டுமே சுற்றியிருந்த நாட்கள். மெல்ல மெல்ல அவனின் சுயரூபம் வெளி வந்தது. வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருப்பது, பின் கஞ்சாவுக்கு அடிமையாவது என ஒவ்வொன்றாகக் கூடி இறுதியில் இடி என இறங்கியது அவனின் பெண் பித்தன் குணம். அதை உணர்கையில் காலம் கடந்து, கையில் இரு குழந்தைகளுடன் நிற்க வைத்திருந்தது.

பஞ்சவர்ணத்தின் அம்மாவும் மாமாவும் வந்து சேர்ந்தனர். அவர்களை வரவேற்றது என்னவோ எரிந்த வீடு மற்றும் தெருவில் நின்ற மகளும் பேத்தியும். அதைப் பார்க்கையில் “ஐயோ போச்சே” என மாரில் அடித்து ஒப்பாரி வைத்து மகளின் வாழ்வை எண்ணிக் கலங்கி அழுதார். ‘என் மருமகன் எங்கம்மா’ எனக் கேட்க நடந்த நிகழ்வை விவரித்தாள் பஞ்சவர்ணம்.

குடித்துவிட்டு வந்து இருந்தான் மாயாண்டி. தூங்கிக்கொண்டிருந்த மனைவியைக் காலால் மிதித்து ‘புருஷன் இன்னும் வரலையே அவனுக்கு காத்துக்கிடக்கணும். வந்தா சோறு வைக்கணுமுன்னு எண்ணமில்ல. உனக்குத் தூக்கம் கேக்குது, சொகுசு கூடிப்போச்சு உனக்கு’ என மாறி மாறிக் கன்னத்தில் அறைந்தான். ஊமையாய் உள்ளம் அழுக சுவரை ஒட்டிக்கொண்டாள். ‘சோறு பொங்க வழி இல்ல, உன் வீட்டில் இருந்தாவது கொண்டு வரலாமில்ல. சொகுசு மட்டும் வேணும்’ எனச் சொல்லிக்கொண்டே சிகரெட்டைப் பற்ற வைத்தான். பற்றிய நெருப்புத் துண்டு போல அவன் மூளையும் கிறுக்குத்தனமாக யோசிக்க மாயாண்டியின் கண்கள் எதையோ தேடிச் சென்றது. அப்போது சிக்கிய கேனில் கொஞ்சமாக இருந்த மண்ணெண்ணெயை எடுத்து அவன் சடசடவெனக் கூரையில் ஊற்றிப் பற்ற வைத்தான். நெருப்புக்கு இரை ஆனது அவர்கள் வீடு. பதறிய பஞ்சவர்ணம்

குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டு மகனை சட்சட்என அடித்து எழுப்பி வெளியே ஓடினாள். என்றாவது விழும் வால் நட்சத்திரம் போல் அவர்களின் கூரையும் எரிந்து முடிந்தது. அதற்குள் மக்கள் கூட்டம் கூட்டமாக கூடினர். ஆனால் மாயாண்டிக்குப் பயந்து அவளிடம் பேசவோ இவர்களுக்கு ஆதரவாகவோ இல்லாமல் அவர்கள் அவர்களுக்குள்ளாகவே குசுகுசுவெனப் பேசித் தீர்த்தனர்.

அப்போது தெரு நாட்டாமை கோவிந்தன் வந்தார். அறுபது வயதைத் தொடும் மனிதர். எனினும் கிடா மீசையும் மம்பட்டி பிடித்த கைகளும் எதிரே உள்ள ஆண்களை யோசித்துப் பேசச் செய்யும். 'தாயே எங்க வீட்டுக்கு வா. முத்தக்காவும் என் பிள்ளைகளும் இருக்குது. வீட்டுக்கு வெளியில நான் காவல் இருப்பேன். தைரியமாக வாம்மா. இன்னைக்கு ராத்திரி மட்டும், காலையில மத்ததைப் பேசிக்கலாம். சரியா' எனக் கூறி 'முத்து... பஞ்சவர்ணத்தையும் அவுங்க பிள்ளைகளையும் கூட்டிட்டுப் போ' எனப் பிரச்சனையை அப்போது முடித்து வைத்தார்.

ஆசிரியர் சந்திரனிடம் 'வீடு முழுசும் எரிஞ்சுட்டு உன்னோட பை மட்டும் எப்படி வந்தது' எனக் கேட்டார். 'ராத்திரி படிச்சிட்டுத் தலைமாட்டில் வைத்துத் தூங்கிட்டேன். அம்மா எழுப்பும்போது பையத் தூக்கிட்டு வந்துவிட்டேன்' என்று சொன்னான். சந்திரனின் படிப்பும் ஊசலாடிக்கொண்டிருந்தது. இங்குமங்குமாக படிப்பும் பயணித்தது. சந்திரன் ஆசிரியரிடம் 'ஏதோ ஹாஸ்டல் சொன்னிங்களே சார். சேர்த்து விடுறீங்களா? எனக்கு இந்த ஸ்கூல் ரொம்ப பிடிச்சிருக்கு. ஹாஸ்டல்ல இருந்து கிட்டே இங்க அஞ்சாப்பு வரைக்கும் படித்து முடித்துவிடுவேன். அப்போ இன்னும் பெரிய பையனா வளர்ந்திடுவேன். அப்போ எங்க அப்பாவ சமாளித்துவிடுவேன் சார்' எனச் சொல்ல ஆசிரியருக்குத் தான் என்ன சொல்வது என்று தெரியவில்லை, 'சாயந்தரம் என்ன செய்வோம் என்று சொல்றேன், இப்ப படி' என்று யோசனையில் ஆழ்ந்தார்.

ஆசிரியருக்கும் தெரியும் பஞ்சவர்ணத்தின் கஷ்டங்கள். இந்த மூன்று வருடங்களில் அவர்கள் பிழைப்பதற்காக அவரால் ஆன அத்தனை உதவியும் செய்து வந்தார். கையில் இருக்கும் பிள்ளைகள் போக தொடர்ந்து மூன்று முறை கருக்கலைப்பு செய்துவிட்டு உடல்நிலை சரியில்லை, சாப்பிட வழியில்லை என வரும்போது அரிசி, பருப்பு எனக் கொஞ்சம் ஏற்பாடு செய்து தந்தார். ஒருமுறை உடலெங்கும் அடிவாங்கி காயங்களாக வந்தபோது மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து உதவி செய்தார். திரும்பத் திரும்ப புகார் அளிக்க அவர்கள் 'ஒரு குடிகாரனை ஸ்டேஷனுக்குக் கூட்டிப்போயி என்ன செய்ய சார்? நாள் முழுவதும் கஞ்சா போதையில் இருக்கிறான். அவனுக்கு ஏதாவது ஆச்சுன்னா ஸ்டேஷனுக்கு பிரச்சனை சார்' என்று சொன்னதால் அந்த முயற்சியைக் கைவிட்டார். இப்போது மீண்டும் அதே நிலை வீரியம் அதிகம்.

விடிந்து இவ்வளவு கலவரங்களுக்குப் பிறகு மாயாண்டியைத் தேட, அவனோ சாக்கடைக்குள் விழுந்து கிடந்தான். அதுவும் அலங்கோலமாகக் கிடந்தான். இன்னும் போதை தெளியவில்லை. மாயாண்டி மேல் அங்கு உள்ள ஆண்கள் தண்ணீர் ஊற்றிய பின் எழுந்து நிகழ்வுக்கு வந்தான். பேசிய பஞ்சாயத்து பிசுபிசுத்துப் போனது. எல்லா முடிவுகளும் சுபம் போட விடுவதில்லை. பஞ்சவர்ணம் நிரந்தரமாக அம்மா வீடுதான் எனப் பேசி முடிவெடுத்தனர்.

பஞ்சவர்ணம் பஞ்சாயத்தில் எடுத்த முடிவினை ஆசிரியரிடம் கூற அவரும் 'உயிர் ரொம்ப முக்கியம். அதை முதலில் காப்பாத்திக்கோங்க. எங்க இருந்தாலும் சந்திரன் படிப்பான், கவலைப்படாதீங்க' என்று கொஞ்சம் பொருளுதவி செய்து அனுப்பி வைத்தார். பாட்டி ஊருக்கு அவர்கள் பயணம் தொடர்ந்தது. பேருந்து பல ஊர்களைக் கடந்து சென்றது. வழியில் பார்த்த ஊரில் அவர்களின் வீட்டைப் போலவே ஆஸ்பெட்டாஸ் மற்றும் கூரையும் கொண்ட வீடு ஒன்றைக் கடக்க 'நம்ம வீடு மாதிரி இருக்குல்ல' என்றான் சந்திரன். நகர்வின் நினைவில் அவர்கள் வீடு பிம்பமாக வழி எங்கும் பயணிக்கிறது. ■

● தங்கத்துரையரசி

# நூறாண்டு கண்ட செப்பறை நாயகர்






**நூ**றாண்டுகளைக் கடந்தும் மக்களின் எண்ணத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை கைவிரல்கள் கொண்டே எண்ணிவிடலாம். அவர்களை நினைவூட்ட அவர்கள் இட்ட தடம் மானுடத்தின் மேன்மையைப் பறைசாற்றும். தேசத்தந்தை காந்தி என்றால் அவரது கைத்தடி, தந்தை பெரியார் என்றால் அவரது நடைக்கம்பு. தேசியக்கவி என்றால் முறுக்கு மீசை.

அந்த வரிசையில் இலக்கிய நூற்றாண்டு நாயகர் வல்லிக்கண்ணன் என்றால் அவர் தொட்டுப் பார்த்து விட்டுச் சென்றிருக்கிற இலக்கிய ஆளுமைகள் முன் நிற்கிறார்கள்.

காது விடைத்த வல்லிக்கண்ணன் முகத்தை ஒட்டித்தான் எத்தனை முகங்கள் வரிசையாக வருகின்றன. சாதாரண எளிய வாழ்க்கையை மேவி எல்லோருடனும் வாழ்ந்த, வாழவைத்த இலக்கிய ஒப்பரவு அவர்.

வாழ்தல் உயிர்களின் பொது வேட்கை எனில் சமத்துவத்துடன் வாழ்தல் அவற்றின் பெருவேட்கை. கலையும், இலக்கியமும் சமத்துவத்தைக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

முதன்முதலில் இலக்கியம் வழி சமத்துவத்தை வேண்டி நின்றவன், விதைத்தவன் பாரதி. அவன்வழி நின்று அவ்வகைப் பயிர் விளைவித்தவர்கள் மக்களின் உரிமைப்பசி தூண்டி உணவும் இட்டிருக்கிறார்கள்.

வாழ்ந்த தடம் பல நூற்றாண்டுகள் தாண்டியபின்னும் அழியாதபடி வாழ்ந்தோர் பலர். தலைமுறைகளை விட்டுச் சென்றவர்களைவிட தலைமுறைகளை உருவாக்கியவர்களை இவ்வையம் என்றும் தன் நினைவில் இருத்திக்கொள்வதில் பெருமைகொள்ளும். அப்படி இலக்கிய உலகில் பல தலைமுறைகள் பேசும் இளம் தலைமுறைகளைத் தன் பாராட்டும் அணுகுமுறையால் உருவாக்கிய ‘எழுத்து விவசாயி’ திரு. வல்லிக்கண்ணன்.

பரணி பாடி தாமிரநதி ஒரு ‘ஒய்யாரி’ என நடந்து பசும்நெல்வயல்களையும், பால்குளங்களையும் உருவாக்கியிருக்கும் ‘நெல்லைச்சீமையின்’ இராஜவல்லிபுரத்து இலக்கியப் பெருந்தாகம், அவ்வூர் சுப்ரமணியப்பிள்ளை - மீனாராசன் தம்பதிகளின் கருவில் திருவானது. அது 12-11-1920.

எல்லாக் குழந்தைகளையும் போலவே அத்திருவும் தன் தந்தையைக் கதாநாயகனாகக் கண்டது. தந்தையின் நண்பர், நாவலாசிரியர் அ.மாதவய்யா அவர்கள் கதையெழுவது குறித்த பேச்சுகள் செவிவழியாகவும் அவர் நடத்திய ‘பஞ்சாமிர்தம்’ பத்திரிக்கையின் சில இதழ்கள் கண்வழியாகவும் அதன்

கருத்தில் நிறைந்தன. ஒரு 'எழுத்து விவசாயி' உருவாவதற்கான விதை அதற்குள் விழுந்தது அப்போதுதான்.

அம்மா கூறிய 'மகனுக்குப் பொன் வேண்டும்' போன்ற நாட்டுப்புறக்கதைகளும், பேய்பிசாசு குறித்த கதைகளும், அப்பா கூறும் விதவிதமான கதைகளும், சொந்த அனுபவங்களும், அப்பாவின் சேவகரான ஒருவர் கூறிய மந்திர தந்திரக் கதைகளும், புராணக்கதைகளும், நான்காம் வகுப்பு ஆசிரியர் ராமசாமிப்பிள்ளை கூறிய கஸபியான்கா, பிலிப்ஸிட்னி போன்ற லட்சியமாந்தர்களின் கதைகளும் கூட கதைகள் நோக்கி அவரை மேலும்மேலும் ஈர்த்தன. பிறகு அவர் படித்த புத்தகங்கள் அவ்வீர்ப்பைத் தக்கவைக்க, அத்தாகம் தணிய உதவின. ஆனந்தவிகடனும் கல்கியும் நல்லபல கதைகளை வெளியிட்டு அச்சிறு உள்ளத்தின் கதைத்தினவை மேலும் வலுப்படுத்தின.

பத்து வயதில் தகப்பனை இழந்தபிறகு பதினாறு வயதில் கவிதைகளும் கதைகளும் தோளில் ஏற்றிக்கொண்டன. பள்ளியிறுதி வகுப்போடு பள்ளிப்படிப்பு விடைபெற்றது. அவரது 'இதய ஒலி' கையெழுத்து இதழ் பிறந்தது.

முதல் சிறுகதை 'சந்திரகாந்தக்கல்' ஒரு அதீத கற்பனை மிகுந்தது. எதிர்மறையான தலைப்பாக இருந்தாலும் கூட 'கோவில்களை மூடுங்கள்', 'அடியுங்கள் சாவுமணி', 'எப்படி உருப்படும்?', 'கொடு கல்தா' போன்ற கதைகளில் அவருள் இருந்த கோபக்கார இளைஞனை 'கோரநாதன்' என்ற பெயரில் உலகுக்கு அடையாளம் காட்டினர். புனைபெயர்களிலும்கூட சமூகத்தின் மீதான அந்தக் கோபமும் தெறிக்கப் புனைகிறார்- 'நையாண்டி பாரதி', 'மிவாஸ்கி', 'வேதாந்தி', 'பிள்ளையார்', 'தத்துவதரிசி', 'அவதாரம்' எத்தனை எத்தனை?

வேளாண்மை விரிவாக்கப்பணியில் இருந்து கிடைத்த ஊதியத்தின் பெரும்பகுதி நூல்களாகியது. இலக்கிய தாகம் பெருகி மோகமானது. அதை மோகம் என்பதா ஆவேசம் என்பதா என்று பிரித்தறிய முடியாததாகவும் இருந்திருக்கக்கூடும்.

குடும்பச்சூழல் இலக்கிய ஆர்வத்தில் இடையிட்டபோது ஒருவரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் ஊரைவிட்டு சென்னை செல்ல நடைபயணமாகவே கிளம்பியதை 'ஆவேசம்' என்று கொள்ளலாம்தானே? இந்த ஆவேசத்தை உலகளாவிய புகழ்பெற்றவர்களின் செயல்பாடுகளைப் பற்றி படித்திருந்ததால் சிந்தனையில் ஏற்பட்ட தாக்கம் கொடுத்திருக்குமோ?

இப்படித் துவங்கிய அவரது இலக்கியப்பயணம் புனைவுகள், அபுனைவுகள், சிற்றிதழ்கள், திறனாய்வு, புதுக்கவிதை என்று ஒன்றைத்தொட்டு ஒன்று தொடரலானது. கிருஷ்ணசாமி என்ற இயற்பெயரும் மாறி சொந்த ஊரின்பெயர் 'வல்லி'யோடு தன் செல்லப்பெயர் 'கண்ணன்' உடனிணைந்து 'வல்லிக்கண்ணன்' என்பதே இலக்கிய உலகம் அறிந்த பெயரானது.

75க்கும் மேற்பட்ட நூல்கள், இரு வரலாற்று நூல்கள், கட்டுரைத்தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்புகள், மொழிபெயர்ப்புகள், நாவல்கள் என்று தமிழ் இலக்கிய உலகிற்கு இவர் அளித்த கொடைப் பட்டியல் நீண்டது.

கவிதைகளைப் பொறுத்தமட்டில் எல்லாக் கவிஞர்களையும் போலவே ஆரம்பகாலத்தில் அழகு, திங்கள், அந்திவானம், மழை இவற்றையெல்லாம் பாடினார். இவருடைய கவிதைகளில் பெரும்பாலானவை காட்சிக் கவிதைகளாகவே அமைந்திருந்தன. அழகுணர்ச்சி மிகுந்தவையாக அவை இருந்தன. பின்னர், நாட்டின் ஒருமைப்பாட்டைக் காணும் வகையிலும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளைச் சாடும் வகையிலும், தொழிலாளர் நலம் நாடும் வகையிலுமாக அவருடைய கவிதைகள் இருந்தன. அன்றைய மானுட வாழ்க்கையின் அவல நிலை கண்டு வெதும்பி குமுறிய அவரது உள்ளத்தின் வடிகால்களாக அவரது கவிதைகள் அமைந்திருந்தன. அமரவேதனை, புதுக்குரல்கள் உள்ளிட்ட அவரது கவிதைத் தொகுப்புகள் இன்றளவும் பேசப்படுவன.

சிறுகதைகளைப் பொறுத்தமட்டில் 19 சிறுகதைத் தொகுப்புகள் வெளியிட்டிருக்கிறார். இவரது ஆர்மேனியன்

சிறுகதைகள் என்ற மொழிபெயர்ப்பு குறிப்பிடத்தகுந்தது. கல்யாணி, மத்தாப்பு சுந்தரி, ராதை சிரித்தாள், ஒய்யாரி, அத்தை மகள், முத்தம், ஆண் சிங்கம், அருமையான துணை, மனிதர்கள், வள்ளல் தனம், பெரிய மனுசி உள்ளிட்ட பல்வேறு சிறுகதைகள் குறிப்பிடத்தகுந்த கவிதைகளாக இன்றைக்கும் நினைவுகூரப் பெறுகின்றன. இவருடைய பெரிய மனுஷி என்ற கதை, ‘ஸ்டோரீஸ் பிரம் ஏசியா டுடே’ என்னும் உலகளாவிய சிறுகதைகளின் தொகுப்பில் இடம் பெற்றிருந்தது சிறப்புக்குரியது. இத்தொகுப்பிற்கென இந்திய மொழிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே கதை இவருடைய பெரிய மனுஷி மட்டுமே. நேரு பால புத்தக வரிசையிலும் இந்தக் கதை இடம்பெற்றிருக்கிறது.



இவர்மீது எதிர்மறையான விமர்சனங்களை வைப்பவர்கள் கூட இவரது ‘சிவப்புக்கல் மூக்குத்தி’ என்னும் கதையை இன்றளவும் பேசிவருகின்றனர். இன்றைய இலக்கிய ஜாம்பவான்கள் தொகுக்கும் சிறந்த கதைகள் அத்தனையிலும் அக்கதை இடம்பெறுகிறது.

இவருடைய கதைகள் பொதுவாக அறிவியல், உளவியல், சமுதாயவியல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றன என்று திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள்.

மார்க்சிம் கார்க்கியின் ‘கடலில் நடந்தது’ என்னும் மொழிபெயர்ப்பு கட்டுரைத் தொகுப்பு, டால்ஸ்டாய் கதைகள் எனும் கட்டுரைத்தொகுப்பு ஆகியவை இவருடைய குறிப்பிடத்தகுந்த கட்டுரைத் தொகுப்புகள். ‘பாரதிதாசனின் உவமைநயம்’, ‘எழுத்தாளர்களும் பத்திரிகைகளும்’, ‘வாசகர்கள் விமர்சகர்கள்’, ‘சரஸ்வதி காலம்’, ‘தமிழ் பத்திரிகைகள் அன்றும் இன்றும்’, ‘புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்’ ஆகிய இவருடைய கட்டுரை நூல்கள் காலத்தால் அழியாத கட்டுரை நூல்களாக நினைவுகூரப் பெறுகின்றன.

‘எழுத்தாளர்களும் பத்திரிகைகளும்’ என்ற இவருடைய கட்டுரைத் தொகுப்பு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டினைப் பெற்றது. ‘புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்’ என்ற இவரது ஒப்பற்ற நூல் 1978ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது பெற்றது குறிப்பிடத்தகுந்தது.

புதினங்களைப் பொருத்தமட்டில் இவரது ‘செவ்வானம்’, ‘வசந்தம் மலர்ந்தது’, ‘வீடும் வெளியும்’, ‘ஒரு வீட்டின் கதை’, ‘அலைமோதும் கடல் ஓரத்தில்’, ‘இருட்டு ராஜா’, ‘நினைவுச்சரம்’ ஆகியவை குறிப்பிடத்தகுந்த புதினங்கள். நினைவுச்சரம் நாவலில் இவரது சொந்த ஊர், சுற்றுச்சூழல், அங்கு வாழும் மனிதர்கள் பற்றி எல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்நாள் முழுவதும் திருமணமே செய்துகொள்ளாத இவர் ‘கல்யாணத்துக்கு பிறகு காதல் புரியலாமா’, ‘கல்யாணம் இன்பம் கொடுப்பதா? இன்பத்தைக் கெடுப்பதா?’ என்ற தலைப்புகளில் எல்லாம் படைப்புக்களைத் தந்திருக்கிறார் என்பது வியப்பு.

இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் தடம் பதித்த வல்லிக்கண்ணன் அவர்கள் நாடகத்தையும் விட்டுவைக்கவில்லை. இவரது ‘விடியுமா?’ என்ற நாடகம் ஓட்டல் தொழிலாளர்களின் சிக்கல்கள் குறித்துப் பேசும் நாடகம். அதன் மூலம் இவர் முன்வைத்த சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் குறிப்பிடத் தகுந்தன. அந்த நாடகத்தில் வரும்

“நட்ட கல்லை குளிப்பாட்ட வெள்ளி குடங்களிலே பாலா?

நாட்டிலே பட்டினிப் பட்டாளம்

பெருத்துக் கிடக்கையில்..” என்ற வசனம் அன்றைய காலகட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றதாம்.

1944 மற்றும் 1946ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்டார். 1947ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற சிறுபத்திரிக்கையாளர் மாநாட்டிற்குத் தலைமை ஏற்றுச் சிறப்பாக நடத்தினார். மகாகவி பாரதியாரின் பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சங்கத்தின் செயலாளராக இருந்து பாரதியின் பாடல்கள்

நாட்டுடைமையாக்கப்படுவதற்காகப் பெரும் பங்காற்றினார்.

'எந்த எதிர்பார்ப்பும் இன்றி செய்யப்படும் செயல்களுக்கு இயற்கை எனும் பேராற்றல் பெரும்பலனைத் திருப்பித்தரும்' என்ற எழுதப்படாத விதி பாரதியின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும் என்று பாடுபட்ட இவரது நூல்களில் 86 நூல்களை நாட்டுடைமை ஆக்கியுள்ளது.

கவிஞர், சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், இதழாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், திறனாய்வாளர், விமர்சகர், நாடக ஆசிரியர், இலக்கிய வரலாற்றாசிரியர் என்ற பன்முகத்திறன் கொண்டு விளங்கிய அவர் திருமணம் செய்துகொள்ளவில்லை. அதற்காக அவர்கூறும் காரணங்கள், அவர்தம் ஆழ்ந்த சிந்தனையையும், தொலைநோக்குப் பார்வையையும் காட்டுவதோடு, தான் திருமணவாழ்க்கையை மேற்கொள்வதற்கான பொறுமையற்றவன் என்றும் கூறிக்கொள்கிறார்.

'சக்தி', 'இந்திரா', 'கிராம ஊழியன்', 'தீபம்', 'சினிமா உலகம்' போன்ற பத்திரிக்கைகளில் ஆசிரியராகவும், துணை ஆசிரியராகவும் பணியாற்றினார். "சிந்தனைகள் கனமாகப் பரவுவதற்கும், திறமையான எழுத்தாளர்கள் வளரவும் சிற்றிதழ்கள் உதவ முடியும்", என்ற அசைக்க முடியாத அவரது நம்பிக்கை சிற்றிதழ்களின் வளர்ச்சிக்கு உதவியதோடு அடுத்த தலைமுறை படைப்பாளர்களையும் உருவாக்கியது.

எரியும் ஒரு மெழுகுவர்த்தி தன் நெருப்பைப் பிறிதொரு மெழுவர்த்திக்குக் கொடுக்கும்போது அது அணைந்துபோவதில்லை. அப்படியே பிறரைக் கைதூக்கிவிடும் பொருட்டுக் குனியும் ஒருவன் குறைந்துபோவதுமில்லை. அவன்தான் உலகின் உண்மையான உயர்ந்த மனிதன். அப்படிப்பட்ட உயர்ந்த மனிதர்களுள் ஒருவர்தாம் ரா.சு.கிருஷ்ணசாமி என்ற வல்லிக்கண்ணன் அவர்கள்!

தன்னிடம் இருந்த இலக்கியக்கனலின் பொறியை யாரிடமெல்லாம் கண்டுகொண்டாரோ அத்தனை பேரிடமும் அப்பொறியைப் பெருநெருப்பாகக் கனன்று சுடர்விட்டெரியத் தூண்டுகோலானார். பாராட்டிப் பாராட்டியே சீர்பெற வழிகாட்டிய காற்றானார்.



வண்ணதாசன், வண்ணநிலவன், மாலன், பூமணி போன்ற இந்தத் தலைமுறை கொண்டாடும் ஆளுமைகள் அத்தகையவர்களாக உருப்பெற பின் நின்று தட்டிக்கொடுத்த அவர்களின் மரியாதைக்குரிய ஞானத்தகப்பன்.

எழுதுவது ஒன்றும் வாழ்க்கை ஒன்றும் ஆக இருக்கும் இலக்கியவாதிகளுக்கு மத்தியில் தன்னுடைய எழுத்தைப் போன்றே வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர். 'திரைப்படம், கலாச்சார சீரழிவு, பெண்களை வணிகப் பொருளாகப் பாவித்தல் இவற்றையெல்லாம் எதிர்த்து படைப்பாளிகள் எழுத வேண்டும். எண்ணத்தையும், எழுத்தையும் உயர்வாக மதிக்க வேண்டும்', என்று வாழ்நாள் முழுவதும் செய்து காட்டியவர். சாதி மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர். இளம் எழுத்தாளர்களையும் படைப்பாளிகளையும் ஊக்கப்படுத்தி ஆதரவு கொடுத்தவர்.

திரு.ஜெயகாந்தன் அவர்கள் குறிப்பிடுவது போல், வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் வந்தபோதும் மாற்றங்களை அறிவால், சிந்தனையால், அபூர்வமாய் வெளிப்படுத்தும் திறனால் தன்னளவில் எத்தகைய பாதிப்புக்களுக்கும் ஆளாகாத ஒரு ஆத்மயோகி அவர்!

75 ஆண்டுகள் இலக்கியத்திற்காக வாழ்ந்து இலக்கிய பீஷ்மராக, இலக்கிய ரிஷியாக இன்றும் அறியப்படும் திரு.வல்லிக்கண்ணன் அவர்கள் சென்ற நூற்றாண்டின் மிகச்சிறந்த ஆளுமை.

காலத்தின் குரலாகப் பதிவுசெய்யப்பட்ட திரு.வல்லிக்கண்ணன் அவர்களுடைய படைப்புகள் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற குரல்! அக்குரலுக்கு உரிய அங்கீகாரமும், கவனமும் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. நினைவுகூர்வோம்; நாமும் நேசமிகு படைப்புகள் தருவோம்! ■

● கவிஜி




# திி டேனிஷ் கேர்ள்



நதியின் நிறம் சேருமிடம் வந்ததும் பிரிவது போல.. அது அத்தனை மெலிதான மௌனமாக இருந்தது. மிகப்பெரிய துக்கத்தின் சாயலைக் கடந்துவிடவே முடியாத பார்வைக்குள் அவனே அவளாகவும் இருந்தான்.

ஆண் பிள்ளைக்குப் பெண் பிள்ளையின் ஆடைகளை அணிவித்து சந்தோசப்பட்டுக்கொள்வது என்பது பொதுவாகவே எல்லா வீட்டிலும்.. எல்லா ஊரிலும் இருக்கும் ஒரு சாதாரண நிகழ்வு. அப்படியே கடந்துவிடும் பால்ய நினைவாகிக் கிடக்கும் குவிதலுக்குள் எப்போதாவது ஒரு விஸ்வரூபம்.. இந்தத் திரைப்படம் போல இப்படி எழும்.

ஆண் பெண்.. பெண் ஆண்.. என்று உடை மாற்றிக்கொண்டு வீட்டுக்குள் அழகு பார்த்த பால்யம் பின் ஒருநாளில் வயது வந்தபின்.. யாருமற்ற வீட்டுக்குள் பெண் உடையை எடுத்து ஒரு ஆண் போட்டுக்கொண்டு ஒரு பெண்ணைப் போல நடந்தும் சிரித்தும் பார்த்தும் ரசித்தும் இருப்பது.. அப்படி ஒன்றும் அபாயகரமான விஷயம் அல்ல மனதுக்கு. ஆனால் நடைமுறைச் சிக்கல்களை மிக எளிதாகத் தூவிவிடும் போக்கு அதனிடம் பூதாகரமாக இருக்கிறது.

அவள் ஒரு சித்திரக்காரி. அவனும்கூட சித்திரக்காரன்தான். வீட்டுக்குள் தான் வரையும் ஓவியத்துக்கான மாடலாக தன் கணவனுக்கு தன் ஆடையை அணிவிக்கிறாள். ஆடை மட்டும் அல்ல.. பெண் அணியும் காலணிகள், உள்ளே தொடை வரை அணியும் காலுறைகள் என்று ஒரு ஆண் ஓவியம் மெல்ல பெண் ஓவியமாக உரு மாறும் காட்சியில் நாம் கண்கள் சிமிட்டவும் மறக்கிறோம். பெண் ஆடையைப் போர்த்தியபடியே மாடலாக நாற்காலியில் அமர்ந்திருக்கும் அவன்.. பெண் பாவனையில் வளைந்து சரிந்திருக்கும் தன் காலையே பார்த்து நளினப்படும் இடம் அவனுள் "லில்லி" என்ற மாடல் பெண் உருவாகும் இடம்.

ஓவியம் வரைதல் தாண்டியும் அவர்களுக்குள்ளான காதலையும் காமத்தையும் தூண்டிவிடும் நுட்பத்தை அந்தப் பெண் உடை கொண்ட ஆண் உடல் கொண்டிருக்கிறது. விளையாட்டு போலத்தான் ஆரம்பிக்கிறது அந்தக் கண்ணாமூச்சி ஆட்டம். ஆனால் விடாத மிச்சம் போல அவள் இல்லாதபோதும்.. அவன் தன்னை மெல்ல மெல்ல பெண்ணாக உணரத் துவங்குகிறான். அவள் ஆடைகளை அணிந்துகொண்டு வீட்டுக்குள் ஒரு பெண்ணாகவே நடமாடுகிறான். அதன் நீட்சியாக மிகப்பெரிய உளவியல் சிக்கலுக்கு ஆளாகிறான். சக ஆண் மீது ஈர்ப்பு ஏற்படும் அளவுக்கு அதன் தொடர்ச்சி அவனை ஆட்டிப் படைக்கிறது. அதைத் தன் மனைவியிடமும் கூறுகிறான். அவள் முதலில் அதிர்ச்சியாகி அழுகிறாள். இயலாமையால் திட்டுகிறாள். காதலால் அறிவுரை கூறுகிறாள். 'மீண்டும் என் கணவனாக நீ வேண்டும். இந்த விளையாட்டை நிறுத்திக்கொள்வோம்' என்கிறாள். மனதளவில் தடுமாறுகிறாள். ஆனாலும் அவன் மீது கொண்ட காதலில் ஒரு துளி கூட குறையவில்லை. அவள் தன் கணவன் தன்னை விட்டுப் போய்விடுவானோ என்றுதான் பயப்படுகிறாள். மனம் புழுங்குகிறாள். கண்ணீர் வடிக்கிறாள். உள்ளுக்குள் குமுறுகிறாள்.

அது அப்படித்தான் நடக்கிறது. ஒரு ஆண் உடம்பில் பெண்ணாகிய தான் எத்தனை நாட்கள்

வதைபட்டுக் கொண்டேயிருப்பது என்று அவன் ஒரு கட்டத்தில் அவனை முழு பெண்ணாகவே உணர்ந்து அழுகிறான். அது ஒரு உள் நோக்கிய போராட்டமாக இருக்கிறது. வெளியற்ற உட்புறங்கள் அழுத்தம் கொண்டவை. உடைபட உடைபட உள் இல்லாத கல்லின் சுமையும் அது. குற்ற உணர்வில் அவன் துடிக்கிறான். துவளுகிறான். செய்வதறியாத இயலாமையில் அவள் கண்ணீர் வடிக்கிறாள். காலத்தை ஒடிக்கிறாள்.

பார்க்கும் நமக்கே 'சரி நீ பெண்ணாவே இருந்துட்டுப் போ...' எனக் கூற வைத்துவிடும் அளவுக்கு அவனின் பெண் தன்மையின் வெளிப்பாடு வெள்ளந்தியாக வெளிப்படுகிறது. ஆசா பாசங்கள்.. மெல்லிய உணர்வுகள்... பெண் உலகத்தின் எதிர்பார்ப்புகள்... சக ஆணின் ஸ்பரிசத்துக்கு ஏங்கும் வேட்கை... என்று அவன் ஒரு பெண்ணாகவே இருக்கிறான். தன்னிடமிருந்தே தான் விலகும் நிலையில் தனக்குள் இருக்கும் அவளுக்காக அவன் தவிப்பதை நாம் சினிமா தாண்டியும் காண்கிறோம். பெண்மையின் தருணத்தைப் பார்த்துப் பார்த்துப் பாவிக்கும் அவனுள் அவன் மெல்ல மறைகிறான். அவள் மெல்ல தெரிகிறாள். தலை முடியாகட்டும்.. உதட்டுச் சாயமாகட்டும்... ஆடை அணிகலன்கள் ஆகட்டும்.... பெண்மைக்குப் பொருள் பட்ட உருவம். மிகப் பெரிய அதிர்வுகளாலும் மிகச் சிறிய ஒத்திசைவாலும்... அவன் எங்கோ அவனுள் ஒரு அவளாக சிக்கிக்கொண்டிருக்கிறான். அவனுள் இருக்கும் அவளை அவனால் விட முடியவில்லை. ஒரு தேவதை சாத்தானாக அவனுள் பொங்கி வழிகிறது. நிறைந்து வழியும் பெண்மையை அவன் ஆசையில் உணர்கிறான். ஒரு கட்டத்தில் வேறு வழியின்றிக் கணவனை மருத்துவரிடம் அழைத்துச் செல்கிறாள் மனைவி.

இருந்தும் அந்த மனைவி அவனுக்காகவே இருக்கிறாள். அவன் பழைய தன் கணவனாக வந்துவிட வேண்டும் என்று ஏங்குகிறாள். போராடுகிறாள். அவனுக்காகவே வாழும் அப்படி ஒருத்தியை விட்டு அவன் தன் சுய நலத்துக்காக இப்படி முரண்வாதம் செய்கிறான் என்றுகூட ஒரு கட்டத்தில் நமக்குக் கோபம் வருகிறது. ஒரு வீட்டுக்குள் நடக்கும் எதிர் எதிர் யுத்தம் சத்தமின்றிக் கதவு திறந்துகொண்டே இருக்கிறது. ஜன்னல் அடைபடும் ஒலியில் எல்லாம் இருவரின் மொழியற்ற விசும்பல்கள். உருவமற்ற வேதனையின் தோரணை அவனுக்குப் பெண்ணாகவும் அவளுக்கு ஆணாகவும் இருக்கிறது.

ஆணுக்கும் பெண்ணுக்குமான இடையில் அந்தக் கதாபாத்திரத்தின் நடிப்பு.. அற்புதம். அந்தச் சிரிப்பு... அப்பப்பா.. பெண் தோற்றாள். ஓரிடத்தில் இரண்டு ஆண்கள் கேலி செய்யும்போது அவன் நடந்துபோகும் அந்த ஒரு காட்சி போதும். அந்தக் கதாபாத்திரத்தின் வெளிப்பாட்டை உற்றுநோக்க.. உள்வாங்க. அது பெண் உடல் மொழியின் உச்சம். தான் பெண்தான் என்று தன்னை நம்பும் மாய சக்தி. மற்றவர்கள் தன்னைப் பெண்ணென்று செய்யும் கேலியே தான் பெண்ணானதற்கான சான்று என்று செய்யும் புன்முறுவல்.

இறுதியில் அவன் தனக்குள் இருக்கும் பெண்ணாகவே தன்னைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டானா.. அவன் மனைவி என்ன ஆனாள்.. படம் முடியும்போது ஒருவகை இறுக்கம் நமக்குள் சுரக்கிறது. இந்த ஆண் பெண் உணரல்கள் வெறும் தோற்றத்தில் இல்லை. அது உள்ளார்ந்து பயணிக்கும் மிக மெல்லிய கோடு. அதைத் தாண்டிச் சிந்திப்பது அத்தனை சுலபம் அல்ல. பெண் என்பவளின் மனதுக்குள்தான் எத்தனை எத்தனை ஜன்னல்கள். ஆனால் பெரும்பாலும் அவை அடைத்தே கிடக்கின்றன.

இந்தப் படம் உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட படம்.

படத்தின் கடைசி காட்சி.. மலை மேல் வானம் முட்ட நிற்கும் கதை நாயகி. மேலிருந்து கீழ் நோக்கும் பறந்து குவிந்த நீர்ப்பரப்பு. காற்றில் துக்கம் மிதக்க பளிச் வெளிச்சத்தில் தன் கணவனின் நினைவுகளின் ஊடாக நின்று இயற்கையை அவதானிக்கும் அவளின் துப்பட்டா காற்றில் பறந்து சென்று வானத்தில் கலந்து விடுகையில்... அழுகையோடு கூடிய புன்னகை அவள் முகத்தில். அது இதுவரை அவர்கள் வாழ்வைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்குமான ஆறுதல்.

**திரைப்படம் : தி டேனிஷ் கேர்ள்**

**இயக்குநர் : TOM HOOPER**

**மொழி : ஆங்கிலம்**

**ஆண்டு : 2015**



கவி : ரோஷான் ஏ.ஜிப்ரி
சித்திரம் : அன்பழகன்

# பசி நடனம்



இருப்புகள் யாவும்
ஏ.ரீ.எம். அட்டைக்குள்
தொடுதிரையில் மனிதம்
தொலைந்துகொண்டிருக்கும் வெளியில்..
நகர மறுக்கும் கால்களுடன்
நகரத்தின் தரிப்பிடத்தில்
சிறுவனின் நம்பிக்கை
சில்லறை இல்லாமல் செல்லாக்காசாகிறது

காணாமல் போன கணவனைத்
தேடித் தேடியே
தேய்ந்துபோன கால்களுடன்
மாத்திரைக்காக
யாத்திரைபோன தாய்
மருத்துவமனையில்
எத்தனையாவது இலக்கத்தை
கையில் வைத்துக் காத்திருக்கிறாளோ.?
இல்லை கொவிட்-19 என்று
கொளுத்திவிட்டார்களோ.??

இடர் வசிக்கும் இருள்வாசம்
ஆணிவேர் அறுந்த இடத்தில்
அணைந்தெரியும் அடுப்பு
ஊணுக்கு உழல்கிறது
ஆறு கால்களின் அன்றாடம்

இடைக்காலப் பாடல்களில்
அடைக்கலம் தேடும்
மூன்றாவது குரல்
பேருந்து மேடையில்
இயலாமை உணர்த்தும்
இல்லாமை வரிகள்
காற்றில் அசைகிறது
மார்பில் ஒரு மாயத்திரை
கந்தலுக்குள் களியாட்டம்
பாம்புகள் நெளியும் பால்வெளியில்
காசு கொடுக்காமல்
கண்கள் குளிக்கின்றன!

“குட்டி கருப்பென்றாலும் அழகு” என்கிறான்
“A” தர ரசனையுடைய ஒருவன்
சிலருக்கு
காதுகள் செவிடாகி
கண்கள் பிரகாசமாகின்றன
சிலர்... விழுங்கியும்
கக்கி விடுகிறார்கள்
கூடிப்பிரியும் பயணிகளுக்கு
சில்லறை இல்லை என்ற சொல்லுடன்
முடிவுக்கு வரும்
சின்னத்தனமான சிரிப்பு

வாய்ப்பாட்டு ஓரளவு
வயிற்றுப்பாட்டுடன் முடிந்தாலும்
அடுத்த பொழுது புலர்கையில்
அங்கே ஆறு கடலாயிருக்கும்
காலத்தின் கண்ணீர்! ▪

• ஸ்ரீகா

# மீந்த நதியின் மையத்தைக் கீறும் சில சொற்கள்




**நூல் - மரநாய் (கவிதைகள்)**

**ஆசிரியர் - ஷக்தி**

**வெளியீடு - சால்ட் பதிப்பகம்**

**வருடம் - 2017**

**திரு. ஷக்தி:**

*கதிரியக்க சிகிச்சை நிபுணராக உள்ள திரு. ஷக்தி திருத்துறைப்பூண்டி அருகில் உள்ள பல்லவன் கோவில் எனும் ஊரைச் சார்ந்தவர். சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படித்தவர். பல்லவன் கோவில் எனும் தனது சொந்த ஊரில் `பிலிப்' எனும் பெயரில் அறக்கட்டளை ஒன்றைத் தொடங்கி நடத்திவருபவர். புற்றுநோய் பாதித்தவர்களை மீட்பதே அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகக் கொண்டு தனது அறக்கட்டளையைத் திறம்பட நிர்வகித்து வருகிறார்.*

*மருத்துவச் சொற்களால் மாபெரும் கவிதைச் சுவடியாய் இந்தப் புத்தகத்தை இயற்றியிருக்கிறார். ஒவ்வொரு கவிதையும் ஆச்சர்யங்களைத் தாங்கி நிற்கிறது. ஒவ்வொரு கவிதையும் அழுகைகளோடு கண்ணீரின் பிசுபிசுப்பைப் பரிசளிக்கிறது. ஏழ்மையின் சூடு குறையாமல் எளிய மனிதர்களின் வேதனையைப் பாசாங்கு இல்லாமல் நிஜமாய்ப் பதிவு செய்து இருக்கிறார். தமிழ்க் கவிதை வரலாற்றில் மருத்துவத்தால் தனது மொழியை வசப்படுத்தி அற்புதமான கவிதைகளால் நம் கண்களைக் குளமாக்குகிறார். வலியை நகலெடுத்துக் கவிதையாய் வடித்து இருக்கிறார்.*

**இவரின் மற்ற புத்தகங்கள்**

*1. அபோர்ஷனில் நழுவிய காரிகை (கவிதை)*

*2. கொண்டல் (நாவல்)*

*இவரின் "மரநாய்" எனும் கவிதைத் தொகுப்பு 2020 ஆண்டிற்கான இந்திய அரசின் யுவபுரஸ்கார் விருதை வென்று இருக்கிறது.*

**மரநாய்**

*மருதம் சார்ந்த கவிதைகள் இத்தொகுப்பின் சிறப்பு.*

*ஊசித் தூரல்களால் நிலம் பூப்பெய்துகிறது.*

*வெயில் அருந்தும் உழவுக் கிழவனின் நடு முதுகில் உப்பு பூத்த வியர்வை உப்பள வெடிப்புகளாகியது.*

*களைகள் "வயலாணிகள்" ஆகிறது. அவ்வயலாணிகள் பருவமழை தாகத்திற்காக முளைக்கிறது. அதைக் காளைகளும் திரண்ட புஜங்களும் தளையறுத்துக் களிக்கிறது.*

*இவ்வெவ்வேறு கவிதைக்காட்சிகளை அமர்ந்து ரசிக்க ஒரு மர நிழல் தேவை. அந்த மர நிழல் உழவுக்குப் பழக்க வந்த காளைகள் மேல் முளைத்தது போல் பரந்துகிடக்கிறது. அதில் பறவைகள் அமர்ந்து பாடிக்கொண்டிருக்கின்றன.*

*காளைகளைக் கையில் பிடித்துக்கொண்டு மரநிழல் நகர்ந்துவிடாமல் நாமும் இளைப்பாறிக்கொண்டே பறவைகளின் பாடலுக்கு இடையூறின்றி கானம் நனையவும் முடிகிறது.*

*இந்த அழகான நாநய நிலத்தின் மறுபக்கம் முற்றிலும் சிதைக்கப்பட்டிருப்பது சில கவிதைகளின் பாடுபொருள்.*

*அடியாழ மணல் கொணர்ந்து*

களவாகியபோதும், பூமிக்குள் கையை விட்டு வாரி இறைத்த மீத்தேன் கசத்தையும், விவசாயிகளின் தற்கொலையையும், வெட்கமற்ற இவ் வாழ்வின் நாளைய ஒன்றுமறியாப் பிணங்களையும் யோசிக்காத இவ்விஷம் தோய்ந்த வரலாற்றிற்கு உரியவர்களை "நீங்கள் போங்கள்" என்று எழுதி நம்மையும் கருப்புக்கொடி காட்ட வைக்கிறார்.

வலி என்ற உணர்வை வலிக்கிறது என்ற வார்த்தையைத் தவிர பிறிதொன்றைக் கொண்டு இட்டு நிரப்ப முடிகிறது என்றால் அது காய்ந்த மரத்தின் உயிர் தளிர் என்பதை விட அது தேர்ந்தெடுக்கும் வார்த்தைகள் வலியை விட உணர்வு மிக்கவை.

**"தவழ்ந்த காலங்களின் வலிகள் அவள் கபாலக் கூரையுள் ஒட்டியிருக்கிறது**

**வனமொழிந்த கால உணர்விலிருந்து விடுபடவில்லை மூளைச் சிலந்தி**

**பழந்தூசி உறுத்தலில் மேலிமையுனுள் சிறு கசிவு எனக்கு"**

வலியைப் பொறுத்துக்கொள்ள வார்த்தைகள் வேண்டி இருக்கிறது. வலி என்ற வார்த்தை பற்றி ஹோலுப் சிந்தனைகள்:

"அது வலிக்கிறது என்ற சொற்கள் வலியின் அழுகையையும் கண்ணீரையும் பதிலீடு செய்துவிடுகின்றன. வலி எனும் சொல் வலியின் வெளிப்பாட்டினை விவரிப்பதற்குப் பதிலாய்ப் பதிலீடு செய்து விடுகிறது. இங்கனம் அது ஒரு புதிய நடத்தை வகையை உருவாக்கிவிடுகிறது."

வலியைப் பொறுத்தவரை அந்த சொல் நமக்கும் வலி என்பதற்கும் இடையில் நுழைந்துவிடுகிறது. மௌனத்தின் பாசாங்கு போல் அது மௌனப்படுத்துவது. ரத்தத்திற்கும் களிமண்ணிற்கும் இடையிலான தையலைப் பிரித்து ஆற்றும் ஒரு ஊசி.

ஒருவர் தன்னிலிருந்து விடுதலை பெறுவதற்கான முதல் அடி எடுப்பு அந்தச் சொல். காதல், சாதிய வன்முறை, அரசியல் என்று எல்லாப் பாடுபொருட்களிலும் தன்னிலிருந்து விடுவித்துக்கொள்ள வலிகளைப் பாடியிருப்பது இத்தொகுப்பின் மற்றுமொரு சிறப்பு.

**ஒரு ரூபாய் நாணயம் தவிர இன்னபிற ரூபாய்களை வங்கியில் செலுத்தி விடுங்கள்**

**தாலிச்சரடு தவிர மீந்த உலோகம் அனைத்தையும் அரசில் ஒப்படைத்து விடுங்கள்**

.........

இப்படி நீண்டு கடைசியில் **உங்கள் கணக்கில் கோடிகள் தங்கி இளைப்பாறும் அதனால் "பழகுங்கள்"** என்று முடியும் கவிதை.

ஒரு நிதி ஆண்டின் சீர்செய்யப்படாத நிதிநிலையையும் அதற்கு நடவடிக்கை எடுக்காமல் மக்களை எப்படி பழக்குவார்கள் என்ற முன்னோடி எண்ணத்தின் எள்ளல் பகடியான கவிதை இது.

"வேராய் ஊடுருவி பற்றிக்கொள்ளும் நிலமாய் நீயும் நானும் இறுகிப் புரையோட" என்ற அன்பின் வசீகர வரிகளைப்போலவே "அறிவு மய உடலில் இருந்து தன் உணர்வுக்கு புலனாகாதபடி தன்னை விடுவித்துக்கொண்ட அவள் நிலவேம்புச் சாயம் பருகி நெடுஞ்சாண்கிடையாகக் கிடக்கும் என் மீது படர்ந்து சூழ்கிறாள்" என்ற வெறுப்பைப் படர்த்தும் கசப்பு வரிகளையும் எழுதியிருக்கிறார்.

அத்தியாவசியக் கவித்துவச் செய்தி பரிவர்த்தனைக்கு மிகக்குறைந்த வார்த்தைகளே தேவைப்படுகின்றன – பவுண்ட்.

**"மீந்த அந்நதியின் தொப்புளின் மேல் கீறினேன்**

**மந்தை ஓட்டும் தடியொத்த**

**கோரைக்குள்**

**நடுங்கியபடி நினைவுகள்"**

பவுண்டின் கூற்றுப்படி குறைந்த சொற்களில் முழு அல்லது அதிக செய்திகளைச் சொல்லியிருக்கிறார். மீந்த நதியின் மையத்தைக் கீறும் சில சொற்களில் நதியின் பிரவாகமற்றுப் பலவாறாக ஆடுகிறது கோரை.

**மீன் குஞ்சுகள் மிருதுவாக்குகின்ற பாதங்களைப்போல்**

**கூச்சத்தின் பதம் மீறாமல்**

**அடிக்கடி பாதங்களை அடம்பிடித்து**

**அரும்பும் மீன்களென** இத்தொகுப்பின் கவிதைகளை ஒரே மூச்சில் காத்திரமாக அணுகாமல் அடிக்கடி வாசித்து வைத்தால் மென் பதம் விளங்கும்.

■

● யாழினி ஸ்ரீ

# மரங்கொத்திக்குக் கிடைத்த பரிசு

ஆலங்குடி அழகான குளிர்ச்சியான குட்டி கிராமம்.

எல்லாத் திசைகளிலும் பசுமை படர்ந்திருக்கும். அரிசி, உளுந்து, பருப்பு வகைகள் கொண்ட வயல்வெளிகள்... மல்லி, முல்லை, செண்டுமல்லி, பிச்சி, சம்பங்கி இன்னும் பல பூந்தோட்டங்கள்... கறிவேப்பிலை தொடங்கித் கத்தரிக்காய் முதல் பலவகை காய்கறித் தோட்டங்கள்... மா, தென்னை, வாழை, கொய்யா போன்ற பழத்தோப்புகள்... பாக்கு, பனை, அத்தி, வெற்றிலை, அகத்தி, இலந்தை, கிளுவை இன்னும் பல வேலிப்பயிர்கள்...

அத்தனைச் செழிப்புக்கும் காரணம் மேகமலையும் அதிலிருந்து பொங்கிவரும் பொன்னாறும்தான்... பொன்னாறு ஆலங்குடிக்கும் அதன் சுற்றுவட்டார கிராமங்களுக்கும் ஜீவநதி. கண்ணாடி போலத் தெளிவும், மூலிகைகள் தழுவிய மருந்தும் எனப் பொன்னாறு அப்பகுதிக்கு இயற்கை தந்த பொக்கிசம்.

நல்ல வேளையாக பட்டணத்துக் கண்களுக்குப் பொன்னாறு இன்னும் தெரியவில்லை. தெரிந்திருந்தால் அயிரையும் கெண்டையும் நீந்தும் ஆற்றில் அசுத்தமும் கழிவும் நீந்தும்.

ஆலங்குடிவாசிகளின் பேராசையின்மைதான் பொன்னாறு பொக்கிசமாக இருக்கக் காரணம். யாராவது தன் விளைநிலத்தைப் பணத்தாசையால் பட்டணத்துவாசிகளுக்கு விற்றுவிட்டால்... அத்துடன் பொன்னாற்றின் புனிதமும் கெட்டுவிடும்.

அயிரை, கெண்டை மட்டுமல்ல... அதன் வருகைக்காகக் காத்திருக்கும் கொக்கு, செந்நாரை... தாகம் தணிக்க ஓடிவரும் ஆடு, மாடு, நாய், குதிரை... நீர்விட ஆளின்றி வேர்விட்டு வளரும் வேலித்தாவரங்கள்... அதில் அடைக்கலமான பலவித உயிர்கள் என... ஒரு பொன்னாற்றை நம்பி கோடி உயிர்கள் வாழ்கின்றன.

அப்படிப்பட்ட பொன்னாற்றங்கரையில் ஒரு ஆலமரம்... நூறு வயது ஆன அந்த ஆலமரத்தின் வேர்கள் பொன்னாற்றின் அக்கரைக்குப் பாலமாய் நீண்டிருந்து பயணங்களை எளிதாக்கிக் கொண்டிருக்கிறது.

அம்மரத்தின் அடியில் ஒரு பிள்ளையாரும் உண்டு. பொதுவாக பிள்ளையார் அரசமரத்தினைத்தானே விரும்புவார். இங்கே பொன்னாற்றின் அழகிலும் குளுமையிலும் கிறங்கி ஆலமரத்தின் கீழே குடிகொண்டு விட்டார்.

பிள்ளையாருக்கு மேடை போட்டு குடி வைத்த கிராமவாசிகள், அவருக்குத் துணையாக



அங்கு கூடி பொழுதுபோக்கு, பஞ்சாயத்து என்று பிள்ளையாரின் தியானத்தைக் கலைத்துக்கொண்டே இருப்பர்.

ஒருநாள் ஆலங்குடிக் காடுகள், தோப்புகளைத் தன் அலகால் பதம் பார்த்த மரங்கொத்தி ஒன்று... அந்த ஆலமரத்தை வந்தடைந்தது.

நீண்ட நாட்களாக அந்த மரத்தில் குடியிருக்கும் கரையான்கள் அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தன. இதுவரை காகம், மைனா, கிளி, தேன்சிட்டு போன்ற சிறிய பறவைகள் முதல் மயில், பருந்து போன்ற பெரிய பறவைகளைக் கூட கண்டிருந்த கரையான்களுக்குப் புதிய பறவையான மரங்கொத்தி ஏலியன் போலத் தோன்றியது.

சரி... இந்தப் புதிய பறவை என்ன செய்கிறது என்று உளவு பார்த்துத் தன் ராஜாவிடம் சொல்லலாம் என்று சில துணிச்சல்மிக்க கரையான்கள் நினைத்தன. உடனே ஆலமரத்தின் பட்டைகளுக்கு இடையே ஏற்படுத்தி வைத்திருந்த துளை வழியாக வெளியே வந்தன.

அதைப் பார்த்த மரங்கொத்தி, தன் கூர்மையான அலகால் அவற்றைக் கோர்த்து விழுங்கிவிட்டது. இந்த நிகழ்ச்சியைத் துளை வழியாக பார்த்துக்கொண்டிருந்த இன்னொரு கரையான் தப்பிச்சிருடா கைப்புள்ள என்று விழுந்தடித்து ஓடியது தங்கள் ராஜாவிடம்...

‘ஐயோ போச்சே போச்சே’ என்று கூச்சலிட்டுக்கொண்டே ஓடிவந்த கரையான், புதிய வரவான மரங்கொத்தி பற்றி விவரித்து, அது விழுங்கிய சக தோழர்கள் நிலை பற்றியும் கண்ணீருடன் சொல்லியது.

ராஜா கரையான் இவற்றைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே மரங்கொத்தி மரத்தின் பட்டைகளைத் தன் அலகால் கொத்தி உரித்து கரையான்களைத் தேடத் தொடங்கியது.

‘வசமா மாட்டிக்கிட்டோம்...’ என்று அனைத்துக் கரையான்களும் தன் ராஜா முன் பயத்தோடு கூடியிருந்தன. ராஜா கரையான் தன் நடுங்கும் கால்களைக் கட்டுப்படுத்த முயன்று தொப்பென்று கீழே விழுந்துட்டார். கூட்டமே பதறி நிற்க, எப்படியாவது சமாளிப்போம் என்று நினைத்தபடி மெல்ல எழுந்து நின்றார்.

‘ஒன்னுமில்ல... உங்களை எப்படிக் காப்பாற்றலாம் என்று யோசித்துக்கொண்டே எழுந்ததில் கால் தடுமாறிவிட்டேன்...’ என்று அசடு வழிய சமாளித்தார்.

அதற்குள் மரங்கொத்தி பட்டைகளை உரித்துப் பயனில்லை என்று மரத்தைத் துளையிடத் தொடங்கியது. இதை உணர்ந்த ராஜா கரையான்... ‘அனைவரும் மரத்தின் அடிப்பகுதிக்குச் சென்றுவிடலாம்’ என்று சொல்லி அங்கு சென்று பதுங்கியது கரையான் கூட்டம்...

‘இந்த மரங்கொத்தி இப்படியே கொத்தி துளையிட்டு மரத்தையே சாய்த்துவிடுமோ..?’ என்று நினைத்த ராஜா கரையான் ஒரு திட்டத்தோடு தான் மட்டும் வெளியே வந்தார்.

இவ்வளவு நேர உழைப்பிற்கு இப்போதுதான் பலன் கிடைக்க ஆரம்பித்துள்ளது என்று நினைத்த மரங்கொத்தி... அதைப் பிடிக்கத் தாவியது. உடனே ராஜா கீழே இருந்த பிள்ளையார் மேல் விழுந்தார். விழுந்த உடனே மரங்கொத்தி பார்க்கும் வகையில் பிள்ளையாரின் இடது காதுக்குள் புகுந்தார்.

இதை கவனித்த மரங்கொத்தி, ‘யாருகிட்ட தப்பிக்க பாக்கற..?’ என்று கத்தியபடி பறந்து வந்து பிள்ளையாரின் காதுக்குள் தன் அலகை நுழைக்க... ராஜா கரையானின் திட்டப்படி மரங்கொத்தி பிள்ளையார் காதுக்குள் தன் அலகை மாட்டிக்கொண்டது. எவ்வளவு முயன்றும் வெளியே வர முடியவில்லை.

ராஜா கரையான், பிள்ளையாரின் வலது காதுவழியே வெளியே வந்து மரங்கொத்தியின் அருகில் சென்று ரின்டக்கு டக்கு டக்கு டங்கி டங்கி என்று நடனமாடிவிட்டு தன் இருப்பிடம் சென்றது. கரையான்கூட்டம் தங்கள் ராஜாவைப் பாராட்டி மகிழ்ந்தன...

மாலையில் வேலை முடித்து பொழுதுபோக்க வந்த கிராமவாசிகள் மரங்கொத்தியை மீட்டு பறக்கவிட்டனர். மரங்கொத்தி சிறு காயத்துடன் காடுநோக்கி பறந்தது.

தன் இனத்திற்காகவும் வசிப்பிடத்தைக் காக்கவும் கரையான் செய்தது சரியா?

தன் உணவுக்காக பிறர் வசிப்பிடத்தை அழித்த மரங்கொத்தியின் செயல் சரியா? ■

ஆழ்மனத் தேடல் – 8

## பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

குளித்தபின்
கண்ணாடி முன் நின்று
தலைத்துவட்டிய தருணத்தில்
"தினமும் குளித்தாலும்
மனதில் அழுக்கு மறையவில்லை"
என்றபடியே வெளியே வந்தான்
எனக்குள்ளிருந்து மீண்டும் அவன்...

நீ அமைதியாக இரு
எனக்கு எல்லாம் தெரியும் என்றேன்
கண்ணாடியில் முகம் பார்த்துக்கொண்டே...

உனக்குத்தான் எல்லாம் தெரியும் என்றாயே
பிறகு எதற்கு கண்ணாடியைப் பார்க்கிறாய்?
உனக்குக் கண்கள் இருந்தாலும்
உன்னையே உன்னால்
பார்த்துக்கொள்ள முடியாதல்லவா?
என்றான் சிரித்துக்கொண்டே...

கண்ணாடி இல்லாமல்
எப்படி பார்ப்பது?

அகத்தைக் காண
கண்ணாடி தேவைப்படுவதில்லை
தவிர உன்னைவிட
கண்ணாடி புத்திசாலி என்றான்...

கண்ணாடியைப் படைத்ததே நாங்கள்தான்
அதெப்படி எங்களைவிட
புத்திசாலியாகிவிட முடியும்?
மேலும் நான்
தலை சீவினால்
சீவும்
நான் தலைக் கலைத்தால்
கலைக்கும்
நான் செய்வது அனைத்தையும்
அப்படியே செய்யும்
அதை விட்டால் வேறென்ன செய்யும்?

நீ பேசினால் அது பேசாது
உன்னால் அதைப் பேச வைக்கவும் முடியாது
பேசுவதில் எந்தப் பயனும் இல்லை என்பதும்
அதற்கு நன்றாகத் தெரியும்...
மேலும்
நீ சிரித்தால் அது சிரிக்கும்
நீ அழுதால் அது அழும் – ஆனால்
நீ கண் மூடினால் அது மூடிக்கொள்ளாது
அது கண் திறந்தே உன்னை
பார்த்துக்கொண்டிருக்கும்...
உன்னைப் போல
கண்ணை
மூடிக்கொண்டு
கனவு காண விரும்பாதது.

முக்கியமாக
கண்ணாடி எப்போதும்
பொய் சொல்லுவதில்லை என்றான்..

என்னைப் போலவே செய்து காட்டும்
ஒரு பிம்பம் அது...
என்ன உண்மையைச் சொல்லிக் கிழித்துவிடும்
என்றேன்
கொஞ்சம் ஆவேசமாக...

நீ எப்படி நடிக்கிறாய் என்ற உண்மையை
உனக்குச் சொல்கிறது என்றான் அமைதியாக....

எனது
உச்சக்கட்ட கோபத்தில்
உடைந்தது கண்ணாடி பல துண்டுகளாக...

இப்போது
எல்லாக் கண்ணாடிச் சில்லுகளிலும்
எதிரொலித்துக்கொண்டே
சொல்லத் துவங்கினான் அவன்...

வாழ்க்கையென்பதும் ஒரு கண்ணாடி
அதை உடையாமல் பார்த்தால்
ஒன்றாகத் தெரிவாய்
உடைந்த பின் பார்த்தால்
ஒவ்வொன்றாகத் தெரிவாய்...

– அவன் இன்னும் சொல்வான்...



தொடர் - 19

● கரிகாலன்

# தேநீர் சாலை



## புத்துயிர்ப்பு

~

'உயிர்த்தெழுதல்'எனும் சிந்தனையின் வேர் 'ஆனாஸ்டாசிஸ்' எனும் கிரேக்கச் சொல்லில் இருக்கிறது. 'எழுவது' 'மறுபடியும் எழுந்து நிற்பது' என்பதே இதன் பொருள்!

20 நூற்றாண்டுகளுக்கு முன் மத அதிகாரத்தை எதிர்த்துப் போராடிய ஒரு கலகக்கார இளைஞன் இயேசு. அவர் உயிர்த்தெழுந்தார் என்பது ஒரு நிகழ்வன்று. அது ஒரு தத்துவம்! என் பிதாவின் வீட்டைச் சந்தைக்கடை ஆக்காதீர்கள்! எனக் கலகம் செய்த அதே இயேசுநாதரை வைத்து, பிறகு வந்த கிறித்துவம் வியாபாரம் செய்தது.

கிறித்துவத்தை மறுவாசிப்பு செய்வதற்கான சந்தர்ப்பத்தை எனக்குள் உருவாக்கியவர் டால்ஸ்டாய். மிகவும் செல்வச்செழிப்பு மிகுந்த பிரபுக் குடும்பத்தில் பிறந்தவர் டால்ஸ்டாய். இன்றைய கார்ப்பரேட் கால இந்தியா போலவே 18, 19ஆம் நூற்றாண்டு ஜார் மன்னர் ஆண்ட ரஷ்யாவும் இருந்தது. வறுமையும், பசியும், நோயும் நிறைந்த ரஷ்யாவே பெரும்பகுதி. ஆடம்பரம், சூதாட்டம், குதிரைச்சவாரி உள்ளிட்ட கேளிக்கை விடுதிகள், மேட்டிமை பொருந்திய சீமாட்டிகள், கனவான்கள் பங்கேற்கும் விருந்துக்கூடங்கள் எனச் சொர்க்கபுரியாகக் காட்சியளித்த சிறுபான்மையோர்க்கான ரஷ்யாவை வளர்ச்சி எனக் கூறினான் ஜார்!

இந்நிலையில், பிரபு குடும்பத்தைச் சேர்ந்த டால்ஸ்டாயின் ஆன்ம விழிப்பு நிலை, அறத் தேட்டம், அவரை விவிலியத்தை நோக்கி நகர்த்தியது. விவிலியத்தை அவர் மறுவாசிப்பு செய்தார். அதன் அலங்காரமான சோடனைகளை அகற்றி, மறைந்திருந்த உண்மைகளை அறிய முயன்றார். நித்திய விடுதலையைத் தேடிய அவரது மனம் வீழ்ச்சியிலிருந்து எழ விரும்பியது. பத்து ஆண்டுகள் நடந்த தேடலில், பரிசோதனையில் புத்துயிர்ப்பை எழுதினார்.

இந்நாவலின் முக்கியப் பாத்திரம் நெஹ்லூதவ். இப்பாத்திரம் தன்னுடைய பண்ணை நிலங்களை, விவசாயிகளுக்குப் பங்கிட்டுத் தருகின்ற புரட்சிகரமான எண்ணத்தை நோக்கி நகரும்போது நமக்கு யார் நெஹ்லூதவ்? யார் டால்ஸ்டாய்? என்கிற குழப்பம் ஏற்படும்.

ஆம், டால்ஸ்டாய் தன் ஆப்பிள் மரங்கள் நிறைந்த பண்ணைத் தோட்டங்களை விடுத்து, அமைதியை விடுதலையை நோக்கி முன்னேற தனது வீட்டிலிருந்து வெளியேறுகிறார். குபேர்னியாவின் ரயில் தடங்களில் மேற்கொண்ட இந்நீண்ட பயணத்தின் முடிவில், ஒரு சிறிய ரயில்வே நிலையத்தில் இறுதியாக உயிர்விடுகிறார்.

டால்ஸ்டாயும் ஒரு இயேசுநாதரே. மரணத்தை வெல்லும் வழியை அவருக்குக் கண்டுபிடிக்கத் தெரிந்திருந்தது. ஆகவே, அவரால் புத்துயிர்ப்பை நிகழ்த்த முடிந்தது!

அவருக்கு இந்தியாவில் ஒரு முக்கியமான வாசகர் இருந்தார். அவர் பெயர் காந்தி!

இருவருக்கும் கடிதப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. டால்ஸ்டாய் காந்தியைத் திருக்குறள் படிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

காந்தியும் சிலுவை சுமந்தவர். புத்துயிர்ப்பை எட்டியவர். புத்துயிர்ப்பு தேவ மைந்தர்களுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும் சாத்தியம் எனக் காட்டியவர்கள் காந்தியும் டால்ஸ்டாயும்!

• • •

## கோடையிடம் கற்பது!

~

பள்ளிக்குக் கோடை விடுமுறை.

மாணவர்கள் சிறிது காலம் திருவள்ளுவர், அசோகர், பாபர், ஐன்ஸ்டின் தொந்தரவுகளில்லாமல் நிம்மதியாக இருப்பார்கள். எங்கள் கிராமத்துப் பிள்ளைகளைக் கம்ப்யூட்டர், நீச்சல், ஸ்போக்கன் இங்லீஷ், பெர்ஸ்னாலிடி டிவலப்மென்ட் வகுப்புகள் என அனுப்பி உறவுகள் டார்ச்சர் செய்யப்போவதில்லை.

பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்க முடியாத பல விஷயங்களை இந்தக் கோடை சொல்லிக் கொடுக்கும்.

திருடாதே என்கிற போலி உபதேசத்தைப் பள்ளி சொல்லும். மோர்சார் மரத்து கிளிமூக்கு மாங்காயை, சாராயக் கடைக்காரர் வயலில் விளைந்த கம்மங்கதிரை, மணியக்காரர் தோட்டத்து விளாம்பழத்தை, பட்டியிலிருக்கும் வாத்துமுட்டைகளைத் திருட, இத்தகு கோடையே எங்களைப் பழக்கியது!

பேட் டச்சை ஸ்கூல் சொல்லித் தந்தது. பெரிய வாய்க்காலில் மீன் பிடிக்க தாவணி அவிழ்த்துத் தந்தார்கள் அஞ்சலைகள். அப்போது சேறு நனைந்த அங்கங்களைத் தொட்டுத் துடைத்த கள்ள மனமும் கோடை தந்த பரிசே!

'அரவம் ஆட்டாதே!' ஆசிரியர் கூற்றுகளை மறந்து தண்ணீர் பாம்பைப் பிடித்து அஞ்சலைகள் பார்க்க தலைக்கு மேல் சுற்றியதெல்லாம் கோடைகாலக் குறிப்புகளுள் ஒன்று!

கிணற்றில் மூழ்கி மண்ணெடுத்து வீரம் பழகியது, நடுக்குளத்தில் தாமரை பறித்து ஈரம் பழகியதெல்லாம் கோடையின் கொடைகள்!

வள்ளுவனுக்கு வேர்வையில்லை. கிராமத்து வாத்தியாரிடம்கூட பாண்ஸ் மணமுண்டு. ஆனாலும் பெரியேரியைக் கலக்கிய சேற்றுவாசனை கோடைக்குரியது!

ஏரிகளும் காடுகளும், மீன்களின் இனப்பெருக்கத்தை வண்ணத்திகளின் வாழ்க்கை சுழற்சியைக் கைகளில் கவுச்சி மணக்கவும் வண்ணம் படியவும் கற்றுத் தந்தன! ஆடுகள் குட்டி போட்டதை மாடுகள் கன்று ஈன்றதை பெரியவர்கள் அருகிருந்து கண்டு பிரசவ வாதைகளை அறிந்ததும் இத்தகு கோடை விடுமுறைகளில்தான்!

பாடப்புத்தகங்கள் மதிப்பெண்களை மட்டுமே கொடுத்தன. கோடை விடுமுறைகளோ மாவை, பலாவை, விளாங்கனியை, குரவை மீன்களை, கம்மங்கதிர்களை, அஞ்சலைகள் காக்கா கடி கடித்துக் கொடுத்த கமர்க்கட்டுகளைக் கொடுத்தன! வெள்ளாற்றின் ஈரக்காற்றை, கொக்குபூத்த நடவு வயல்களின் மண்கவிச்சியை, பெரியேரிக்கரைப் புதர்களின் காடைகளை, வேப்ப மரப் பொந்துகளிலிருந்து விருட்டெனப் பறந்து செல்லும் கிளிகளை, சொட்டவனத்துப் பெண்கள் தலையில் சுமந்து வரும் வெள்ளரிப் பிஞ்சுகளை, ஆதிவராகநல்லூர் ஐஸ்காரர் கொண்டு வரும் சேமியா ஐஸ்களை, மத்தாப்புத் தோட்டத்தில் களவாடிய நுங்குகளை விட பிஎட் எம்எட் படித்த ஆசிரியர்கள் சொல்லித்தர ஒன்றுமில்லை.

ஆகவே, அன்பு மாணவர்களே! புத்தகத்தை மூடி வையுங்கள். கோடையைத் திறந்து வையுங்கள்!

• • •

## மாடுமேய்க்கும் கண்ணே!

~

இன்று அருணா சாய்ராமின் 'மாடு மேய்க்கும் கண்ணே நீ போக வேண்டாம் சொன்னேன்' கேட்டேன். மனதை அள்ளுகிறார் அருணா!

குழந்தையான சுட்டி கண்ணனுக்கும் தாயுக்குமிடையேயான ரொமான்ஸ் பாடல்.

'காய்ச்சின பாலு தரேன், கல்கண்டுச் சீனி தரேன்

கை நிறைய வெண்ணெய் தரேன், வெய்யிலிலே போக வேண்டாம்!'

எனும் வரிகளில் 'காய்ச்சின'தை 'கய்ச்ச்சீன' என நெடிலை குறிலாகக் காய்ச்சுகிறார். சீனியை ச்சீனியாக்குகிறார். 'வெய்யிலை'யும் முறுக வைக்கிறார்! ஆனால் இங்கு அருணாவின் உச்சரிப்புப் பிழையும் அழகாகிறது!

இதுபோலவே

'கோவர்த்தன கிரியில் கோரமான மிருகங்கள் உண்டு

கரடி புலியைக் கண்டால் கலங்கிடுவாய் கண்மணியே'

எனப் பாடும்போது மிருகங்களை 'ம்ருகங்கள்' என்று புதிய தமிழை அருணா இசைக்கிறார்.

இதுபோல ஜேசுதாஸ் போன்ற இசைவாணர்களும் பிழைபட பாடுவதுண்டு. இது ஒருவகை ஒலி பேதம். கர்நாடக இசையில் இதை ஜிரா என்கிறார்கள். இப்படிதான் 'எந்த 'ரோ' மகானுபாவுலு' வை எட்டுக்கட்டையில் இழுப்பார்கள். நானெல்லாம் இசையில் ஸீ'ரோ'! ஆனால் இசையை ரசிக்க தேவைப்படுவது மனம்தான். அறிவு இல்லை. இது செஞ்சுருட்டி ராகம். சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்கிற ராகம்.

அருணகிரிநாதரின் 'நாத விந்து களாதி நமோ நமோ' கூட செஞ்சுருட்டிதான்.

இதைவிடவும் மாடு மேய்க்கும் கண்ணா அபாரம்.

'யமுனா நதிக் கரையில் எப்பொழுதும் கள்வர் பயம்

கள்வர் வந்து உனை அடித்தால் கலங்கிடுவாய் கண்மணியே!'

எனக் கலங்குகிறாள் யசோதை.

'கள்ளனுக்கோர் கள்ளன் உண்டோ? கண்டதுண்டோ சொல்லும் அம்மா?

கள்வர் வந்து எனை அடித்தால் கண்ட துண்டம் செய்திடுவேன்!'

என வாயாடுகிறான் கண்ணன்.

யசோதை போல்தான் தமிழும். தெருவில் இறங்கினாலே கொரோனா சொல்லிப் பயமுறுத்துகிறார். ‘வைரஸ் வந்து எனை அடித்தால் கண்ட துண்டம் செய்திடுவேன்!’ எனப் பதில் சொல்லிப் படிதாண்டுகிறான் க.கா!

கர்நாடிக்கெனப் பயப்பட வேண்டாம். யுடியூபில் ‘மாடு மேய்க்கும் கண்ணே’ கேளுங்க. கேட்டுக்கிட்டே இருப்பீங்க!

• • •

## கர்ணன் - வீரனின் கதை!

*(முதல் பார்வை)*

~

செவ்வாய் கிரகத்துக்கு ராக்கெட் விடும் காலத்தில், சேரிக்குள் பஸ் வரவில்லை! எனப் படம் எடுக்கும் அவலம் இந்தியாவில் / தமிழகத்தில்தான் நடக்கும்.

தமிழ் சினிமாவில் ஆயிரக்கணக்கான ஜிம்பாய்களை கனல் கண்ணன், அனல் அரசு போன்றோர் துணையோடு துவைத்துப்போடும் சூப்பர் ஸ்டார்களைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால், நிசத்தில் வீரன் என்பவன் யார்? நம் பக்கத்து வீட்டுப் பிள்ளை படிக்கப் போனால் அவனைக் கேலி செய்து மீண்டும் வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கிறது ஒரு கூட்டம். ஆஸ்பத்திரி போகும் பிள்ளைத்தாச்சி பெண்ணுக்குப் பஸ்ஸை நிறுத்தாதே என்கிறது ஒரு கூட்டம். இதற்குப் பின்னால் இருப்பது சாதி பெருமிதமும், தீண்டாமையும். தமிழர்களின் உண்மையான வில்லன் சாதி. ஆனால் இங்கு வில்லன் என்று நம்பியாரைக் காட்டினார்கள். ரகுவரனைக் காட்டினார்கள். பிரகாஷ்ராஜைக் காட்டினார்கள். இப்போதுதான் மாரி செல்வராஜ், ரஞ்சித் போன்றோர் உண்மையான வில்லன்களைக் காட்டுகிறார்கள்.

இதில் கொடுமை என்னவென்றால், இந்த போலி வில்லன்களைப் போட்டுத் தள்ளும் ஹீரோக்களுக்குப் பல சேரிகளில் ரசிகர் மன்றம் வைத்தார்கள். நத்தத்தில், திண்ணியத்தில், நாயக்கன் கொட்டாயில், பொன்பரப்பியில், சோகனூரில் தங்கள் வாயில் மலமும் சிறுநீரும் திணிக்கப்பட்டபோது, காதலித்த தங்கள் அண்ணன்களைத் தண்டவாளங்களில் தூக்கி எறிந்தபோது, தங்கள் சிறிய உடைமைகளும் அடித்து நொறுக்கப்பட்டபோது, தங்கள் உறவுகளைக் கொன்றொழித்தபோது, தங்களுக்காகக் களத்தில் வந்து நின்றவர் யார்? தங்களின் நாயகன் யார்? என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

பஸ் மட்டும் அல்ல, சுத்தமில்லாத சேரிக்குள் சாமியே வராது ! என்றார்கள். சேரித் தேர் ஊர் வழியாக வந்தபோது, அதில் வீற்றிருந்த சாமியையும் எரித்துக் கொன்றதைப் பார்த்தார்கள். பஸ் நிற்காத காரணத்தால் ஆஸ்பத்திரி போக முடியாமல் இறந்த தங்கள் சகோதரிகள்தாம் கன்னிமார் சாமிகள்! என்பதை அவர்கள் உணர்ந்தபோது இந்தியாவில்/தமிழகத்தில் புதிய கதைகள், புதிய சினிமாக்கள், புதிய இசைகள் தோன்ற ஆரம்பித்தன.

வீரர்கள் சினிமாவில் அல்ல நம்மிடம் இருந்தே தோன்றுகிறார்கள்! என்பதை அவர்கள் கதையாகவும் படமாகவும் படைக்கத் தொடங்கினார்கள். இதுவரை எந்த சினிமா தலித்துகளை வெறும் ஒரு சீன், இரண்டு சீன்களில் ரௌடிகளாக, திருடர்களாக, பொறுக்கிகளாகக் காட்டியதோ, அதே சினிமாவில் அவர்களை ரஞ்சித்தும், மாரி செல்வராஜும் வீரர்களாக, நாயகர்களாகக் காட்டத் தொடங்கினார்கள்.

மாரி செல்வராஜ் மீது ஒரு மெல்லிய புகார் இருந்தது. பரியேறும்பெருமாளில் ஆதிக்க சாதிகளிடம் மனமாற்றத்தை அவர் இறைஞ்சுவதாக அந்த விமர்சனம் இருந்தது. அந்தச் சிறிய விமர்சனத்தை கர்ணனில் துடைத்து எறிந்திருக்கிறார்.

இடைவேளையில் கர்ணன், பொடியன் குளத்தில் நிற்காத பஸ்ஸை அடித்து நொறுக்குகிறான். பஸ் வெறும் உருவகம். இனியும் இந்தியாவில் தலித்துகளுக்கு கோவிலில், பள்ளிகளில், பல்கலைக்கழகங்களில், வேலைவாய்ப்பில் நுழைய அனுமதி இல்லை என்றால் அவை எல்லாவற்றையும் அவர்கள் அடித்து நொறுக்குவார்கள்.

இதுவரை தலித் அரசியலைப் பேசிய படங்கள், ஆதிக்க சாதி வில்லன்களை மட்டுமே புரட்டி எடுத்திருக்கின்றன. ஆனால் ஆதிக்க சாதியைப் பாதுகாக்கிற இந்தியாவின் அறமன்றங்கள், காவல் நிலையங்கள் குறித்த அச்சத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களிடம் போக்க வேண்டியிருக்கிறது.

நம்முடைய சுயமரியாதை, சுயமதிப்பு இவற்றின் மீது கைவைப்பது சாதியமைப்போ, சட்டமோ, துப்பாக்கியோ, எதுவாக இருந்தாலும் தூக்கிப்போட்டு மிதி என்கிறான் கர்ணன்.

கர்ணன் என்பவன் ஒரு தனுஷ் மட்டுமில்லை. இந்தியாவின்/ தமிழகத்தின் எல்லாச் சேரிகளிலும் கர்ணன்கள் இருக்கிறார்கள். இனியும் கர்ணன் வஞ்சத்தில் வீழமாட்டான். போர்க்களத்தில் ரத்தம்கக்கி சாகமாட்டான். அதே ஆண்ட பரம்பரைக் கதைகளோடு, ஆதிக்கசாதி திமிரோடு, சகமனிதனின் சுயமதிப்பில் கைவைப்பவர்கள் யாராயினும் அவர்கள் கழுத்தின்மீது, விடுதலையைப் பாடிக்கொண்டிருக்கிறது கர்ணனின் வாள். ■

● மௌனன் யாத்ரிகா

# கற்பதுவே.. கேட்பதுவே..!

யாழன் ஆதி



**பிறமொழி கவிதைகளைப் படித்து அதன் பாதிப்பால் எழுத வரும் கவிஞர்கள் அதிகரித்து வரும் சூழலை எப்படி பார்க்கிறீர்கள்?**

கலையின் வளர்ச்சி என்பதின் ஓர் அலகாகவே அதை நாம் பார்க்கலாம். 'போலச்செய்தல்' என்பது ஓர் உத்திதான். ஆனால், அதைப் போலவே செய்யக்கூடாது. முன்பு ரதபந்தக் கவிதை என்று எழுதுவார்கள். ரதத்தைப் போலவே அந்தக் கவிதை இருக்கும். அதைப்போலவே இல்லாமல் இடைக்காலத்தில் இறங்கி என்ற சொல்லை

இ

ற

ங்

கி என எழுதி அச்சாக்கினார்கள். இது, பார்ப்பதற்கும் படிப்பதற்கும் ஒரு சுவையூட்டமாக இருக்கிறது என்பதற்காகவே அதைப்போலவே தொடர்ந்து எல்லாவற்றையும் எழுதுவேன் என அடம்பிடிக்கக் கூடாது. ஒன்றைப் படித்துவிட்டு அதைவிட சிறந்ததாகவே ஒரு படைப்பை உருவாக்க வேண்டும். ஆனால் அந்தக் கருப்பொருட்களை நாம் பயன்படுத்த முடியாது. ஆங்கிலக் கவிதைகளில் வருவனவற்றைச் சிலர் பயன்படுத்துகின்றனர். பியானோவையே வாசிக்காத தமிழ்க்கவிஞர் ஒருவர் 'என் பியானோவின் கருப்பு வெள்ளைக் கட்டைக்கிடையில் கசியும் மது நீ' என்று எழுதினால் அதில் பொய்மை பூத்துக் கிடக்கிறது என அர்த்தம். நம் மரபுகளை வாழ்வை அந்த வடிவத்தில் கூறுவது தவறில்லை என்றே கருதுகிறேன்.

**புனைவு வேறு, இலக்கியம் வேறு என்ற கருத்து இருக்கிறது. அதில் புனைவுக்கு ஒரு லட்சியமும் வேண்டாம் என்றும் ஆனால், இலக்கியத்திற்கு லட்சியமே நோக்கு என்றும் கூறப்படுகிறது. அப்படியெனில் கவிதை புனைவுத்தன்மையோடு இருப்பது சரியா தவறா?**

புனைவு என்பது இலக்கியத்தின் உள்ளடக்கம்தான். புனைவின்வழியேதான் இலக்கியத்தை நாம் கண்டடைகிறோம். சிலம்பில் கண்ணகி கோவலன் வாழ்க்கை யதார்த்தம் என வைத்துக்கொள்வோம். அதைக் குடிமக்கள் காப்பியம் என்கிறோம். அந்தக் காப்பியம் எழுதப்பட்ட காலத்தில்

வந்த பல காப்பியங்கள் பிறநாடுகளில் மன்னர்கள் குறித்தானது. இது மட்டுந்தான் சாதாரண குடிமக்களைத் தலைவன் தலைவியாகப் போற்றிய காப்பியம். வாழ்க்கையில் வரும் இன்பம் துன்பம் எல்லாம் அவர்களுக்கும் உண்டு. அதைப் பாடுபொருளாக்கிய இளங்கோ பல இடங்களில் புனைவுகளை அள்ளித் தந்திருப்பார். 'வையை என்னும் பொய்யாக் குலக்கொடி தையற்குறுவது தானறிந்தனள் போல்' என்பார்.

புனைவு வாசகருக்கு வாசிப்பின் சுகத்தினையும் இலக்கியம் லட்சியத்தியத்தையும் தருகிறது. வெறும் புனைவு பிற்காலத்தில் காட்சிப் பொருளாகிவிடுவதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளது. ஆனால் அதில் வாழ்க்கையும் ஒரு சரடாக ஓடும்போது அது வாழ்வியலாக மாறிவிடுகிறது. சமூக மதிப்பீடு அற்றதால் என்ன பயன் இருக்கிறது? நீ கொண்டு வந்த இந்த மல்லிகைச்செடியை எங்கு நடுவது என்று ஒரு கவிதை இருப்பதற்கும் நீ கொண்டுவந்த இந்த மல்லிகைச்செடியை எங்கு நடுவது பீ நாறும் என் வீட்டில் என்று கேட்பதற்குமான ஒரு வேறுபாடு உண்டல்லவா? அந்த வேறுபாடுதான் சமூக மதிப்பீடு. அதைக் கொண்டதை இலக்கியம் எனலாம். அதைச் சொல்கையில் கையாளும் ஈர்ப்பை புனைவு எனலாம்.

**இலக்கிய வடிவில் ரொம்ப ஆழமானதும் கூர்மையானதும் நுட்பமானதுமான வடிவம் கவிதை என்பார்கள். அப்படியிருக்க... இவ்வளவு கவிஞர்கள் தமிழில் எப்படி உருவாகிறார்கள்?**

படைப்புகளின் உச்சம் கவிதை. ஆனால் அதை எழுதுவதற்கு அவ்வளவு மெனக்கெடத் தேவையில்லை. உங்களிடம் சொற்களும் கவிதா மனமும் இருந்தால் போதும். ஆனால் ஒரு கட்டுரைக்கு உங்களுக்குத் தரவுகள் தேவை, அவற்றைத் தேடி அலைய வேண்டும். இல்லை என்றால் கட்டுரை சரியானதாகவும் தன்சார்புள்ளதாகவும் இராது. சிறுகதையும் அப்படித்தான். அதற்கான நுணுக்கமும் விவரணைகளும் இல்லை என்றால் கதை கந்தல்தான்.

ஆனால் கவிதை இதுதான் என வரையறுக்க இயலாத ஒன்றாகவே இருக்கிறது. அது மட்டுமல்ல தமிழர்வாழ்வில் கவிதை மிகவும் மரபானது. நான் அறிவியல்பூர்வமான மரபியலையே கூறுகிறேன். ஜீன்களின் வழியே ஊடுருவும் தன்மை உடையதாக இருக்கிறது. ஆகவே கவிதை எழுதுபவர்களின் எண்ணிக்கையும் அதிகம் கவிதைத் தொகுப்புகளின் எண்ணிக்கையும் அதிகம்.

அச்சாக்கம் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டுவருகிறது. இப்போது நம்மால் 5 பிரதிகள் கூட அச்சடித்துக்கொள்ள முடியும். இல்லை என்றால் பி டி எஃப் ஆக்கி வெளியிட முடியும் என்ற தன்மையில் ஒரு நாவல் எழுதினால் நிறைய பக்கங்கள் தேவை. கவிதைத் தொகுப்புக்கு அப்படியில்லை. அதனால் கவிஞர்கள் எண்ணிக்கை அதிகமாகலாம். ஆனால் அவர்களின் தொடர்ந்த கவிதையியல் செயல்பாடுகள்தான் அவர்களைக் காலம் கவிஞர்களாகத் தக்க வைக்கும். ஒரு தொகுப்புக்குப் பின் கதை எழுதிக்கொண்டிருப்பர் என்றால் அவர்கள் கவிஞர்கள் பட்டியலில் சந்தா செலுத்தாத உறுப்பினர்கள் ஆகிவிடுவார்கள், அப்படி எத்தனையோ பேர் இப்போது சங்கத்தில் இல்லை.

இன்னொரு சமூகக் காரணம் இருக்கிறது. படிப்பும் எழுத்தும் இப்போதுதான் அடித்தள சமூகங்களுக்கு வாய்த்து இருக்கின்றன, அவர்கள் எழுதிப்பார்க்கிறார்கள். தங்களுக்கு மறுக்கப்பட்டவைகளை, தங்கள் தேவைகளை, எதிர்பார்ப்புகளை, அவமானங்களை, இதுவரை சொல்லப்படாத வாழ்வை, அங்கீகரிக்கப்படாத தங்கள் உடல்களை எழுதிப்பார்க்கிறார்கள். அதற்குத் தோதான வடிவமாய்க் கவிதை இருக்கிறது. அதுவே அவர்களின் இலக்கிய வடிவமாகவும் ஆகிவிடுகிறது.

• • •

## அமிர்தம் சூர்யா



**முன்பு உங்களுக்கு ஒரு கவிதைக் களம் இருந்தது. அதில் நீங்கள் சுற்றிய கொம்பு இப்போது எங்கே? அதை ஏன் மறைத்து வைத்துள்ளீர்கள்?**

அன்று இருந்த கவிதைக்கான இலக்கியத்துக்கான களம் அப்படியேதான் இருக்கிறது. என் கம்பும் அப்படியே என்னிடம்தான். அதைச் சுற்றவேண்டிய அவசியம் இப்போது இல்லை. 2000 வாக்கில் கணையாழி, காலச்சுவடு, கவிதாசரண், நவீன விருட்சம், அதன் பின் கல்குதிரை, சதுக்க பூதம்- இதில் எழுதுவதுதான் இலட்சியம், நவீன கவிஞன் என்ற அந்தஸ்தும் கிடைக்கும் என்று நம்பினோம். அது உண்மையும்கூட. எதன் பொருட்டும் வெகுஜன பத்திரிக்கையில் எழுதக்கூடாது என்பதில் கவனமாய் இருந்த காலம் அது.

காலச்சுவடில் பிரத்யேகமான வடிவமைப்பில் வைரமுத்து கடிதம் (வாசகர் கடிதம்தான்)போட்டபோது அவர் கவிஞர் அல்ல பாடலாசிரியர்தான் என அவருக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் எனக் கேட்ட ஆளில் நானும் ஒருவன். அட, இப்போதும் என் கவிதை மொழி மாற்று இதழுக்கானதுதான். ஓவியர் சந்ருவைச் சந்தித்து மனப்பிறழ்வும் வண்ணங்களும் குறித்துப் பேட்டி எடுத்து கல்கியில் போடல. நண்பர் லஷ்மி மணிவண்ணன் நடத்தும் சிலேட்டுக்கு அனுப்பி அச்சானது. கல்கியில் பக்கங்கள் கொடுத்தாலும் அதில் நான் எழுத இயலாது. காரணம் அதன் வாசகர் வேறு என் கவிதை மொழி வேறு. சமீபத்தில் என் கவிதைகளை உயிர் எழுத்தில் சுதீர் செந்தில் போட்டார். ஆக நான் இன்னும் சமரசம் செய்துகொள்ளாத கவிஞன். என் பணி வேறு என் கவிதை இயங்கு தளம் வேறு.

**கவிதைகள் குறித்துப் பேசுவதற்காக நிறைய கவிதை நூல்களை வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றதால் சமகால கவிதை குறித்து உங்களால் மேலதிகமாகச் சொல்ல முடியும். சொல்லுங்கள்! தமிழ்க் கவிதையின் லட்சணத்தை.**

இன்று கவிதையில் நான் கொண்டாடும் இதுதான், இவன்தான் கவிஞன் என்று என்னைக் கேட்டால் எனக்கொரு பட்டியல் உண்டு. அது வெகுஜன ஊடகத்துடன் தொடர்பு அற்றது. கவிதையில் கண்டராதித்தன், நேசமித்திரன், வெயில், இசை எனத் தொடரும் அதேவேளை கவிதையியல் குறித்து இளங்கோ கிருஷ்ணன், தமிழ்மணவாளன் பணிகள் மறுக்கவியலாதவை. இன்றும் சிறப்பாக எழுதும் அதீத கவிதை புனைவாளர்கள் நிறைய பேர் உண்டு. கவிதைக்காரன் இளங்கோ, கார்த்திக் திலகன், தாமரை பாரதி, பூவிதழ் உமேஷ், அம்சப்ரியா, ஆண்டென் பெனி, தேன்மொழி தாஸ், ஜீனத் எனப் பட்டியல் நீளும்.

ஆயினும் முகநூல்- இலக்கிய வெளியில் ஒரு ஜனநாயகத் தன்மையைக் கொண்டுவந்து சர்வாதிகார நாட்டாண்மைத் தன்மையை உடைத்தது. அதே நேரம் கவிதையையும் அது நீர்க்கச் செய்துவிட்டது. உடனடி புகழுக்கான எளிய சூத்திரமாகவும் கவிதையை முகநூல் ஆக்கிவிட்டது துரதிஷ்டம்தான்.

**உலகக் கவிதைகளையெல்லாம் கரைத்துக் குடித்து விட்டவர்களின் நூலுக்கும் பேசுகிறீர்கள், உள்ளூர் கவிதைகளைக் கூட மோந்து பார்க்காதவர்களின் நூலுக்கும் பேசுகிறீர்கள். எப்படி அந்த வித்தையைக் கற்றீர்கள்?**

இதே கேள்வியை விஷ்ணுபுரம் இலக்கிய வட்டத்தில் ஆசான் ஜெயமோகன் என்னிடம் பொது மேடையில் கேட்டார். தபுசங்கரிடம் சிக்கி உள்ள கவிதை ரசிகனை

தேவதச்சனிடம் கொண்டு வரவைக்கவும் மரபுக்கும் புதுக்கவிதைக்கும் இடையில் அல்லாடுபவனை நவீனக் கவிதை நோக்கி நகர வைப்பதற்கான முயற்சியும்தான் இந்தக் கூட்டங்கள். ஒன்று தெரியுமா? நரனின் முதல் தொகுப்பைக் குறித்துப் பேச அண்ணாசாலையில் எல் எல் ஏ பில்டிங்க்கில் இன்பா சுப்ரமணியம் அழைக்க, நான், நரன் இன்னும் தன் கவிதையில் நகரவேண்டிய தூரம் இருக்கிறது என்று பேசியவன். ஆனால், இன்று நரன் வந்திருக்கும் இடம் கவிதையில் உயரம். அவர் வளர்ச்சிக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால், இப்போது நான் மேடையில் பேசும் சொல்லும் அபிப்ராய அணுகுமுறையை மாற்றிக்கொண்டேன். ஆனால், எது அசலான கவிதை என்பதில் என் தீர்மானம் அப்படியேதான் இருக்கிறது.

• • •

**ஸ்ரீநேசன்**



**தமிழ்க் கவிதை மரபு உட்பொருளுக்குப் பேர் போனது. கவிதையின் ஆழமான உட்பொருள்தான் வாசிப்போரின் நினைவு அடுக்குகளைத் தொட்டுக் கலைக்கக் கூடியது. இன்று எழுதப்படும் கவிதைகளுக்கு அந்த ஆழம் இருக்கிறதா?**

கவிதையின் உட்பொருள் – ஆழம்.

நல்ல கவிதை வாசிப்பில் பல உட்பொருளைக் கொண்டதாகவே இருக்கும். இந்த உட்பொருளைக் கவிஞன் உருவாக்குகிறான் என்பதைக் காட்டிலும் வாசகன் கண்டடைகிறான் என்பதுதான் உண்மை. உட்பொருளைப் பூடகமாக வைத்துப் புதிர்போலக் கவிதையை ஆக்கும் திறமையான கவிஞர்கள் வாசகனுக்கு ஒரு திறப்பையும் தராமல் போகலாம். இது வாசிப்பவனைத் திறனற்றவன் என்றாக்கிவிடாது. மனதில் ஒளிக்கீற்றாய்ப் பளிச்சிடுகிற ஒரு எளிய காட்சி வாசிப்பவனைப் பல அனுபவங்களுக்கு இட்டுச் செல்லலாம். இங்கு தாம் அடைந்த வாசக அனுபவம் அவன் வாசிப்புத் திறனால் கூடிவந்தது என்றும் கூற முடியாது.

இதற்கு நேரெதிராக உண்மையான கவிதையை அடையாளம் தெரியாமல் கடக்கும் மேலோட்டமான வாசகச் செயல்பாட்டையும் ஒன்றுமில்லாத கவிதைக்குத் தம் "திறமையான" வாசிப்பினால் மிகை பொருள்களைக் கற்பிக்கும் திறனாய்வாளர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே கவிதையைப் பொருத்தவரை "திட்டம்" என்பதைக் காட்டிலும் உருவாக்கத்திலும் கண்டடைவதிலும் இயல்புத்தன்மையும் ரசனையுமே முதன்மை பெறுகிறது என்பேன்.

"யாருமற்ற பிரதேசத்தில்

என்ன நடந்தது கொண்டிருக்கிறது

எல்லாம்"

இந்த மூன்று வரிகளின் உட்பொருள் என்ன? அதன் ஆழம் என்ன? எழுதப்பெற்ற காலத்தில் பதியப்பெற்ற இச்சிறு கவிதையின் உட்பொருளையும் ஆழத்தையும் காலந்தோறும் வாசிக்கும் எல்லா வாசகர்களும் அடைந்துவிடுவார்கள் என்ற நிச்சயம் எனக்கில்லை. எழுதியவர் எதைக்கருதி எழுதினாரோ (அப்படி எழுதப்பட்டிருப்பின்)அதையல்ல; என் வாசக அனுபவத்தையேனும் எவராவது கண்டடைவார்களா என்பதில் எனக்கு ஐயம் மாத்திரமே உண்டு.

**நவீனத்தைக் கையாள்வதன் மூலம் யதார்த்தத்தைக் கைவிடுகிற போக்கு நிகழ்காலக் கவிதைகளில் அதிகரித்துள்ளதா?**

நவீனம் என்பதை நான் புனைவு எனப் புரிந்துகொள்கிறேன். உண்மையில் படைப்பில் எதார்த்தம் என்பதே இருக்க முடியாது. நடைமுறை எதார்த்தம் படைப்பில் ஒருவிதத் தணிக்கை கொண்டதாகவே பதிவுபெறும். உரைநடையின் எதார்த்தமே இவ்வாறெனில் கவிதையில் எதார்த்தம் என்ற ஒன்றை எப்படி ஏற்பது. புற எதார்த்தம் படைப்பாளியின் பார்வையில் கிரஹிக்கப்படும்போதே அகத்தின் புனைவாக மாறிவிடும். ஒரே காட்சியைக் காணும் பலரும் அதைச் சித்தரித்தால் அது வேறான பல காட்சிகளாகவே வெளிப்படும். எதார்த்தம் என நீங்கள் குறிப்பிடுவதைச் சமூக நிகழ்வுகளை அது சார்ந்த மானுட வாழ்வியலை மையப்படுத்தும் படைப்புகள் குறித்ததாக எடுத்துக்கொள்கிறேன். ஒன்றை இன்னொன்றின் மூலம் கூறுவதையே இலக்கியம் ஆதாரமாகக் கொண்டு இயங்குவதாகக் கூறலாம்.

அக்கினிக்குஞ்சு கவிதையில் பாரதி ஊட்ட நினைக்கும் எளியோரின் எழுச்சியையும், ஒளியின் அழைப்பு கவிதையில் பிச்சமூர்த்தி படைத்துக் காட்டும் ஒடுக்கப்பட்டவர்களின் திமிறலையும் வேறெந்த மாதிரியான நீங்கள் எதிர்ப்பார்க்கிற எதார்த்தம் கொண்டும் படைத்திருக்கவே முடியாது. இங்கு சிறு நெருப்புப்பொறியும், சோனிக்கமுகும் கொண்டிருக்கிற அடிப்படை இயங்கியல் ஆற்றலைக் கவிதையில் கவனப்படுத்தும்போது அது வாசகனுக்கு தன்னுடைய ஆற்றலை முடுக்குவதான அனுபவத்தைத் தருவதாகி விடுகிறது. உரைநடை இலக்கியத்திலும்கூட இது சாத்தியம்தான். அசோகமித்திரனின் தண்ணீர் நாவல் வேறொன்றின் குறியீடாக வாசிக்கவும் இடமளித்திருக்கிறது. இரண்டாம் உலகப்போரின் அவலம்தாம் ஆல்பர் காம்யுவின் கொள்ளை நோய் நாவலாகப் பரிணமித்திருக்கிறது.

**கவிதையை எப்படி வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்பதற்கு வாசகருக்கு கவிதை குறித்த கோட்பாட்டுப் புரிதல் இருக்க வேண்டுமா? தேவையில்லையா?**

கவிதையை வாசிக்க கவிதைசார் உணர்வும் ஆர்வமும் ரசனையும் இருந்தால் போதுமானது. கவிதை வாசகனின் எதிர்பார்ப்பு ஒரு கவிதை வழங்கக்கூடிய புதிய பார்வையை, உணர்ச்சியை, மகிழ்வை, உளமலர்ச்சியை அடைவதுதாம். கலையின் அரசி எனப் புதுமைப்பித்தனால் போற்றப்படும் கவிதையைப்போல இன்றைய இலக்கிய வடிவங்களில் பலதள உபயோகி வேறெதுவும் இல்லை; இன்னொரு அர்த்தத்தில் ஜனநாயகப்பட்டது(அ) மலினப்பட்டது. ஆனால் உண்மையில் தீவிரத் தமிழ்க் கவிதை வாசகர்கள் சில நூறுபேர்கள் இருந்தாலே பெரிதுதான். பெரும்பாலும் இவர்களும் கவிதை எழுதுபவர்களாகவே இருக்கக் கூடும். இவர்களின் கவிதைக் குறித்த பார்வைக்கும் பொதுதள புரிதலுக்கும் இடையில் ஓர் அதல பாதாளம்.

இந்தச் சில நூறு பேர்களுக்கிடையேயும் மதிப்பீட்டில் சில நூறு பேதங்கள். இவற்றையெல்லாம் கடந்துதாம் கவிதை என்பது வாசிப்பவனின் மிகவும் தனிப்பட்ட தருணத்திலேயே முழுமையாகத் தம்மை அர்த்தப்படுத்துகிறது. தனிப்பட்ட ரசனை பூர்வ வாசிப்பில் கோட்பாடுகளின் துணை அவசியப்படுவதில்லை. திறனாய்வாளர்களுக்கு ஆய்வுக்கட்டுரையை எழுதி முடிக்க அது பேருதவி புரியக் கூடும். அத்துடன் அவர்களது கருதுகோளை வலியுறுத்துவதற்காகப் பயன்படலாம். உணர்ச்சிகளின் நுட்ப இழைகளால் பின்னப்படும் இக்கலையின் அழகியலை உணர அறிவார்ந்த கோட்பாட்டு அணுகல் முழுதும் ஒத்துழைப்பதில்லை. கோட்பாட்டாளன் கவிதைக்குள் கோட்பாட்டுக்கானதையே தேடுகிறான். தேவையானதைப் பயன்படுத்திக்கொண்டு கவிதையைத் தவற விடுகிறான். ஒரு நல்ல கவிதைக்குக் கோட்பாட்டின் துணை அவசியப்படுவதில்லை. கோட்பாட்டின் பணியை அது தம் வெளிப்பாட்டிலேயே செய்துகொண்டிருக்கிறது.

● ஆதிரன்

# மனநிலைக் குறிப்புகள் - 9

## ஓவிய மனநிலை

ஓவிய வரலாறு முதலில் குறியீட்டு வகைமைகளில்தான் தொடங்கியது. புள்ளிகள், கோடுகள், வட்டம் ஆகியவற்றால் சிறுசிறு படிமங்களை (image) உருவாக்கி படிப்படியாக யதார்த்தத்தில் உள்ளதை உள்ளவாறு அச்சு அசலாக ஓவியம் வரையும் கலையை மனிதர்கள் உருவாக்கினார்கள். யதார்த்தவகை ஓவியங்கள், சிற்பங்கள் அதன் உச்சத்தைத் தொட்டன. மிகத் துல்லியமான விவரணையுடன் ஓவியங்கள் உலகம் முழுவதும் உருவாகத் தொடங்கின. ஓவியர்கள் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தார்கள் எனத் துணிந்து கூறலாம். ஆனால் 1839இல் ஃபிலடெல்ஃபியா மாகாணம், செண்டர் சிட்டியின் செஸ்ட்நட் தெருவில் இருந்த ஒரு வியாபாரத் தளத்தில் அந்தத் துயரார்ந்த சம்பவம் நிகழ்த்தப்பட்டது. ஆம், 182 வருடத்திற்கு முன் ஒளிப்படக் கருவி மூலம் உலகின் முதல் செல்ஃபியை மனிதன் எடுத்துவிட்டான். அவன் பெயர் ராபெர்ட் கார்னெலியஸ். (உலகின் முதல் ஒளிப்படம் 1826இல் எடுக்கப்பட்டது) பிறகான காலங்களில் வாழ்வைத் தொலைத்து தற்கொலை செய்துகொண்ட ஓவியர்களின் ஓலம் வரலாற்றில் பதிவானது. ஆனாலும் ஓவியக்கலை தன்னை வேறு ஒரு தளத்தில் நிறுத்தி வெற்றிகரமாக வீறுநடை போட்டதென்பது வேறு வரலாறு. அதாவது ஓவியக்கலை தனது ஆதி செயல்பாட்டை – குறியீட்டு வகைமைக்குள் – மீண்டும் உருவாக்கி யதார்த்த ஓவியத்திலிருந்து அர்த்தம் உருவாக்குகிற ஒரு தளத்தில் தன்னை நிறுத்தி அதன் பல்வேறு வகைமைகளை நிகழ்த்திக்கொண்டது. ஒளிப்படத்துறையும் ஓவியத்துறையும் தனித்தனியான பாதைகளை அமைத்துக்கொண்டன. இது தொடர்ந்து நீடிக்கவில்லை.

1960களில் மனிதர்கள் ஒளிப்படங்களையும் ஓவியத்தையும் இணைத்தார்கள். ஒளிப்பட யதார்த்தவாதம் (Photorealism) என்ற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டது. ஒளிப்படங்களுடைய பிரதியை பல்வேறு ஓவியப்பொருட்கள் கொண்டு துல்லியமாக வரையும் உத்தி கையாளப்பட்டது. அமெரிக்க ஓவியர்கள் இந்த உத்தியை ஒரு அமைப்பாக உருவாக்கி செயல்படத்தொடங்கினார்கள். வரலாறு மறுபடியும் பழையவற்றைப் புதுக் கோணத்தில் தன்னைப் புதுப்பித்துக்கொண்டது. ஒளிப்படங்களை



அதன் அனைத்துத் துல்லியத்தோடும் பிரதிசெய்யும் யதார்த்தவகை ஓவியக் கலை உலகெங்கும் பரவியது. பல்வேறு பிரமாண்டங்கள் உருவாக்கப்பட்டன.

ஒளிப்பட யதார்த்தவாதக் கருத்துருவின் போக்கில் அதன் அடுத்த கட்டமாக, 1972இல் ப்ருசல்ஸ்ஸில் இருந்த இஸி ப்ரச்ட் *(Isy Brachot)* என்கிற ஓவியர் அதியதார்த்தவாதம் *(Hyper-realism)* என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து தனது கண்காட்சியை முன்வைத்தார். அன்றிலிருந்து ஒளிப்பட யதார்த்தவாதம் ஏறக்குறைய அதியதார்த்தவாதமாகவே மாற்றப்பட்டுவிட்டது எனலாம். இதன் மூலம் யதார்த்தவகை ஓவியக்கலை அதிதீவிரயதார்த்தநிலையை *(ultra-realistic manner)* அடைந்து வேகம்கொண்டது. உண்மையில், அறுபதுகளில் உருவாக்கப்பட்ட ஒளிப்பட யதார்த்தவாதத்திற்கு முற்றிலும் புதிதான வீச்சை உருவாக்கியது. அந்த வகையில், இவ்வகை ஓவியங்கள், பொதுவாக ஒரு ஒளிப்படத்தினைப் பிரதிமை செய்தாலும், அதையும் தாண்டிய ஒரு தீர்மானமான வரையறையையும் அதிதுல்லியத்தையும் உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டன. அவற்றின் பிரதிபலிப்பில் மேலதிக உணர்வுகளையும் புதுவகைக் கதைகளையும் குறிப்பதில் குவியம் கொண்டன. அதன் தொடர்ச்சியாக இருக்கும் யதார்த்தத்தில் இருந்து இல்லாத ஒரு யதார்த்தத்தை உருவாக்குவதில் வந்து சேர்ந்தன. அசல் ஒளிப்படத்தில் இல்லாத ஒரு புதுவகை யதார்த்தத்தை உருவாக்குவது என்கிற தத்துவார்த்த நிலையில் இந்த வகைமை ஓவியங்கள் வரையப்பட்டன. இன்றளவில் இந்தத் துறை 'இணைக்கப்பட யதார்த்தம்' *(Augmented Reality)* என்கிற உச்சபட்ச சாத்தியத்தில் உள்ளது. இணையத்தில் கொட்டிக்கிடக்கும் லட்சக்கணக்கான அதியதார்த்த ஓவியங்களில் எனக்குப் பிடித்த ஓவியர் *Stefan Marcu*வின் கொரில்லா ஓவியத்தைப் பகிர்ந்து இருக்கிறேன். கூடவே உலகின் முதல் செல்ஃபியையும்.



• • •

## தத்துவ மனநிலை

நுகர்வு. இந்தச் சொல்லுக்கான அர்த்தம்தான் ஏறக்குறைய நானூறு வருடங்களுக்கு முன்னால் அதாவது பதினாறாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் மனிதகுல வரலாற்றில் புதிதாய் உருவான முதலாளித்துவத் தத்துவத்தின் உயிர். நுகர்வு என்கிற நிகழ்வுபோக்கு கடந்த நானூறு வருடங்களில் பூமியைத் தாறுமாறாக கூறு போட்டுவிட்டது. அதீத லாபத்திற்காகத் தற்கொலை கூட செய்துகொள்ளும் முதலாளித்துவம். மிகாதிக மக்கள்தொகை பெருக்கம் மேலதிக ஏழைகளை உருவாக்கும். மேலதிக ஏழ்மை மேலதிக நுகர்வை உருவாக்கும். மேலதிக நுகர்வு கொள்ளை லாபம் என்றொரு பொதுத்திட்டத்தில் முதலாளியம் தன்னை வழி நடத்திக்கொள்கிறது. அதற்காக என்ன விலை கொடுத்தேனும் அதிகாரத்தைத் தன் வசம் வைத்திருக்க முயல்கிறது. முதலாளியத்தைத் தத்துவமாக நிறைய மனிதர்கள் எழுதித் தீர்த்திருக்கிறார்கள். நாடோடித்தனத்திலிருந்து (ஆதிப் பொதுவுடைமைச் சமுதாயம்) நிலவுடைமைச் சமூகம் உருவாகி நிலவுடைமைச் சமூகத்தை அழிக்க எழுந்த

புரட்சிகர சித்தாந்தமாக முதலாளித்துவத்தை முன்வைக்கிறார்கள். எதுவாகினும் நமது சமகாலம் என்பது முதலாளியக் காலகட்டம் என்பதை நாம் மறுக்க முடியாது. மேலும் அது தனது பதின்பருவத்தில் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.


எளிய முறையில் மக்களினிடையே வன்முறையின்றித் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முதலாளித்துவம் வைத்திருக்கும் ராணுவ தளவாடம்தான் ‘விளம்பரம்.’ நாம் ஒரு பொருளை நுகர்கிறோம் என்பது விளம்பரத்தின் ஊடாக அந்தப் பொருளின் அர்த்தத்தை நுகர்கிறோம் என்பதுதான் என்கிறார் ழான் பூத்ரியா *(Jean Baudrillard)*. விளம்பரமும் சினிமாவும் பொதுமக்களைச் சமன்குலையாமல் இருக்கச் செய்வதற்கான – மிக வெற்றிகரமான – ஆயுதமாக முதலாளியம் வைத்திருக்கிறது என்பது இவர் போன்றோரின் வாதம். இவரது தத்துவம்தான் இந்த அதியதார்த்தவாதம் *(hyperreality)*.

ஓவியத்தில் இந்த அதியதார்த்தவாதம் செயல்படும் முறை வேறாக இருந்தாலும் சமூக நகர்வின் வரலாற்றில் அதியதார்த்தம் ஒரு முக்கியமான மேலும் மிக ஆழமானதொரு வீச்சைக் கொண்டிருக்கிறது. அதியதார்த்தம் என்பது உண்மையான யதார்த்தத்திற்கும் ‘உருவாக்கப்படுகிற’ யதார்த்ததிற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியாத ‘மனநிலை’ பற்றிய கருத்துரு *(concept)*. தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம், பொதுவாக ஊடகம், உண்மைக்கும் போலிக்கும் இடையேயான ஒரு கோட்டை எப்படி மங்கலாக்கி நம்பவைப்பது பற்றிய ஆய்வு இது. யதார்த்த போலியை *(simulation of reality)* பல்துறை ஊடகங்கள் *(multimedia)* வழியாக உருவாக்கி ஒரு போலியான யதார்த்தத்தை மக்களில் மனதில் ‘நம்பவைக்கும்’ முறையை இது ஆய்வு செய்கிறது. நாம் அதாவது சமூகம் எதை நம்பவேண்டும் என்று அவர்கள் தீர்மானிக்கிறார்கள். அதனால் ஒரு போலி யதார்த்தத்தைப் பரப்புரை செய்கிறார்கள் என்று விவாதிக்கிறார்கள் இவ்வகை தத்துவவாதிகள். உலகம் இதுபோன்ற திரிக்கப்பட்ட *(fabricated)* அதியதார்த்தத்தை நம்பும்விதமாக இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்கின்றனர்.

ழான் பூத்ரியா பிரான்சைச் சேர்ந்த சமூகவியலாளர், தத்துவவாதி மற்றும் பண்பாட்டுச் சித்தாந்தங்களின் சிந்தனையாளர். இவர் பின்னை அமைப்பியல் *(post-structuralism)* மற்றும் பின்னை நவீனத்துவ *(post-modernism)* சிந்தனைகளின்பால் ஈர்க்கப்பட்டு அவற்றின் வழியே இந்த அதியதார்த்த தத்துவத்தை *(hyperreality)* விவரிக்கிறார். இன்றைய நடைமுறை நுகர்வுச் சமுதாயம் முழுவதும் யதார்த்தத்தையும் அதன் குறியீடுகளையும் *(symbols and signs)* மாற்றியமைத்துவிட்டது. மனிதர்கள் உருவாக்கப்பட்ட போலி யதார்த்தத்தைத்தான் அனுபவம் *(experience)* கொள்கிறார்கள். அதாவது மனித அனுபவம் என்பது போலியான யதார்த்தம் மட்டுமே. தொலைக்காட்சிகளின் மூலம் உருவாக்கப்படும் அதாவது இருபத்திநான்கு மணிநேர செய்தித் திணிப்பின் மூலம் சமுதாயம் ஒரு உருவாக்கப்பட்ட போலி யதார்த்தத்தில் வாழ்கிறது. உண்மையில் ‘நிஜமான யதார்த்தம் மரணித்துவிட்டது’ என்று வாதிடுகிறார். அவரது ‘வளைகுடா போர் நடக்கவில்லை’ *(The Gulf War Did Not Take Place)* என்ற அவரது பிரசித்திபெற்ற புத்தகத்தில் இது தொடர்பாக மிகத் தீவிரமான கருத்துக்களை முன்வைக்கிறார். எழுத்தாளர் ஜார்ஜ் லூயி போர்ஹேவுடைய ஒரு கதையை பூர்தியா சுட்டிக் காட்டுகிறார். அந்த கதையில் ஒரு பேரரசைச் சேர்ந்த நில வரைபட வல்லுனர்கள் தங்கள் நாட்டின் எல்லைகள் கொண்ட ஒரு வரைபடத்தை உருவாக்கி அதைப் பிரதி செய்து மக்களிடையே விநியோகம் செய்கிறார்கள். இப்பொழுது மக்களின் மத்தியில் தமது நாட்டின் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றது. அந்த நாட்டின் குடிமக்கள் தங்களிடமிருக்கும் வரைபடம் மூலம் ஒரு உருவாக்கப்பட்ட பேரரசின் கீழ் தாம் இருப்பதை உணர்கிறார்கள். அந்த வரைபடத்தில் துல்லியமான தகவல்கள் உருவாக்கப்பட்டு மக்களின் மனதில் பதியப்படுவதன் மூலம் ஒரு பேரரசின் கச்சிதமான போலியை மக்களின் சிந்தனைக்குள் உருவாக்கிவிடுகிறார்கள். இனி மக்கள் அந்த வரைபடத்தை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். ஒரு உண்மையான பேரரசின் போலிப் பிரதியை அவர்கள் தமது அரசிற்காகச் சுமப்பார்கள் காலகாலமாக,

இல்லையா? இனி அந்த நிஜமான நிலம் பற்றிய அக்கறை கொள்ளத் தேவையில்லை.

அதுபோலவே, சமகாலத்தில் மக்கள், தொலைக்காட்சி மற்றும் பல்துறை ஊடகங்கள் மூலமாக அதியதார்த்த வரைபடங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதன் மூலம் உண்மையான யதார்த்தத்தை மரணிக்கச் செய்கிறார்கள் என்கிறார் ழான் பூர்தியா. இவர் விவாதிக்கும் ஆழமான கருத்துக்களும் சிந்தனைகளும் உலகில் பல்வேறு தத்துவவாதிகளை வெகுவாக ஈர்த்திருக்கின்றன. தத்துவவாதிகளில் மிகச்சிறந்த ஒருவராக இவரைத் தத்துவ உலகம் கொண்டாடுகிறது. இவரின் தத்துவத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள பின்னை அமைப்பியல் மற்றும் பின்னை நவீனத்துவத்தைப் பற்றிய புரிதல் தேவைப்படுகிறது. அடுத்தடுத்து அவற்றையும் சுருக்கமாக அறிமுகம் செய்கிறேன்.



• • •

## இலக்கிய மனநிலை

இந்த முறை என்னுடைய சொந்த இசையை வாசிக்கிறேன். வாசகர்கள் மன்னிக்கவும். ஐநிலமும், கைக்கிளையும் பெருந்திணையும் சேர்த்து தமிழின் அகத்திணை ஏழு. நான் இந்தத் திணைகள் குறித்த கவிதைகள் எழுத முயன்றிருக்கிறேன். அந்த வகையில் சமகாலத்தில் மனித ஒழுங்கில் பல்வேறு திணையுருவாக்கம் நிகழ்ந்தேறிக் கொண்டிருக்கிறது என்பது எனது புரிதல். உலகம் முழுதும் பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயரும் அகதியர்கள் உருவாக்கும் திணை பற்றி நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அகதியம் என்பதை ஒரு திணையாகப் பாவித்து ஐந்து கவிதைகளை முயன்றுள்ளேன். வாசகர்கள் விவாதிக்கலாம். எனது எண் 8300020522.

இந்தக் கவிதைகளில் அகதிகள் தொடர்பாக நான் செய்திருக்கும் வரைமுறை மாற்றத்திற்குட்பட்டதே. மேலும் இணையத்தில் அலைந்து சில இலங்கைத் தமிழ்ச் சொற்பதங்களை உபயோகப்‘படுத்தியிருக்கிறேன்’. தவறுகள் இருந்தால் சுட்டுங்கள். திருத்திக்கொள்கிறேன். நன்றி.

அகதியம் – மெய்நிகர் நிலக்குறிகள்

01

கதியற்றவர் அகதியர்
அவர்களது நிலம் நினைவும் நினைவு சார்ந்ததும்
அவர்களது பூ ஊமத்தை கள்ளி நெருஞ்சி
அவர்களது தெய்வம் பிடாரி
அவர்களது விலங்கு யாளி கழுதைப்புலி
அவர்களது பண் பேரோலம் பெருங்கூத்து
அவர்களது பறை நரம்பு யாழ்
அவர்களது மரம் ஆலம் ஆமணக்கு
அவர்களது பறவை நீர்க்காகம் கூகை
அவர்களது தொழில் சகித்தல்
அவர்களது ஊர் மெய்நிகர் நிலம்
அவர்களது மக்கள் நரன் நரள்–

02

வானோடி ஆகவேண்டுமெண்டு
ஆசை பொடியனுக்கு
படிச்சது வரஞ்சது விளையாடினது
எல்லாம் விமானம் பத்தினது
பாரம் தாங்காம கவுந்த கப்பல்தான்
அவனுக்கு வாச்சது கடலாடிட்டான்
வாத்தியச்சி ஆகனும் பொடியளுக்கு
ஏழு நாளாச் செதறிக்கிடந்த
உடம்பக் கூட்டி அள்ளிக்கிட்டு
ஓடிட்டா தூரபாரமா பனிநெலத்துக்க

பாத்திரம் தேக்கிறாளாம் யாருக்குத் தெரியும்
கடிதம் போட்டா அப்பனுக்கெ.
அவளுக்கெ தெரியாது விசரான அப்பன்
தெருவுல திரியுதுன்னு
நான் இங்கதான் கெடெக்கிறேன்
மலசலகூடத்த சுத்தம் பண்ணிக்கொண்டு
என்ன.. தூங்குறப்ப மட்டும் கனவுல
கோவம் வரும் சட்டுன்னு எந்திருச்சு
கொஞ்சம் மண்ண அள்ளி வாயில
போட்டுக்கிட்டு தூங்கிடுவேன் ஐசெ..

03

கலைச்சுடலாம் நரளே
வேண்டாம் நம்ம கதிக்கு
இது தோதில்ல ஏமமில்ல
பால்மா கூட ஏலாது..
இல்ல நரனே பெத்துப்போம்
முடிஞ்ச மட்டும் முட்டட்டும்
கரைய பாக்கனும் நரனே...
எனக்கு வேர் பிடிக்க நெலம் வேணும்
அது ஆயிரம் வருசமானாலும் ஆகட்டும்
எப்பவாச்சும் அவங்களுக்கு கைச்சுழிபடும்
அப்ப ஒரே எடத்துல வளரலாம் நரனே..

04

இது பாவம் திண்ணிகளின் *கதை
பூமி முழுக்க இறந்த நிலங்கள் நோக்கி
அவர்கள் செல்லுகிறார்கள்
அதற்காக அவர்கள் மிக நீண்ட மற்றும்
கட்டுப்படுத்தப்பட்ட பயணங்களை
வெகுநிதானமாய்ச் செய்கிறார்கள்
அந்த பயணங்களுக்காக சொல்லத்
தகுதியற்ற முறைகளில் இறந்துகூட
போகிறார்கள். அவர்களைத் தின்ற
கழுகுகள் நாகரீகமான நகரங்களின் மீது
கழித்துவிடுகின்றன. நரகல் வாசம்
கண்டு மருகும் மக்கள் பாவங்களைப்
போக்க
சில ரொட்டித்துண்டுகளை
இறந்த நிலங்களில் தூவுகின்றனர்
பிழைத்து வந்தோர் அதைத் தின்றால்
பாவம் தொலையும் என நம்பிக்கை
கொள்கின்றனர் அந்த நாகரீக மனிதர்கள்.
பாவம் திண்ணிகள் பாவத்தைத்
தின்கின்றனர்.

05

நினைவில் ஈரஜங்கி காயமாட்டேனென்கிறது
அலாப்பாம விளையாடுங்கோ என்கிறாள்
பிடாரி
அலவாங்கின் இடிச்சத்தம் கேட்டுக்கொண்டே
இருக்கிறது கடலுக்கடியில்.
மண்ணடங்கினால் நலம் அதுவே புழுகம்
மண் வேணும் மண் வேணுமென
முணுக்குகிறாள்
நரள் எந்நேரமும் காதில் பேரோலமாய்.
கசங்கிய காகிதத்தில் எழுதத் தொடங்கினான்:
அரசகருமம் நல்ல தடந்தகை செய்தல்..
நீண்ட கடிதம் அது. இருந்தாலென்னெ
எட்டு லச்சம் கைகள் இருக்கின்றன
அதை எழுதும் பேனாவிற்கு.

• • •

## பொதுவான மனநிலை

மூளை என்பது கணினி போன்றது. அதன் பாகங்கள் செயலிழக்கும்போது அது வேலை செய்வதை நிறுத்திவிடும். செயலிழந்த கணினிக்கு மறுபிறப்போ அல்லது சொர்க்கமோ என்று எதுவும் கிடையாது. மறுபிறப்பு அல்லது சொர்க்கம் என்பது இருட்டைப் பார்த்துப் பயக்கும் மனிதர்களுக்காகச் சொல்லப்பட்ட மாயக் கற்பனைக் கதை என்று மரணத்தைப் பற்றிக் கூறுகிறார் ஸ்டீஃபன் ஹாக்கின்ஸ். மரணம் பற்றிய உளவியல் சிந்தனைகளை மனிதன் ஒரு பாடு செய்து முடித்துவிட்டான். இன்னும் தீர்ந்தபாடில்லை என்பது வேறு விசயம். இங்கு பொதுவாக மரணம் ஏற்பட்ட பின் உயிரினங்களின் உடல்களில் ஏற்படும் ரசாயன மாற்றங்கள் குறித்து அறிவியல் என்ன சொல்கிறது என்பதைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

மூப்பு அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்தால் நுரையீரல், இதயம் மற்றும் மூளை ஆகியவை தனது வேலையைச் சம நேரத்தில் நிறுத்திக்கொண்டால் ஏற்படும் விளைவே மரணம். மரணம் என்பது மருத்துவ (clinical) ரீதியிலானது. உடலில் உயிர் என ஒன்று தனியாக இல்லை. மொத்த உடலின் இயக்கமே உயிர். உயிர் என்பது ஒரு வினைச்சொல். இயக்கம் நின்றுவிட்டால் உயிர் இல்லை என்று அர்த்தம். இயக்கம் அற்றுப் போனவுடன் மரணம் தொடங்குகிறது. மரணம் என்பது விரிவாக நான்கு நிலைகள் கொண்ட ஒரு செயல். எனவே மரணம் என்பதும் ஒரு வினைச் சொல்லே. உடல் ஒரு நிலையிலிருந்து பல்வேறு நிலைகளுக்கு (convert to various forms) மாறுபட்டுத் திரிவதை (distortion) அறிவியல் நமக்கு நிரூபித்திருக்கிறது. எனவே மரணம் என்பது முழுக்க முழுக்க ஒரு வேதியியல் (chemistry) நிகழ்வு. அதைத் தாண்டி அங்கு வேறெதுவும் நிகழ்வதில்லை.

மரணத்திற்குப் பிறகான உடல் சிதைவு (decomposition) என்பது ஒரு இயற்கை நிகழ்வாகும். தட்பவெப்பம், வெப்பநிலை, ஈரப்பதம், அமில மற்றும் ஆக்ஸிஜன் அளவுநிலை, மரணத்தின் காரணி, சில நேரங்களில் உடலின் கிடப்பு நிலை (position of body) ஆகியவற்றைப் பொறுத்து உடலின் சிதைவுத் தன்மை (rate of decomposition) மாறுபடும். ஆனாலும் உடல் சிதைவு என்பது நிச்சயமாக நான்கு நிலைகளைக் கடக்கும். முதல் நிலை திசுக்களின் சுயசிதைவு (autolysis) என்பதாகும். நொதிச்செயலால் திசுக்களிடமிருந்து வெளியேறும் திரவம் திசுக்களையே தின்று செரிக்கும் செயல் நடைபெறுகிறது. அதாவது ரத்தவோட்டமும் ஆக்ஸிஜனின் வரவும் நின்றவுடன் அதிகப்படியான கார்பன் டை ஆக்ஸைட் உருவாகி திசுக்களில் ஒரு அமிலச் சூழலை உருவாக்குகிறது. இது திசுக்களின் தோலைச் சிதைத்து நொதித் திரவம் (enzymes) வெளியேற உதவுகிறது. வெளியேறிய நொதித் திரவம் திசுக்களை முழுவதுமாகத் தின்று செரிக்கிறது. இந்தச் செயல்பாடு இறந்த நான்கு நிமிடங்களில் தொடங்குகிறது. மெதுவாக இந்த நொதித் திரவம் தசைகளில் நிரம்பி சிறிது சிறிதாக உடலை விரைப்படையச் (Rigor mortis) செய்கிறது. இறந்த இரண்டு மணி முதல் பன்னிரெண்டு மணி நேரம் வரை உடலில் இந்த விரைப்புத் தன்மை நீண்டு அடுத்த பன்னிரெண்டு மணி நேரம் வரை மெதுவாக விரைப்புத் தன்மை நீங்குகிறது. இதன் பிறகு இரண்டாவது நிலையான வீங்கு நிலை (bloat) தொடங்கும். இந்த நிலையில், திசுக்களிலிருந்து வெளியேறிய திரவம் தசைகளில் நிரம்பி பலவகையான கந்தகத் தன்மை கொண்ட வாயுக்களை உருவாக்குகிறது. இதனுடன் உடலின் ஒட்டிக்கொண்டிருக்கும் பல்வேறு வகையான நுண்ணுயிரிகளும் சேர்ந்து வினையாற்றுகின்றன. இதனால் உடல் உப்பி – ஏறக்குறைய இரு மடங்காக - பெருக்கி விடுகிறது. மேலும் உடலில் புழுக்கள் (maggots) உருவாகி சகிக்கவியலாத ஒருவகை நாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இதன் பிறகு அதிசிதைவு (active decay) என்கின்ற மூன்றாவது நிலை தொடங்கும். அதிசிதைவு என்பது உடலில் உருவான வாயுக்கள் மற்றும் திரவங்கள் மூக்கு மற்றும் ஆசன துவாரங்கள் மூலம் வெளியேறி, உடல் அழுகத் (putrid) தொடங்கும் நிகழ்வாகும். இறுதியாக எலும்புகூடாதல் (skeletonization) என்னும் நான்காம் நிலை உருவாகிறது. அனைத்து வாயு திரவ நுண்ணுயிர்ச் செயல்பாடுகளும் நின்று உடல் வெறும் எலும்பு நிலையை அடைகிறது. எலும்பு புறச்சூழலுக்கு ஏற்ப மக்குவதற்கு நீண்ட காலம் எடுத்துக்கொள்கிறது. மரணத்தின் அறிவியல் நிலைகள் இவை. மாறாக மனிதர்கள் இறந்தவுடன் எரிக்கவோ புதைக்கவோ செய்து உடலை அழிக்கிறோம். எரிப்பதிலும் புதைப்பதிலும் குறிப்பிட்ட வகை வேதியியல் மற்றும் உயிரியல் நிலைமாற்றங்கள் அடைந்து உடல் அழிகிறது. வேறுவித உருவாக (form) மாறுகிறது. இதையே ஒரு மறுபிறப்பென்று பழைய தமிழ்த் தத்துவம் பேசுவதாகப் படித்திருக்கிறேன்.

இவ்வகையில் அறிவியல் பூர்வமான மறுபிறப்பு சாத்தியமா என்கிற கேள்விக்கு ‘வாய்ப்பு இருக்கிறது’ என்ற சுவாரஸ்யமான பதில் தரலாம்தான். பேசலாம்... ■

# அரசியல் அறிவோம்

● கா. இரெத்தினபிரகா,
மூன்றாம் ஆண்டு உயிரிவேதியியல் துறை,
சாஸ்திரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2016ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தல் நடைபெறும் சமயத்தில் விகடனில் அரசியல் கட்டுரைத் தொடராக வெளிவந்த "பெரியோர்களே தாய்மார்களே" மக்களிடையே மிகுந்த வரவேற்புகளையும் பாராட்டுக்களையும் பெற்றது.

நீதி, நேர்மை, சேவை, அர்ப்பணிப்பு என்ற ஆயுதங்களால் அடித்தளமிட்டு அமைக்கப்பட்டவையே அன்றைய அரசியல் கட்சிகள். கொள்கைகளாலும் கோட்பாடுகளாலும் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் வேறுபட்டிருந்தாலும் அவைகளின் நோக்கம், மக்களின் நல்வாழ்வினைச் சார்ந்தே வலுவாக கட்டமைக்கப்பட்டது.


ஒரு ஜனநாயகத்தில் வாக்காளர்களின் கடமைகள் உரிமைகள் என்னவென்று எடுத்துரைப்பதோடு எப்படி ஒரு அரசியல் சாசனம் அமைக்கப்பட்டு ஆட்சியும் ஆட்சியாளர்களும் உருவாக்கப்பட்டு அரசியல் செய்தனர், இப்போது செய்கின்றனர் என்பனவற்றை அலசி இருக்கிறார் ப. திருமாவேலன்.

புரட்சி, போராட்டம் என்ற சொற்கள் இன்று எல்லோராலும் எளிதாகப் பேசக்கூடிய கையாளப்படுகின்ற பேசுபொருளாக உள்ளன. ஆனால் அவற்றிற்கு அன்று முழுமனதாய் வித்திட்டவர்கள் டி.எம் நாயர், தியாகராயர், டாக்டர் சி. நடராசன் என்ற அரும்பெரும் தலைவர்கள்.

இந்தியா, ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் மாகாணங்கள், அரசியல் கட்டமைப்புகள், சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள், இந்திய தேசிய காங்கிரஸ், கல்வி, தொழில், வணிக முறைகள் எனப் பல துறைகள் முன்னேற்றம் அடைந்தன.

ஆங்கிலேயர்களின் அங்கீகாரம் கொண்டு இந்தியர்களில் சிலரை உறுப்பினராகவும் செயல்பாட்டாளர்களாகவும் கொண்டு நல்லாட்சி நல்குவதற்காக எழுப்பப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ், தங்களைப் பலப்படுத்திக்கொண்டு, சிறப்பாக செயல்பட்டு நாட்டின் விடுதலைக்காகக் குரல் கொடுத்து சுதந்திர வாசத்தை மக்கள் அனுபவிக்கச் செய்தது.

நாட்டின் விடுதலைக்கு ஆதரவாக பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் வெகுண்டெழுந்திருக்கும் வேளையில் இலக்கியத்தின் துணைகொண்டு எழுத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி தி இந்து, சுதேசமித்திரன், தி மெட்ராஸ் மெயில், நவசக்தி, தேசபக்தன், ஒரு பைசா தமிழன், உதயசூரியன் போன்ற நாளிதழ்களும் பத்திரிக்கைகளும் பரங்கியர்களைப் பதற்றமடைய செய்தன. எழுத்தை வைத்து எதிர்க்கும் தைரியம் நம் இலக்கியவாதிகளின் இரத்தத்தில் என்றும் ஊறியதுதானே!



எழுத்தாளர். ப.திருமாவேலன்

“மனிதர்களுக்கு ஒரு அமைப்பு கிடைக்கவில்லை என்றால் அந்த மனிதனே அமைப்பாகிவிடுகிறார்” என்றார் காந்தி. சுதந்திரத்திற்கான காந்திஜியின் கால்நடை சுற்றுப்பயணமும் அகிம்சை போராட்டங்களும் இந்தியா முழுவதும் ஒரு நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் ஊட்டியது. காந்தியின் தமிழ்நாட்டுப் பயணம் மிகப் பெரிய சுதந்திரப் போராட்ட வேட்கையை மக்களிடையே ஏற்படுத்தியது. தீவிர காந்தி ஆதரவாளரான ராஜாஜியும் தன்னுடைய விடுதலை முன்னெடுப்பு போராட்டங்களை நிகழ்த்திக்கொண்டுதான் இருந்தார்.

நல்லதொரு அறிவுசார்ந்த சமூகமாகவும் அறிவியலில் தேர்ந்த சமூகமாகவும் இன்றைய தலைமுறை பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. அதே சமயத்தில், இன்று கூட நாம் பெண்களின் பாதுகாப்புக்காகவும் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் 18, 19ஆம் நூற்றாண்டுகளிலேயே இந்தியப் பெண்களின் வாழ்வுரிமைக்காகவும் ஓட்டு உரிமைக்காகவும் இந்தியாவின் விடுதலைக்காகவும் உணர்வுபூர்வமாக உழைத்து சமுதாயத்திற்குப் பணியாற்றியவர்கள் அன்னிபெசன்ட், தில்லையாடி வள்ளியம்மை, சரோஜினி நாயுடு மற்றும் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள்.

விடுதலைக்காக நடத்தப்பட்ட போராட்டங்களில் மறக்கமுடியாதது, அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது ஆஷ் படுகொலை. அபிநவ பாரத சமாஜ் என்ற இயக்கத்தினால் அனுப்பப்பட்ட வாஞ்சிகுரு நடத்திய படுகொலை ஆங்கிலேயர்கள் இடையே நெருப்பாய்ப் பரவியது.

1947ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்பு அரசியல் ரீதியாகவும் அதிகாரத்திற்கு உட்பட்டும் இந்தியாவில் ஆட்சியில் இருந்த அதிகார வர்க்கத்தினால் இந்திய மக்கள் பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. அந்நியர்களால் விடுவிக்கப்பட்ட ஆட்சியானது இங்குள்ள அதிகார வர்க்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அதற்கு இசைந்து போகவேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டது. அவற்றினுள் தமிழ்நாட்டில் நிகழ்ந்த அபரிமிதமான அரசியல் மாற்றங்கள் ஆச்சரியத்திற்குரியது. 27 நாட்களில் இரண்டு தேசத்தைப் பிரித்துவைத்துச் சென்றார் ராட்கிளிஃப். அந்தப் பிரிவினையின் தாக்கம் இன்றளவும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. விடுதலைக்குப் பிறகு ஹைதராபாத் மாகாணம் இந்தியாவுடன் இணைய மறுத்தது, பின்னர் மிகப் பெரிய போராட்டத்தின் விளைவாக இந்தியாவுடன் இணைந்து, மலர்ந்தது.

“திராவிடம்”, “தமிழ்” என்ற சொற்களைப் பயன்படுத்தியவர் அயோத்திதாச பண்டிதர் ஆவார். இன்றைய திராவிட கட்சிகளின் தாயான நீதிக்கட்சியானது எப்படி தொடங்கப்பட்டது, எவ்வித நோக்கங்களுடன் செயல்பட்டுச் சமுதாய சீர்த்திருத்தத்தைச் செயல்படுத்தி மக்களிடையே பல்வேறு வரவேற்பினைப் பெற்று, சாதனை படைத்தது என்று பல்வேறு கோணங்களில் அவர்களின் அரசியல் செயல்பாடுகளை விவரித்துள்ளார் ப.திருமாவேலன். சாதிய கட்டமைப்புகளாலும் மத சமய வேறுபாட்டினாலும் ஒடுங்கிப்போன ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையினை ஓரளவிற்கு மேம்படுத்திக் கொண்டுவந்து, அவர்களின் வாழ்வாதார அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்த்துவைத்த பங்கு நீதிக்கட்சிக்கு உண்டு.

விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவு நாடு முழுவதும் அதிகரித்துக்கொண்டே இருக்க, தன்னை முழுவதுமாகப் பொதுவாழ்க்கையில் ஈடுபடுத்திக்கொண்டு, சீர்த்திருத்தமே மக்களின் முழுமையான விடுதலைக்கு வழிவகுக்கும் எனக் கூறி கடந்து வரும் பாதை எங்கும் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான வாதங்களை முன்வைத்தவர் ஈ.வெ. ராமசாமி. எழுச்சிமிக்க உரைகளை நிகழ்த்தி இளைஞர்களைத் தன் வசம் ஈர்த்து, இன்று திராவிட கட்சிகள் பல உருவாகக் காரணமாக இருந்தவர் ஈ.வெ.ரா. பெரியாரின் உரையினால் பெரிதும் ஈர்க்கப்பட்ட அண்ணா, பெரியாரின் திராவிடர் கழகத்தில் தன்னைச் சேர்த்துக்கொண்டார்.

விடுதலைக்குப் பிறகு தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியானது ஓமந்தூர் ராமசாமி, பி.எஸ்.குமாரசாமி ராஜா, பக்தவச்சலம் இவர்களினால் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. இவர்களின் காலகட்டத்தில்தான் ஜமீன்தார் ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் எனப் பல்வேறு நலத்திட்டங்களை மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்னெடுத்தனர். அதிலும் பத்திரிக்கையாளர்களின் நேர்காணலைத் தெளிவுடன் நேர்க்கொண்டு

தொழிற்பேட்டைகள், நூற்பாலைகள், தொழிற் சாலைகள், அணைகள் எனப் பல்வேறு வளர்ச்சிப் பாதைக்கு வழிவகுத்தவர் காமராஜர். காமராஜர் ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்து செயல்படுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களுமே காலம் உள்ளவரை அவரது பொது வாழ்க்கையின் சிறப்பைப் போற்றிக்கொண்டு இருக்கும்.

ஈ.வே.ரா உடன் நெருங்கிய தொடர்பில் இருந்த அண்ணா சில காரணங்களினால் அவரை விட்டுப் பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கி அகில இந்தியக் காங்கிரஸைத் தோற்கடிக்க, தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த பல்வேறு அரசியல் கட்சிகளுடன் கூட்டணி வைத்து தேர்தல் களம் கண்டு, வலிமைமிக்க எதிர்க் கட்சியாக உருவெடுத்து பின்னர் ஆளுங்கட்சியாக மாறி அரியணையில் அமர்ந்தார். அங்கிருந்து தொடங்கியதே திராவிடர் கழகத்தின் வரலாறு.

மாகாணங்களின் பிரிவினைக்கு முன்பு கன்னியாகுமரி, திருவிதாங்கூர், சென்னைப்பட்டினம் எனச் சில பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கு அரும்பாடுபட்டவர் தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த ம.பொ.சிதம்பரம். "வருங்கால சுதந்திர இந்தியாவில் சுதந்திர தமிழரசு அமைத்தே தீரவேண்டும்" என்ற தீர்மானத்துடன் செயல்பட்டு காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்க திராவிடக் கழகத்துடன் கூட்டணி வைத்துத் தேர்தல் களம் கண்டு வெற்றி பெற்றவர்.

தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டது. தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்டான வழக்கறிஞர் ம.வெ. சிங்காரவேலர் மே தினத்தைத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடி, 1918ஆம் ஆண்டு தொழிற்சங்கம் தொடங்க காரணமாக அமைந்தவர். "இந்தியாவின் சொத்து" என்று காந்தியடிகளால் புகழப்பட்ட உயிர் இன்பன் என்று அழைக்கப்பட்ட ஜீவா, நிறைய கட்சிகள் மாறினாலும் கடைசியில் ஒரு கம்யூனிசவாதியாக உருவெடுத்து பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றியவர். ஜீவா போன்ற பல கம்யூனிச தலைவர்களால்தான் இன்று தமிழ்நாட்டில் கம்யூனிசம் பரவி இருக்கிறது.

"தமிழ்நாடு" என்ற அரும்பெயருக்காக, 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தவர், தியாகச் செம்மல் மு. சங்கரலிங்கனார். உண்ணாவிரதம் இருந்த காலத்தில் அவரைச் சந்தித்து அவருடைய கொள்கையில் தன்னையும் இணைத்துக்கொண்ட அண்ணா, சங்கரலிங்கனாருக்கு ஒரு சத்தியம் செய்து கொடுத்தார். அந்தச் சத்தியத்தை ஆட்சிக்கு வந்த உடனே நிறைவேற்றினார் அண்ணா. அந்தச் சத்தியத்தினால்தான் தமிழ்நாடு இன்று "தமிழ்நாடு" என்ற பெயருடனும் தன்னம்பிக்கையுடனும் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

திருக்குவளையில் பிறந்து தமிழ்சினிமா உலகில் தனது வசனங்களாலும் கதைகளாலும் தமிழக மக்களைத் திரும்பிப் பார்க்க வைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தீவிர திராவிடத் தொண்டனாகச் செயலாற்றி பல்வேறு போராட்டங்களில் கொடி தூக்கி போராட்டங்களை வழிநடத்தி முன்னெடுத்துச்சென்று, கழகத்தை வளர்த்தவர் கலைஞர் கருணாநிதி.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு போன்ற பலவகை போராட்டங்களாலும் ரயில் மறியல்களாலும் எழுச்சிமிக்க உரைகளாலும் மக்களிடையே பல களப்பணிகளை மேற்கொண்டதன் பயனாக தேர்தலில் நின்று, வென்று 1957ஆம் ஆண்டு நல்லதொரு பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாகச் சட்டமன்றத்துக்குள் நுழைந்தது திமுக.

அதன் தொடர்ச்சியாக 1967ஆம் ஆண்டு காங்கிரஸ் விழுந்த ஆண்டாகவும் திமுக எழுந்த ஆண்டாகவும் மாறிப்போனது.

"எம்.ஜி.ஆர் என்ற மூன்றெழுத்து முகம் காட்டியதும் திமுக என்ற மூன்றெழுத்து எழுந்து நின்றது. எம்.ஜி.ஆர் சூரியனை மலர வைத்த சந்திரன்" என்ற சொலவடைக்கேற்ப அண்ணாவின் "இதயக்கனி" என்று அழைக்கப்பட்ட எம்.ஜி.ஆர், தனது அரசியல் வாழ்க்கையை அண்ணாவுடன் சேர்ந்து தொடங்கி, சினிமாத்துறையில் அரசியல் பிரச்சாரத்தைப் புகுத்தித் தன்னையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் மக்கள் மனதில் நன்றே பதியவைத்தார். அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர் இவர்களின் உழைப்பால் தமிழகத்தின் பட்டிதொட்டிகளெல்லாம் நன்றாகப் பரவியது திராவிடத் தீ. திமுக தன் தீவிர அறம் சார்ந்த செயல்பாடுகளாலும், மக்கள் நல்வாழ்வு நோக்கங்களாலும்

போராட்டங்களாலும் புரட்சிகளாலும் தமிழகத்தில் வெற்றி கண்டது.

அண்ணாவின் மறைவிற்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் எம்ஜிஆர், கலைஞர், கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் வழிநடத்திச் செல்ல நேர்ந்தது.

ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு சில மனப்பூசல்களாலும் கருத்து வேறுபாடுகளாலும் எம்.ஜி.ஆர் திராவிடக் கழகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு வெளியேற்றப்பட்ட எம்.ஜி.ஆர், "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற கட்சியைத் தனித்துவத்துடன் தொடங்கி மீண்டும் அரசியலில் புகுந்தார். சினிமாத்துறை நடிகையான ஜெ.ஜெயலலிதாவும் தன்னை அதிமுகவில் இணைத்துக்கொண்டு மக்கள் பணியாற்றி மகத்தான செல்வாக்கினை அதிமுகவிற்கு சம்பாதித்துக் கொடுத்தார். கட்சியிலும் தேர்தலிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பணியாற்றினார்.

அண்ணாவின் மறைவிற்குப் பிறகான தமிழக அரசியல் களமானது மிகவும் பரபரப்பானதாகவும் பதற்றமுடையதாகவுமே இருந்து வந்தது.

காங்கிரஸ், திமுக, அதிமுக, கம்யூனிஸ்ட் எனப் பல கட்சிகள் மக்களை வெகுவாக ஈர்த்துக்கொண்டிருந்தன. எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் மாறி மாறி ஆட்சி அமைத்த காலம் அது. எம்.ஜி.ஆரின் மறைவிற்குப் பிறகு சிறிது ஆட்டம் கண்ட அஇஅதிமுக சில நாட்களுக்குப் பிறகு ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில் மிகவும் பலம் வாய்ந்த கட்சியாக உருவெடுத்து தனது அரசியல் பிரவேசத்தைத் தொடங்கியது.

மிகப் பெரிய ஆளுமைகளால் வழிநடத்தப்பட்டு வளர்ச்சி அடைந்த இரு திராவிட கட்சிகளும் தனக்கென ஒரு தடத்தைப் பதித்து தமிழக அரசியலில் வலம் வந்தன. பல்வேறு நலத்திட்டங்கள், முன்னேற்றச் செயல்பாடுகள், தொழில்துறை வளர்ச்சிகள், கல்வி, வேளாண்மை, தொழில்நுட்பம் எனப் பல்வேறு துறைகளில் வளர்ச்சி மாற்றங்களைத் தமிழகம் கண்டபோதும்கூட ஊழல் குற்றச்சாட்டுகளும் குளறுபடிகளும் பல்வேறு வளர்ச்சியை அடைந்துகொண்டுதான் இருந்தன.

ஊழல் என்ற நோய் இந்த இருபெரும் திராவிட கட்சிகளைச் சிறிது சிறிதாக அரித்துக்கொண்டு வளர ஆரம்பித்தது. தேர்தல் சமயங்களில் ஒரு கட்சியின் ஊழலை மற்றொரு கட்சி சுட்டிக்காட்டி வாக்கு சேகரித்து வெற்றி பெற்றாலும் அடுத்த தேர்தலில் அதே ஊழல் குற்றச்சாட்டுகளை ஆளுங்கட்சி மீது எதிர்க்கட்சியினர் சுமத்தி வாக்கு பெற்று வெற்றி அடைவதாகவே இருந்து வந்தது, வருகின்றது.

அந்தக் குற்றச்சாட்டுகளையும் தகர்த்து தங்களது அரசியல் பயணத்தைத் தொடர்ந்து சிறப்புடன் செயலாற்றி வருகின்றன திராவிடக் கட்சிகள்.

இன்றளவும் திராவிடக் கட்சிகள், பல குற்றங்களைத் தங்களுள் சுமந்துகொண்டு இருந்தாலும் திராவிடக் கட்சிகள் கடந்து வந்த பாதை மிகவும் நுட்பமானது, தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடைய வழிவகை செய்தது மிகவும் ஆக்கப்பூர்வமானது.

சமூக சீர்திருத்தங்கள், சாதி, சமய, இனப்பாகுபாடு ஒழித்தல், இட ஒதுக்கீடு வழங்குதல், மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி அமைத்தல், பெண்விடுதலை, தேசிய இனக் கோட்பாடு, சுயநிர்ணயக் கோட்பாடு, தட்சிணப்பிரதேச முடக்கம் முதலியவற்றை முன்னெடுத்து முன்னேற்றமடைந்தவை திராவிடக் கட்சிகள்.

விடுதலைக்கு முன்பும் விடுதலைக்கு பின்பும் இந்தியாவில் நடந்த நடக்கின்ற அரசியல் நிலைபாடுகளை அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து விரிவாக எடுத்துரைத்துள்ளார் ப.திருமாவேலன். இன்றைய திராவிடக் கட்சிகள் தோன்றுவதற்கு காரணமான நீதிக்கட்சியின் தோற்றமும் அதன் வலிமையையும், அந்தக் கட்சியில் தங்களை இணைத்துக்கொண்டு நாட்டின் சுதந்திரத்திற்காகவும் சமூக மாற்றங்களுக்காகவும் வித்திட்ட தலைவர்களையும் எடுத்துச்சொல்லி வாசகர்களை எழுச்சி அடையச் செய்துள்ளார்.

அரசியலில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள், அன்றாடம் நடைபெறும் சமூக நிகழ்வுகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்ற விரும்பும் சமூக ஆர்வலர்கள், இந்திய அரசியல் வரலாற்றினைத் தெரிந்துகொள்வதற்கும் தலைவர்களின் தன்னலமில்லாச் சமுதாயத் தொண்டை அறிந்துகொள்வதற்கும் இந்நூல் ஒரு சிறப்புமிக்க ஆயுதமாக உள்ளது. ■

கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

அரண்மனை மண்டபம்
களைகட்டியது
அறுபத்தாறு தேசங்களின்
அரசர்களும்
வந்தமர
வந்தமர..
எழுந்த வாழ்த்தொலிகள்
விண்ணை –
முட்டியது....

அகப்படாமல்
போக்கு காட்டி
அங்கும் இங்கும்
திரிந்துகொண்டிருந்த
யானைகளுக்கு
முகபடாம்
அணிவித்தனர் – பாகன்கள்...

முன்னங்கால்களை
உயர்த்தி
பின்னங்கால்களை
ஊன்றி
பிடரிகள் குலுங்கிட
முகமன் கூறின –
குதிரைகள்....

இலங்கையைத் தவிர்த்து
எல்லாத் தேசங்களிலும்
இருந்தும்
வந்தவர்கள்
இரைப்பை நிறைய
நிறைய
விருந்து –
உண்டார்கள்
அளவுக்கு மீறி
உண்டவர்களில் சிலர்
அறைக்கு வெளியே
நின்று
அஜீரணத்தை போக்க –
மருந்து உண்டார்கள்...

மஞ்சளும் சந்தனமும்
பூசிய
மங்கையர் கூட்டமொன்று
இலைகள்தோறும்
வெஞ்சனம்
வைத்துவிட்டு வெட்கத்துடன் –
சென்றது
கன்னம் சிவக்க வந்த
கன்னியர் கூட்டமொன்று
இலைகள்தோறும்
அன்னம் வைத்துவிட்டு –
அழகாகச் சிரித்தது

இலையில் வைத்த
பண்டங்களில்
எதையுமே
மிச்சம் வைக்காமல்
இளந்தாரிக் கூட்டமெல்லாம்
அசடு வழிய
அள்ளி அள்ளி –
தின்றது....

பாடல்கள் ஒலிக்க ஒலிக்க
பாவையர் கூட்டமொன்று
ஆடத்தொடங்கியதும்
ஆர்ப்பரித்தது –
சபை
தாளலயத்துக்கு
தகுந்தபடி ஆடியது
தணிகையர் –
கூட்டமொன்று
இப்படித்தான்
தசரதன் அரண்மனையில்
தர்பார் கூடியது –
அன்று...

தம்பிகள் சகிதம்
தர்பாருக்கு வந்தான்
தசரத –
மைந்தன்
தத்தமது மனைவிகளோடு
சேர்ந்தே அமர்ந்தனர் –
தம்பிகள்..

இணையற்ற தம்பி
இலக்குவன் மட்டும்
தனது
இணை அற்று வந்து
இருக்கையில்
அமர்ந்தான்



சபை மொத்தமும்
ஒருதடவை
சலசலத்து -
அடங்கியது
முடிசூடுவதற்கு
அமர்ந்திருந்த
இராமனின் முகத்தில்
முத்து முத்தாக
வியர்வை -
அரும்பியது

ஊர்மிளை இல்லாத
இலக்குவனைக்
கண்டதும்
அவனுக்குள்
உற்சாகம் -
ஒடுங்கியது
எங்கிருக்கிறாள்
அவளென
அங்கிருந்தபடியே
தேடிய இராமனுக்கு
இருவிழிகளும் -
இடுங்கியது...
முறுவல் தொலைத்த
அவனது
முகங்கண்டு
அவை நடவடிக்கைகள்
அடியோடு -
முடங்கியது...

மாறி மாறி
பிரதிபலிக்கும்
அண்ணனின்
முகங்கண்டு
ஓடிவந்தான் -
தம்பி
ஒரு புருவநெறிப்பிலேயே
புரியவைத்தான்
தம்பிக்கு தன்
உள்ளக்கிடக்கையை அந்த -
நம்பி....!
அழைத்துவா ஊர்மிளையை
என்று

சன்னக்குரலில் -
கட்டளையிட்டான்..
தனது
சகதர்மிணிக்கும்
கேட்காதபடிக்கு
தம்பிக்கு -
ஆணையிட்டான்...!

சீற்றத்தோடு
இலக்குவனிடம்
இராமன் கூறிய
வாக்கியம்
சீதைக்கும் -
கேட்டது
சூடிக்கொடுத்த
சுடர்க்கொடிக்கும்
அவன் கூறிய
வாக்கியம்
சுள்ளென்று -
சுட்டது...

பிணக்குடன் திரியும்
பின்னவளின் மீது
இருக்கத்தான் செய்தது
சீதைக்கும் ஒரு -
பெருங்கோபம்
விழா முடியட்டும்
என்று
காத்திருந்த அவளுக்குள்
கனன்றுகொண்டே
இருந்தது
தங்கையின்பால் ஒரு -
கடுங்கோபம்..

உடன்பிறந்து
தொலைத்துவிட்டாளே
என்று
வந்த கோபமும்
வடிந்து -
தொலைந்தது
அவளிருக்கும்
இடந்தேடி
ஒரு ஆதங்கத்தோடு

கண்கள் -
அலைந்தது....

உற்சவர்
வரும்வழியில்
ஒதுங்கி நிற்கும்
பக்தரைப்போல்
தமக்கையின்
பார்வைக்கு
எட்டாத தொலைவில்
ஊர்மிளை -
ஒதுங்கி நின்றாள்
தன்னால் இந்த
விழாவுக்கு
தடங்கல் வரக்
கூடாதென்று -
பதுங்கி நின்றாள்...

இலக்குவன்
தேடி வருவதை அறிந்ததும்
தானிருந்த இடத்திலிருந்து நழுவி -
தடம் மாறினாள்
இன்னும் கொஞ்சம்
தூரத்துக்கு -
இடம் மாறினாள்
ஆனாலும்
எதிரே நிற்கும்
சீதையைக் கண்டதும்
ஒருகணம் -
தடுமாறினாள்...
ஆதங்கத்தோடும்
ஆத்திரத்தோடும்தான்
சீதையும் தனது
சின்னவளைத் -
தேடினாள்
அவளிருக்கும்
இடம் தெரிந்ததும்
இழுத்து வந்து
அறையில் தள்ளி
கதவை -
மூடினாள்....!

- ஊர்மிளை வருவாள் ■

சிறுகதை

● உமா மோகன்
● ஓவியம் - அழ.ரஜினிகாந்தன்

# தடை

'ஒரு நட போயி பாத்துட்டு வந்துர்ரனே'

செல்வியின் கம்மிய குரல் காதிலேயே விழாதவன் போல வெங்கிட்டு பனியனைக் கழற்றி வாளிக்குள் வீசினான். தண்ணீரைக் கைகளால் வாரியிறைத்து முகத்தைக் கழுவிக்கொண்டு கொடியிலிருந்த துண்டை உருவி இழுத்தான். ஏதோ சிக்கி அத்தனையையும் சேர்த்து இழுத்துக்கொண்டு கொடியோடு அறுந்து விழுந்தது.

அவளும் அதைக் கண்டு எரிச்சலடைகிற மனநிலையில் இல்லை.

அவன் பின்னாலேயே குழைக்குத் தொங்கும் ஆடு போல நடந்துகொண்டிருந்தாள்.

"இஞ்சேரு.. ஊரு எல்லையத் தாண்ட முடியாது... வேல வெட்டிக்கே போவ முடியல... நீ வேற மனுசன் உசுர வாங்காத..."

செல்விக்கும் இதெல்லாம் தெரியும்தான். ஆனால் எமனுக்குத் தெரியுமா என்னவென்று தெரியவில்லையே.

செல்வியின் பெரியம்மா சாகப்பிழைக்கக் கிடப்பதாக வந்த தகவலில் அவள் தவிப்பு தொடங்கியது.

பெற்றவர்கள் இருவரும் முகமறியாக் காலத்திலேயே தவறிவிட அவள் அம்மாவின் சகோதரியான தனம் தங்கையின் இரண்டு பிள்ளைகளையும் தன்னோடு வைத்துக்கொண்டாள். பெரிய வருமானமில்லாத, தலைவன் சரியில்லாத, ஏற்கனவே இரண்டு பிள்ளைகள் உள்ள வீட்டில் இன்னும் இரண்டு குழந்தைகளைப் பாரமென்று கருதாமல் ஏற்பதற்கு இரக்கமோ கருணையோ தேவையில்லை. நெஞ்சுரம் வேண்டும்.. பாத்துக்கலாம் என்ற தைரியம்தான் தனத்தின் சொத்து

தெருவில் யார் என்ன வேலை இட்டாலும் எந்த நேரமானாலும் முகம் சுளிக்காமல் செய்வாள்.

"தம்புள்ள தங்கச்சி புள்ளன்னு பிரிச்சிப்பாக்காம வளத்துச்சி எங்க பெரியம்மா... அது சரின்னா நா கட்டிக்கிறேன்"

தட்டச்சு பயிலப்போனவளிடம் இந்த வெங்கிட்டு காதலைச் சொன்ன நிமிஷம் செல்வியின் மறுமொழி அதுதான்.

திருப்பூரில் வேலை தேடிக்கொண்ட தைரியத்தோடு அவன் பெண் கேட்டு வந்தபோது தனம் இரண்டு வருட அவகாசம் கேட்டாள்.

'ரெண்டு வருசம்னு சொன்னா மறந்துட்டு ஓடிருவான் இந்தப்பயன்னு ஒங்க பெரியம்மா திட்டம் போடுது... அதான் நடக்காது. நீ தைரியமா இரு. நாந்தான் ஒங் களுத்துல தாலி கட்டுவேன்... இந்தாங்குறதுக்குள்ள ஓடிப்போயிரும் ரெண்டு வருசம்...'



சினிமா கதாநாயகன் போல வெங்கிட்டு பேசியபோது தனம் சிரிக்கவுமில்லை. வையவுமில்லை.

தீபாவளிக்கு ஊருக்கு வந்தவன் எதிர்வீட்டு கோபியிடம் செல்வியைப் பார்க்க வேண்டும் எனச் சொல்லி அனுப்பினான். செல்விக்கும் அப்போது நம்பிக்கை துளிர்த்திருந்தது. அது காதலா இல்லையா என்றும் தெரியவில்லை. நம்பலாம் என ஒரு நினைப்பு.

மாரியம்மன் கோயில் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது அந்தப்பக்கம் தனம் வந்தாள். திடுக்கிட்டு விழித்த செல்வியிடம் "வா...வூட்டுக்குப் போவலாம்" என்றாள். கோபித்துக்கொள்வதா ஒதுங்கிப்போவதா என விழித்துக்கொண்டு நின்ற வெங்கிட்டிடம் 'ஆத்துத்தண்ணிய வெள்ளங் கொண்டு போயிராது தம்பி...' என்று பொத்தாம் பொதுவாக சொல்லிவிட்டுப் போனாள்.

இன்றைக்கும் வெங்கிட்டு வேண்டுமென்றே அவள் கிணற்றைச் சொல்லாமல் ஆறு என்று சொன்னதாக வாதிடுவான். 'அச்சோ இதிலென்ன இருக்கு. வாய் தவறிப்போய் சொல்லியிருந்தாக்கூட குற்றமா..'

'ஆமா.. குத்தந்தான்... ஆத்துல வெள்ளம் போனாலும் நாய் நக்கிதான் குடிக்கணும்னு பழமொழி சொல்லும் எங்கம்மா.

அதத்தான் ஒங்க பெரியம்மா நைசா மாத்தி சொல்லுச்சி.. என்ன மடப்பயன்னு நெனச்சிகிட்டியா...' சீறுவான்.

இரண்டுவருடம் தவணை கேட்டது பெரிய திட்டமிடல் இல்லை. தனத்தின் பெரிய மகள் இவளைவிட மூத்தவள். அவளுக்கு ஒரு வழி செய்துவிட்டு இவள் கதையைப் பார்க்கலாம் என்றுதான் தனத்தின் கணக்கு இருந்தது. நினைத்தால் போதுமா.. வசதி வாய்ப்பு, ஆள் அம்பு அத்தனையும் உள்ளவர்களெல்லாமே நேரங்காலத்தில் செய்ய திண்டாடித் தெருவில் நிற்கும்போது இந்த உதிரி எம்மாத்திரம்...

அதிலும் பெற்றவனே பெண்ணுக்கு எமனாக வந்து சேருவானென்று யார்தான் நினைப்பார்கள்.

குருவி மூக்கால் சேர்த்தது மாதிரி தனம் சீட்டு கட்டி வைத்திருந்த பணத்தை அப்படியே தூக்கிக்கொண்டு எங்கோ ஓடிவிட்டான் அந்தப் படுபாவி. திரும்பவும் சுழியிலிருந்து தொடங்க வேண்டும்.... செய்தியை அறிந்து வெங்கிட்டு ஊருக்கு வந்தான். இப்ப என்ன சொல்லப்போறே என்று கேட்பதாக தனத்துக்குத் தோன்றியது. என்ன சொல்வதென்றும் அவளுக்குத் தெரியவில்லைதான். யார் அவளுக்கு அந்த யோசனையை சொன்னார்களோ அல்லது அவளுக்கே தெரிந்து கேட்டாளோ... கேட்டுவிட்டாள்.

"அங்ஙன உள்ள கம்பேனியில கல்யாணத்துக்குப் பணம் சேக்கறதுக்கே வேல குடுப்பானாமுல்ல... ஒனக்கு அப்பிடி யாரையுந் தெரிஞ்சா இவளுவ ரண்டுபேரையும் சேத்து வுடுறியா..."

அவனுக்கோ கோபம் தலைக்கேறிக் கிடந்தது.

"எங்கிட்ட என்ன சொன்னீங்க... ரெண்டு வருசம் டைம் கேட்டுட்டு இப்ப புதுசு புதுசா எதாச்சும் சொல்லியிட்டிருக்கீங்க..."

தன் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளாமல் கொக்குக்கு ஒன்றே மதி என்று நிற்பவனைப் பார்த்து எரிச்சலும் ஆயாசமுமாக வந்தது.

"எப்பா.. இஞ்ச என்னா பெரச்சனன்னு நெனச்சிப்பாக்காம பேசுறிய.. ஒத்த ஒத்த காசா ஒழப்பெடுத்து வெச்சது எல்லாம் வழிச்சி வாரியிட்டுப் போயிட்டான் அந்த ஆளு.... ஒடக்கூட தெம்பில்லாம இத்து எளச்சி நிக்கிறன்..."

"இஞ்சேருங்க... ஒவ்வொருத்தருக்கும் அவுங்கவங்க கத.. எங்கம்மா எங் கலியாணத்த இப்ப முடிச்சாலே ஆச்சின்னு நிக்கிது... அதுக்கு வாவு வழி பண்ணப்போறீங்களா இல்லியா அதான் எனக்குத் தெரியணும்..."

"எப்பா.. என்ன பேச்சு பேசுற நீ... செல்விக்கு ரெண்டு வயசு மூத்தவ எம்மவ... நாம் பெத்த புள்ளனு சொல்லல... யாராருந்தாலும் நாயமா யோசிக்கணும்... காசு பணத்த வுடு... மூத்தவ இருக்கயில சின்னவளுக்கு முடிக்க முடியுமா... அதுவும் சாதிவுட்டு சாதி செஞ்சா இவளுக்கு எங்கேருந்து மாப்பிள பாக்குறது.."

"ஆங்... அப்புடி வாங்க வழிக்கு... சாதிதான் ஒங்க பெரச்சின... அதான பாத்தன்..."

அயர்ச்சியாகிவிட்டது தனத்துக்கு. நாலாபக்கமும் விதி தனக்கு எதிராகவே கட்சி கட்டிக்கொண்டு நின்றால் என்னதான் செய்ய... தலையில் கைவைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் தனம்தான் தன் வாழ்வின் எதிரி என்ற ஆங்காரம் பெருக்கெடுத்தது வெங்கிட்டுவுக்கு. பக்கத்தில் கிடந்த ஒரு ஒயர்கூடையை எத்திவிட்டு எழுந்து போனான்.

வெங்கிட்டுவின் அம்மா ஒருநாள் வாசலில் வந்து நின்று ஒற்றைப் பிள்ளைக்கு ஏதோ மை வைத்து தன் குடும்பத்தைக் குலைப்பதாகக் கத்தி மண்ணை வாரித் தூற்றிவிட்டுப் போனாள்.

“படுபாடுபட்டு கரையேத்துனனே... எல்லாம் வீணாப்போச்சே... என்னடி சிங்கிநாதம் பண்ணுனீங்க... வேற பொண்ணே வேணாம்னு ஒரேடியா சொல்றானே..”

“இதையெல்லாம் யோசிக்கும் நிலையில் நாம் இல்லை... கையில் இருப்பு இருந்தால் கழுதைகூட மதிக்கும்” என்று பெண்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தாள் தனம்.

மூலைவீட்டு ரங்குவின் சகாயத்தால் நாம் இனி பிழைத்து விடுவோம் என்று ஒருநாள் மகிழ்ச்சியோடு வந்து மகள்களை சினிமாவுக்குக் கூட்டிப்போனாள்.

“நமக்கு வேண்டியவங்கன்னா இப்பிடிதான் யோசிப்பாவ... கஸ்டப்படுற குடும்பத்துக்குக் கஞ்சி குடிக்கவாவுது வழி சொல்லுவம்னு நெனக்கிறாம் பாரு அதுதான் மனுசத்தனம்... தான்.. தாங்கவலன்னு இருக்கவனயெல்லாம் நம்பவே கூடாது...”

சாடைப்பேச்சு தனக்குப் புரிவதற்காக என்றெல்லாம் செல்விக்குத் தெரியாது.

மறுநாள் தன் மகளோடு செல்விக்கும் ஒரு பையைக் கட்டி ரங்குவோடு அனுப்பி வைத்தாள். சாப்பாடு தங்குமிடம் எந்தக் கவலையும் இல்லாமல் கல்யாணத்துக்கும் சேமிக்க முடியும் என்று வழிகாட்டினால் அவன் தெய்வமேயன்றி வேறு யார்.

தன்னைப்போல திக்கற்றவர் வீட்டுப் பெண்களைக் காக்கவே ரங்கு இருக்கிறான் என்று வேலைக்குப் போகுமிடத்திலெல்லாம் ஒரு பிரசங்கமே செய்துகொண்டிருந்தாள் தனம்...

முதல்மாதம் ஆயிரம் ரூபாய் அவனே கொண்டுவந்து கொடுத்தான். தனத்துக்கு தன் பிறவிப்பிணியே தீர்ந்த மயக்கம். சிரித்துப் பேச ஆரம்பித்தாள். வீட்டிலிருந்த தன் சின்ன மகளுக்கும் தங்கை மகனுக்குமாக தின்பண்டமெல்லாம் வாங்கிக் கொடுத்தாள். ஒருமுறை திருவிழாவுக்கும் ஒருமுறை சினிமாவுக்கும் கூடப் போனார்கள். வழக்கமாக ஊரே தேரோ தெப்பமோ தீபாவளியோ கொண்டாடிக்கொண்டிருந்தாலும் தனம் எங்காவது அண்டா தாம்பாளம் விளக்கிக்கொண்டோ, மாவு இடித்துக்கொண்டோ இருப்பாள். பிள்ளைகளுக்கு அவள் ராட்சச உழைப்பைப் பார்க்கும்போது அது வேண்டும் இது வேண்டும் என்றே கேட்கத் தோன்றாது. அதுகளுக்கும் அட நம்ம வாழ்க்கையும் சாதாரணமா மாறும் போலிருக்கேன்னு தோன்ற ஆரம்பித்த சமயம் அடுத்த மாதம் வந்துவிட்டது.

ரங்கு வந்து “இனிமேப்பட்டு பணம்லாம் அனுப்ப மாட்டவோ... புள்ளங்க கலியாணத்துக்காவ கம்பேனியே பணத்தப் போட்டு வெச்சிரும்னு” சொன்னபோதும் தனத்துக்கு வருத்தமெல்லாம் ஒன்றுமில்லை.

“அதுவுஞ்செரிதான்... இஞ்சதான் வந்ததுல்லாம் கொள்ளும் மவராசன் கப்பல்... நல்ல சனமாதான் இருக்குவோ... பெத்தவொ பொறந்தவொ மாரி யோசிக்குதுவோளே... நல்லாருக்கட்டும்..” என்றபடி மாவு உலக்கையைத் தூக்கிக்கொண்டாள்.

இரண்டு மூன்று மாதங்கள் போக தீபாவளி வருகிறதே மகள்கள் வருவார்களா என்ற யோசனை வரலாயிற்று...

நடுவில் ஒருமுறை ரங்குவின் ஃபோன் வழியாகப் பேச முடிந்தது.

“யம்மா இவ்ளோ தூரம் பஸ் காசு போட்டு பொயிட்டு வந்தா எப்பிடி காசு சேக்குறதுன்னு சாடயா பேசுறாவொம்மா... மத்த கம்பெனில வுட்டாலும் இஞ்ச வுட மாட்டாவொன்னு கூட இருக்குற பொண்ணெல்லாம் சொல்லுதும்மா...

ஊருக்குப் போனா சாமானியமா வரமாட்டாளுவோன்னு சூப்ரவைசரு பேசியிட்டுருக்காருமா...”

என்னவோ கலக்கமாயிருந்தாலும் வேறென்ன செய்ய முடியும் என்றும் தெரியவில்லை... தீபாவளிக்கு ஊருக்கு வந்த வெங்கிட்டு சூழலை அறிந்து தனத்திடம் வந்து சண்டை போட்டான். யாரைக்கேட்டு அங்கெல்லாம் அனுப்பினாய் என்பது அவன் வாதம்.

“ஒங்கிட்டதான மொதல்ல கேட்டன்... நாங்க பொழச்சி ஆளாவுணும்னு அக்கற உள்ளவனா இருந்தா நீயே ஏற்பாடு செஞ்சிருக்கலாம்ல” என்று ஆரம்பித்து இன்னும் இதையெல்லாம் கேட்கும் உரிமை உனக்கு வரவில்லை என்பதுவரை போக வேண்டியதாயிற்று.

தீபாவளிக்கு வந்த மகன் மறுநாளே பெட்டி தூக்க பின்னணியை விசாரித்த அவன் அம்மா வேறு தன் குடும்பம் முன்னேற விடாமல் செய்கிறார்கள் என்று வீட்டு வாசலில் நின்று கத்தி மீண்டும் மண்ணள்ளி இறைத்துப்போனாள்.

ரங்கு சொல்ல மறுத்தும் எங்கெங்கோ தேடி செல்வி வேலை பார்த்த நிறுவனத்தைக் கண்டுபிடித்துவிட்டான் வெங்கிட்டு. எப்படியாவது அவளைத் தொடர்புகொள்ளும் எண்ணத்தில் அங்கு வேலை பார்க்கும் பியூனை நட்பாக்கிக்கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தான்.

“ணே...நீ விசாரிப்பியே அதுல ஒரு பொண்ணு என்னத்தயோ தின்னு சாகப் பொழக்கக் கெடக்குது”

தற்செயலாக போகிற மாதிரி மருத்துவமனைக்குள் நுழைந்து காத்துக்கொண்டிருந்த பெண்கள் நடுவே செல்வியைப் பார்த்தபிறகுதான் உயிர் வந்தது. தடுப்புகளுக்குள் நின்று நின்று அயர்ந்துபோயிருந்தவள் தன் முகம் ஒன்றைக் கண்டவுடன் ஓடி வந்து கட்டிப்பிடித்து அழத் தொடங்கிவிட்டாள்.

அங்கு வேலை பார்த்த ஒருவன் முறைகேடாக நடந்துகொண்டதால் புகார் செய்ய முயற்சி செய்திருக்கிறார்கள். பலனில்லை.. பழிவாங்கும் உணர்வில் கேவலமாகப் பேச... தற்கொலை முயற்சி.

தனத்துக்குத் தகவல் சொல்லிவிட்டு செல்வியைத் தன்னோடு அழைத்துப் போய்விட்டான் வெங்கிட்டு. அந்தக் களேபரத்தில் இதை யாரும் கவனிக்கவில்லை.

ஆண்களாகத் தங்கியிருக்கும் அறையில் அவளையும் எப்படி இருக்கச் சொல்வது... அதே தெருவில் குடியிருந்த அலுவல் தோழன் வீட்டில் ஊர்க்காரப்பெண் என்று அறிமுகப்படுத்தித் தங்க வைத்தான்.

பொழுது விடியுமுன் தெருவில் ஒரே சத்தம் ரகளை..

ஊரிலிருந்து நள்ளிரவில் வந்து சேர்ந்திருக்கிறாள் தனம். செல்வியைக் காணோமென்று அங்கு சண்டை.... ஒவ்வொருவராக விசாரித்து யாரோ கூட்டிப்போய் விட்டதாக இடம் துப்பறிந்து கத்திக்கொண்டிருந்தவள் உறக்கம் கலையாமல் வந்து எட்டிப் பார்த்த வெங்கிட்டுவைக் கண்டதும் பேயாட்டம் ஆடிவிட்டாள்.

நேர்ந்துவிட்ட எதற்குமே தான் காரணம் இல்லை என்பதால் அவனுக்கு அவமானமும் ஆத்திரமும் சேர்ந்து புரட்ட.. உச்சமாக செல்வி தங்கியிருந்த வீட்டுக்குள் நுழைந்து அவளை இழுத்து வந்தான். தூக்க கலக்கத்தோடு தெரு வேடிக்கை பார்க்க தனம் சரமாரியாக செல்வியை அறைந்தாள்.

“நாயே.. அங்க ஒருத்தி சாவப் பொழக்க கெடக்குறா.. நீ என்னடான்னா இந்தப் பயலொட ஒடியாந்து குடும்பம் பண்றியா....”

குறுக்கே புகுந்து அவளைத் தள்ளிவிட்டுக் கத்தினான் வெங்கிட்டு..

“இன்னமெ அவ மேல கை வெச்செ மரியாத கெட்டுரும்... நீ செஞ்ச உருப்புடாத வேலையினாலதான இவ்வளொ பிரச்சின... கண்டவனயும் நம்பி அனுப்பிவுட்டது யாரு... என்னா யேதுன்னு கேட்டியா மொதல்ல... இவளயும் அங்க வுட்டுட்டு வந்து... எவனாச்சும் இடிக்கிறாம் புடிக்கிறான்னு இவ ஒரு பக்கம் சாவட்டும்னு வுட்டுட்டு வரச் சொல்றியா... மூணு வருசமா ஒன் வீட்டு வாசல்ல வந்து நின்னா அவ்ளொ எளக்காரம்... இப்ப சொல்ரேன் இந்த வார்த்ததான் தாலி... இந்த நிமிசத்துல இருந்து அவ எம் பொண்டாட்டி... இஸ்டம்னா வந்து சாப்பிட்டுட்டுப் போ... இல்லனா இன்னமே ஒட்டுமில்ல ஒறவுமில்ல...”

செல்வி ஏதாவது சொல்வாள் என்று அவள் முகத்தைப் பார்த்தால்... குனிந்த தலை நிமிரவில்லை. கசப்பையெல்லாம் ஒன்று திரட்டிக் காறித் துப்பிவிட்டு தலையை முடிந்துகொண்டு நடக்கத் தொடங்கினாள்.

மெய்யாலுமே திருமணச் சடங்கு எதுவும் நடக்கவில்லை. வாடகை வீடு தவிர வேறென்ன இருக்கிறது என்று சொல்லியபடி ஊருக்குப் போய் குடும்பத்தை இங்கு அழைத்து வந்துவிட்டான்.

செல்வியின் தம்பியையும் தான் அழைத்து வருவதாகச் சொல்லித்தான் ஊருக்குப் போனான். அங்கு போய் நின்றபிறகுதான் செல்வியின் அக்கா மீண்டும் எதையோ தின்று செத்துப் போனாள் என்பது தெரிந்து தயங்கியபடி துக்கம் விசாரிக்கப் போய் நின்ற தாயையும் மகனையும் தனம் ஏசித் தீர்க்க... பிறகு மனசாலும் நினைக்க முடியுமா...

ஆச்சு... ஏழு வருஷம் முடிஞ்சு ஆறு மாசம். போகக்கூடாது என்று தடுத்த வேலைக்கு அவனே அழைத்துப்போய்ச் சேர்த்து இக்கிமுக்கிதான் குடும்ப வண்டி ஓடுது. கொரோனா வந்திருச்சின்னு எல்லாம் மாசக்கணக்குல பூட்டிக்கிடக்கு. கையில காதுலகூட ஒண்ணுமில்ல..

சர்ரு சர்ருனு ஓடியிட்டுக் கெடக்குற டவுன்பஸ்ஸூ, லாரி, ஆட்டோ..கீட்டோ ஒரு சத்தமும் இல்ல. ஊரே வெறிச்சுனு கெடக்கு என்று புலம்பிக்கொண்டிருக்கும் வெங்கிட்டு அம்மாவையும் சேர்த்து ஆறுபேர் உட்கார்ந்து சாப்பிட முடியுமா...

பட்டறைகள் பூட்டிக் கிடந்தாலும் பக்கத்து ஊர்களின் விவசாய வேலைகள் அவ்வப்போது கஞ்சிக்கு வழி காட்ட செல்வியும் தனத்திடம் கற்ற வித்தைகளை முதலாக்கிக் கொண்டிருந்தாள்...

யாரிடமோ வெங்கிட்டுவின் எண் வாங்கி சில மாதங்களாக தனத்துக்கு உடம்பு சரியில்லை என்ற செய்தியைச் சொல்லிவிட்டாள் இளையவள். அதுதான் பதில் இல்லாத புலம்பலாக இரண்டு நாட்கள் வீட்டைப் பிழிந்துகொண்டிருக்கிறது.

கார் வைக்கவோ பாஸ் வாங்கவோ வழியற்ற செல்விகள் எல்லாத் துயரங்களுக்கும் சேர்த்து நெஞ்சில் அடித்து அழ நல்லவேளை தடையேதுமில்லை... ■


படைப்பு பெருமையுடன் வழங்கும்
குறி
நெடி
ல்
விரைவில் படப்பிடிப்பு